ஏப்ரல் 2015

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/142/News/2015

மாத இதழ்

# சோதிட கேசரி

விலை ரூபா 75/-

மலர்: 8 இதழ்: 1

சித்திரை மாத இதழ்



மதுரை ஸ்ரீ மீனாட்சி திருக்கல்யாணம்

அள்ளித்தரும் அட்சய திருதியை!

மருவூரில் சித்ரா பௌர்ணமி

வாசகர்களின் பேராதரவோடு 8 - ஆம் ஆண்டில்

சோதிட கேசரியின் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!



JEYECHANDRANS

The Art of Fashion

Wellawatte / Pettah

முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

433, காலி வீதி, வெள்ளவத்தை
011 - 4528435, 011 - 4528438
Skype: jeyechandrans888

194, மெயின் வீதி, கொழும்பு - II
011 - 2448870, 011 - 2448860
Skype: jeyechandrans888

Web : www.jeyechandrans.com



குறைந்த விலையில் உங்கள்

சேவைகள் சிறந்திட வேண்டுமா?

ஊங்கள் விளம்பரங்களை இன்றே

சோதிட கேசரியில்

பிரசுரிக்க அழையுங்கள்

DHAYANANDH 077 6066787

மிகவும் பிரபலமான பரம்பரை

மலையாள மாந்திரீகம்



உங்கள் காதலனோ அல்லது காதலியோ விலகிப்போகாமல் என்றைக்கும் உங்களை பிரியாமல் இருக்கவேண்டுமா ? வசியத்தின் மூலம் அதை நிரந்தரமாக இருக்கும்படி செய்து கொடுப்போம் உங்களுடைய எல்லா பிரச்சினைகளையும் தீர்த்து தருவோம்

ஆண் பெண் வசிய மாந்திரீகத்தில் பாரம்பரிய நிபுணத்துவம் கொண்ட மஹா குரு

61 வருட அனுபவம் கொண்ட நம்பக சேவை

24 மணிநேரத்துள் பலன் கிடைக்கும் என்ற உத்தரவாதம்

இரகசியம் பேணப்படும்

- உங்கள் காதலன் அல்லது காதலி உங்களை ஏமாற்றி உங்களை விட்டு விலகிச் சென்றுவிட்டாரா ?
- நீங்கள் ஏமாந்து விட்டீர்களா ? • பிள்ளைகள் உங்களை விட்டு விலகிப்போய் விட்டார்களா ?
- யாரை வேண்டுமானாலும் உங்கள் மேல் பிரியம் உள்ளவராக மாற்றிக்கொடுப்போம். • திருமணம் தள்ளிப் போகிறதா ? • குழந்தை பாக்கியம் இல்லையா ? முடித்துத் தருவோம். • வியாபாரம் விருத்தி பெறும். • வீட்டுக்கு காவல் செய்து தருவோம். • குடும்பம் விருத்தி பெறச் செய்வோம்.
- வெளிநாட்டு வேலை வாய்ப்பு, பரீட்சையில் வெற்றி, விற்க முடியாத காணி விற்பனையாக, சூனியம் வெட்டுதல், நோய் குணமாக என அனைத்து பிரச்சினைகளின் தீர்வுக்காக என்னிடம் நம்பி வாருங்கள்.

வெளிநாடுகளில் வசிப்போருக்கு விசேட காப்பு மந்திரம் அருளப்படும்

ஜீவகாந்தி

257 G , காலி வீதி , வெள்ளவத்தை.(சந்தைகருகில்)
கொழும்பு -06. TEL : 0770416205 / 0766093438
website : www.jeewakanthi.com
Email : jeewakanthi28@gmail.com

சந்திப்பு : திங்கள்,புதன்,சனி
நேரம் : 9.30 - 5.00 வரை
சந்திப்புக்கட்டணம் : 300.00

max adz

சோதிடகேசரி
SOTHIDA KESARI
Astrological Magazine - Tamil
மலர்: 8 | இதழ்: 1



ஓம்
தத்புருசாய வித்மஹே
மஹாசே நாய தீமஹி
தந்நோ ஷண்முக
ப்ரசோதயாத்

# வினைப்பயனின் வேகத்தையும் குறைத்திடும் இறைவனின் இன்னருள்!

"விதி வலியது", "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்றெல்லாம் முன்வினையாகிய ஊழ் வினையின் வல்லமை பற்றி நாம் படித்தும் கேட்டும் இருக்கின்றோம். மனிதராய்ப் பிறந்த யாவரும் முன் வினைப் பயன்களை அனுபவித்தே தீரவேண்டும் என் பதுதான் நியதி. விதி செய்யும் விளையாட்டில் மனி தர்கள் பந்தாடப்படுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். வாழ்வியல் தத்துவங்களை அற்பு தமாய் எடுத்து இயம்பும் அரும்பெரும் தமிழ் காப்பி யங்களான இராமாயணத்திலும், சிலப்பதிகாரத்தி லும் "விதி வலிமை வாய்ந்தது" என்ற கருத்து பல இடங் களில் அதன் பாத்திரங்களாலேயே தெளிவாக் கப்பட் டுள்ளது. "தாம் காடேகியதும், விதி செய்த பிழையே" என்று கூறுகின்றார் ராமன் தன் தமையன் லட்சுமண னிடம்.

வினையின் வேகத்தைக் குறைத்துக் கொள்ளவும், ஊழ்வினையின் தாக்கத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிடவும் இறைவனிடம் முழுமை யாகச் சரணடைவது ஒன்றே மிகச் சிறந்த வழியாகும். மனிதனின் தலையெழுத்தை, விதி என்னும் தேவதை தன் கைகளாலேயே மாற்றியமைக்கும் மாயத்தை இறைவனின் இன்னருள் மட்டுமே செய்திடல் முடி யும் என்பதை உணர்ந்து, "விதிக்கும் விதியாகும்" இறைவனிடம் நம்பிக்கையுடன் நம்மைச் சமர்ப்பிப் போமாக! இம்மாத இதழில் காண்போரைக் களிப்புறச் செய்யும் மதுரை மீனாளின் திருக்கல்யாணம், அள் ளித்தரும் அட்சய திருதியை, மருவூரில் சித்ரா பௌர் ணமி, மனிதனை மாண்புறச் செய்வது மதம், கள்ளச்சி ரிப்பை மெல்ல விரித்த குழந்தை கண்ணன், அன்னம் வழங்கிய அன்னபூரணி, பச்சை வர்ணம் அளித்த பசு மையான வாழ்வு, மருவூரில் பக்தர் பெற்ற அனுபவம், சித்திரை மாதத்துச் சுபதினங்கள் ஆகிய கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் பலவும் சித்திரை மாதத்திற் கான பன்னிரண்டு ராசிகளுக்கான பலன் களும் எமது அன்பு வாசகர்களுக்கு காணிக்கை ஆகின்றன.

நம்முடைய இலங்கைத்தீவில் வசிக்கின்ற இந்து சகோதர சகோதரிகளின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை உத்தேசித்தும், அவர்களின் சமயத் தேடல்களுக்கு பதில் பகரும் வண்ணமாகவும், பிற சமயத்தைச் சார்ந்த அன்புமிகு சகோதரர்கள் இந்து சமயத்தின் சிறப்புகளை அறிந்து கொள்ளவுமென, "சோதிட கேசரி" கடந்த 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உதய மாகியது. ஆலயங்களுக்குச் சென்று அடைகின்ற மன மகிழ்வினை இதுகாறும் சோதிடகேசரி தமது அன்பு வாசகர்களுக்கு வழங்கி வந்துள்ளது என்பது உவ கைக்குரிய விடயமாகும். சோதிடகேசரியின் சிறப் புமிக்க வளர்ச்சிக்கு அன்புகெழுமிய வாசகர்களின் பேராதரவே காரணம் என்பதைப் பணிவுடன் பதிவு செய்து கொண்டு, இனி வரும் காலத்திலும் அதே அன்பையும் ஆதரவையும் எதிர்நோக்குகின்றது சோதிடகேசரி. எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த நல்ல வேளையில், சோதிடகேசரி உங்கள் அனைவருக்கும் தனது தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கின்றது.

ஆசிரியர்


## மன்மத ஆண்டு சித்திரை மாதம் 14.04.2015 முதல் 14.05.2015 வரை

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரியன் செவ்வாய் புதன் | சுக்கிரன் | |
| | ராசி<br>26.4.2015 ரிசப புதன்<br>2.5.2015 ரிசப செவ்வாய்<br>3.5.2015 மிதுன சுக்கிரன் | | ல<br>குரு (வ) |
| சந்திரன் | | | |
| | சனி | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | சூரியன் | ராகு | |
| சுக்கிரன் | அம்சம்<br>27.4.2015 சனி கடகம் (வ) ஆரம்பம்<br>1.5.2015 ராகு மேசம்<br>1.5.2015 கேது துலாம் | | ல<br>புதன் |
| குரு | | | சனி |
| | கேது | | சந்திரன் செவ்வாய் |

Publisher: Express Newspapers (Ceylon) (Pvt) Limited,
185, Grandpass Road, Colombo - 14,
Tel.: + 94 117 322700 (30 Lines) Fax: + 94 112 439987
website: www.virakesari.lk

# விமர்சன... சிற்பிகள்...




சோதிட கேசரி இதழில் தற்போது பிரசுரிக்கப்பட்டு வரும் "பகவத்கீதைத் துளிகள்" பகுதி கிருஷ்ண பக்தர்களை உளம் மகிழச் செய்கின்றது. தொடரட்டும் உங்களின் சேவை!

**ஆர்.கிருஷ்ணராஜ்**
**வெள்ளவத்தை**

சோதிட கேசரி இதழை வழமையாக வாசித்து வரும் வாசகி நான். குடும்பம் அனைத்திற்கும் பக்தியைப் புகட்டுகின்ற அற்புதமான இதழாய் நாங்கள் இதனை மதிக்கின்றோம். நன்றி!

**மு.பவானிசங்கரி**
**திருகோணமலை**

சோதிட கேசரியில் இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் போதி தர்மர் பற்றிய கட்டுரைகள் அறிவுக்கு விருந்தாகும் உன்னதப் படைப்பாய் உள்ளன. தொடர்ந்து வெளியிடுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**எம்.ராஜமனோகரன்,**
**யாழ்ப்பாணம்**

சோதிட கேசரியில் கடந்த பல மாதங்களாக வந்து கொண்டிருக்கும் வெளிநாட்டுக் கோயில்கள் பற்றியதான கட்டுரைகள் சுவாரஸ்யமான நல்ல பல தகவல்களைத் தந்து கொண்டிருக்கின்றன. இப்பகுதியை நிறுத்திவிடாமல் தொடர்ந்து பிரசுரம் செய்யுமாறு வேண்டுகிறேன்.

**வி.ஆர்.மஞ்சுபாஷினி**
**தெஹிவளை**

சோதிட கேசரி ஆன்மீக மாத சஞ்சிகையில் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு வரும் தசாவதாரக் கட்டுரைகள், உண்மையிலேயே பக்திரசம் சொட்டுபவையாக உள்ளன. எமது உளம் நிறைந்த பாராட்டுக்கள்!

**மா.செங்குட்டுவன்**
**கொழும்பு**

சோதிட கேசரி இதழில் பிரசுரிக்கப்பட்டு வரும் விக்கிரமாதித்தன் கதைகளைஎம்முடைய வீட்டில்குழந்தைகள் எல்லோரும் மிகவும் விரும்பிப் படிக்கின்றார்கள். நன்றி.

**மு.மீனலோசினி**
**நீர்கொழும்பு**



# என்னிடம் மாறாத பக்தி கொள்பவன்

## எனக்கு மிகவும் பிரியமானவன்

**கண்ணன்:** அர்ஜுனா அனைத்து உயிர்கள் மேலும் அன்பும் கருணையும் கொண்டவனாய், இன்ப துன்ப விருந்தை ஒன்று போல் உண்டவனாய், அகந்தையும் மமதையும் ஓடிடக் கண்டவனாய், அடக்கத்துடனும் அசையாத உறுதியுடனும், பொறுமையுடனும் பொங்கும் மகிழ்ச்சியுடனும், புத்தியை என்மேல் நாட்டிய பக்தியுடனும் இருப்பவன். எனக்கு இனித்துக் கிடப்பவன்! தான் இடர்ப்பட்டாலும் தாங்கும் உலகுக்கு இடர் உண்டாக்காமல்... களிப்பு, கலக்கம், அச்சம், கோபம் இவைகளிலிருந்து விடுபட்டவன் எனது மனதிற்குகந்தவன்! ஆசைகளற்றவன், கவலைகள் விட்டவன், திறமைகள் மிக்கவன் தூய்மையில் சிறந்தவன், கருமம் துறந்தவன் நடுநிலைப்பட்டவன், நல்லது கெட்டதை நாடாது விட்டவன் எனது நட்பிற்குரியவன். சுகமும் துக்கமும்.. நடமும் பகையும்.. குளிரும் வெப்பமும்.. மகிழ்ச்சியும் இகழ்ச்சியும்... மானமும் ஈனமும் எல்லாம் சமம் எனும் தெளிவு பெற்றவனாய், இருப்பதைக் கொண்டே திருப்தி கொள்பவனாய், தனக்கென இல்லம் தயார் செய்யாதவனாய், என்னிடம் மாறாத பக்தி செலுத்துபவன் எனக்கு பிரியமானவன்! அமிர்தம் போன்ற இவ்வற்புத தர்மத்தை, நான் சொன்னபடியே அக்கறையுடன் பின்பற்றி என்னை வணங்கும் பக்தர்கள் அனைவருமே எனக்கு மிக மிகப் பிரியமானவர்கள்!

சா. செய்யப்பன்

## அள்ளித் தரும்

# அட்சய திருதி!



எடுக்க எடுக்கக் குறையாத ஒன்றை அட்சயம் என்கிறோம். "அட்சயம்" என்றால் குறையாமல் வளர்ந்து கொண்டேயிருப்பது என்னும் அர்த்தத்தை தருவதாகும். அழிவின்றி வளர்வது, பூரணமானது, குறையாதது, அழியாத பலன்களை அள்ளித் தருவது போன்ற பொருள்களும் இந்த வார்த்தைக்கு இருக் கின்றன.

சித்திரை மாதம் அமாவாசையை அடுத்து வருகின்ற மூன்றாம் பிறை நாளான திருதியை தினத்தில் தான் கிருதயுகத்தை பிரம்ம தேவன் படைத்ததாக பவிஷ்ய புராணம் தெரிவிக்கின்றது. ஒரு யுகம் முடிந்து மறுயுகம் தொடங்குகின்ற போது அந்த நாளை "யுகாதி" என்பர். அப்படி பார்க்கும் போது அட்சய திருதியை தினமும் ஒரு காதி தான்.

மாலோடு திரு சேர்ந்து மகாவிஷ்ணு திருமாலான தினம் என்பதால், திருதியை திதி பொதுவாகவே மிகுந்த லட்சுமி கடாட்சம் நிறைந்ததாக கருதப் படுகின்றது. எனவே, தான் அன்று பொன்னும் பொருளும் சேர்த்தால் எந்தவித குறைபாடும் இன்றி அந்த ஆண்டு முழுவதும் இல்லத்தில் எல்லா வளமும் கொழிக்கும் என்பது ஐதீகம்.

சித்திரை, மாதம் சுக்லபட்ச திருதியையை நாம் அட்சய திரிதியை நாளாக கொண்டாடுகின்றோம். அட்சய திரிதியை அன்று நம் இல்லங்களில் செய்கின்ற பூஜைகளை தவிர, அன்றைய தினத்தில் நாம் செய்யக்கூடிய புண்ணிய காரியங்கள் யாவும் நம்முடைய எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கத்தக்க புண்ணிய பலன்களை அளிக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.


அத்துடன், அன்றைய தினம் பித்ருக்களுக்கான தர்ப்பணம் செய்தால் முன்னோர்களின் ஆசியை பெற்று வறுமைகள் ஏதுமின்றி வளமான வாழ்வினை பெற்றிடலாம். இந்த பொன்னான தினத்தில் பொன்னும் மணியும் மற்றும் பலவும் வாங்கி குவிப்பதே குறி என்று இராமல், நம்மிடம் இருப்பதில் கொஞ்சத்தை எளியோருக்கு தானமாய் அளித்தால் லட்சுமி நாராயணனின் ஆசியையும் அவரது பரிபூரண அருளையும் அட்சயமாய் பெறலாம் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

திருமகளின் எட்டு அவதாரங்களும் அஷ்ட லட்சுமி எனப் போற்றப்படுகின்றது. இவற்றில் ஐஸ்வர்ய லட்சுமி மற்றும் தானிய லட்சுமி தோன்றியது இந்த அட்சய திருநாளில் தான் எனப் புராணங்கள் தெரிவிக்கின்றன.

பரந்தமானின் தசாவதாரங்களில் ஒன்றான பரசுராம அவதாரம் நிகழ்ந்ததும் இத்தினத்தில் தான். அமுதம் கடைந்தெடுக்கும் நோக்கத்தோடு பாற்கடல் கடையப்பட்ட போது, "அகலுமில்லேன்" என கூறி பாற்கடலில் அவதரித்த மலைமகள் திருமாலின் மார்பில் நிலையான இடம் பிடித்ததும் இந்த அட்சய திருதியை நாளில் தான். பஞ்சபாண்டவர்கள் வனவாசத்தின் போது, கடும் தவம் செய்த தர்மரின் முன்னால் காட்சி தந்த சூரிய பகவான் "அன்னவளம் குன்றாத அட்சய பாத்திரத்தை" தருமருக்கு அளித்ததும் இதே நாளில் தான். இருந்த இடத்திலிருந்தே சொல்லப் பட்ட கண்ணனின் அட்சயம் என்ற ஒரே சொல்லால், ஏழ்மைக்கு எடுத்துக்காட்டாய் இருந்து வந்த குசேலருக்கு குபேர வாழ்வு கிட்டியதும் இந்த திருதியையில் தான்.


இத்தகைய பெருமைகள் மிக்க அட்சய திருதியை தினத்தன்று அதிகாலையிலே எழுந்து நீராடி விட்டு பூஜை அறையில் கோலமிட்டு, மகாலட்சுமியும், மகா விஷ்ணுவும் சேர்ந்திருக்கும் சிற்பத்தையோ படத்தையோ வைத்து, விளக்கேற்றி பக்தியோடு பூஜை செய்து தூப தீபம் காட்டி காய்ச்சிய பால், பழம் நிவேதனம் செய்து வழிபட்டால் வற்றாத செல்வங்கள் என்றென்றும் நிலைத்திடும் என்பது திண்ணம்.

S.ஆகாஷ்



## மதுரை மீனாட்சி அம்மன்

# 108 போற்றிகள்



ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அருமறையின் வரம்பே போற்றி
ஓம் அறம்வளர்க்கும் அம்மையே போற்றி
ஓம் அரசிளங் குமரியே போற்றி
ஓம் அப்பர் பிணிமருந்தே போற்றி
ஓம் அமுத நாயகியே போற்றி
ஓம் அருந்தவ நாயகியே போற்றி
ஓம் அருள் நிறை அம்மையே போற்றி
ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி
ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் அநந்த வல்லியே போற்றி
ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
ஓம் இமயத் தரசியே போற்றி
ஓம் இடபத்தோன் துணையே போற்றி
ஓம் ஈசுவரியே போற்றி
ஓம் உயிர் ஓவியமே போற்றி
ஓம் உலகம்மையே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எண் திசையும் வென்றோய் போற்றி
ஓம் ஏகன் துணையே போற்றி
ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஐயந் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஒப்பில்லா அமுதே போற்றி
ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
ஓம் கற்றோர்க் கினியோய் போற்றி
ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
ஓம் கடம்பவன் சுந்தரியே போற்றி
ஓம் கலியாண சுந்தரியே போற்றி
ஓம் கனகமணிக் குன்றே போற்றி
ஓம் கற்பின் அரசியே போற்றி
ஓம் கருணையூற்றே போற்றி
ஓம் கல்விக்கு வித்தே போற்றி
ஓம் கனகாம்பிகையே போற்றி
ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
ஓம் காட்சிக் கினியோய் போற்றி
ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
ஓம் கூடற்கலாப மயிலே போற்றி
ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி
ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
ஓம் சக்தி வடிவே போற்றி
ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
ஓம் சித்தந் தெளிவிப்பாய் போற்றி
ஓம் சிவயோக நாயகியே போற்றி
ஓம் சிவானந்த வல்லியே போற்றி
ஓம் சிங்கார வல்லியே போற்றி
ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
ஓம் செல்வத்துக் கரசியே போற்றி
ஓம் சேனைத் தலைவியே போற்றி
ஓம் சொக்கர் நாயகியே போற்றி
ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி
ஓம் ஞானாம்பிகையே போற்றி
ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி
ஓம் தமிழர்குலச் சுடரே போற்றி
ஓம் தண்டமிழ்த தாயே போற்றி
ஓம் திருவுடை யம்மையே போற்றி
ஓம் திசையெல்லாம் புரந்தாய் போற்றி
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் திருநிலை நாயகியே போற்றி
ஓம் தீந்தமிழ்ச சுவையே போற்றி
ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
ஓம் தென்னவன் செல்வியே போற்றி
ஓம் தேன்மொழி யம்மையே போற்றி
ஓம் தையல் நாயகியே போற்றி
ஓம் நற்கனியின் சுவையே போற்றி
ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
ஓம் நல்ல நாயகியே போற்றி
ஓம் நீலாம் பிகையே போற்றி
ஓம் நீதிக்கரசியே போற்றி
ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
ஓம் பழமறையின் குருந்தே போற்றி
ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
ஓம் பசுபதி நாயகியே போற்றி
ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
ஓம் பாண்டியரின் தேவியே போற்றி
ஓம் பார்வதி அம்மையே போற்றி
ஓம் பிறவிப்பிணியே போற்றி
ஓம் பெரிய நாயகியே போற்றி
ஓம் பொன்மயி லம்மையே போற்றி
ஓம் பொற்கொடி அன்னையே போற்றி
ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
ஓம் மங்கல நாயகியே போற்றி
ஓம் மழலைக் கிளியே போற்றி
ஓம் மனோன்மணித் தாயே போற்றி
ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி
ஓம் மாணிக்க வல்லியே போற்றி
ஓம் மீனவர்க்கோன் மகனே போற்றி
ஓம் மீனாட்சி யம்மையே போற்றி
ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி
ஓம் யாழ்மொழி யம்மையே போற்றி
ஓம் வடிவழ கம்மையே போற்றி
ஓம் வேலனுக்கு வேல்ஈந்தோய் போற்றி
ஓம் வேத நாயகியே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்போய் போற்றி
ஓம்அம்மையே அம்பிகையே போற்றி போற்றி
ஓம்அங்கயற்கண் அம்மையே போற்றி போற்றி

# மன்மத ஆண்டு சித்திரை மாதம்

## 14.04.2015 முதல் 14.05.2015 வரை




மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

**பண்புடன் மற்றவர்களிடம் நடந்து கொள்ளும் மேசராசி வாசகர்களே! இம் மாதம் உங்களின் ராசிக்கு தொழில் ஸ்தானத்தில் சந்திரன் அமர்ந்து குரு பார்வை பெறுவதால், தொழிலில் நல்ல முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சி யும் பெறுவீர்கள்.**

**பணியாளர்களுக்கு**

பணியில் சிலருக்கு கூடுதல் பணிபு ரியும் வாய்ப்புகள் இருந்தாலும் அமைதியும், கோபமும் நீங்கி நன்மை பெறுவீர்கள். கருத் துள்ள விடயங்களை பற்றி மற்றவரிடம் செல் வீர்கள். கஷ்டங்கள் நீங்கி பொருளாதார வளர்ச்சியை பெறுவீர்கள். அதிகம் பேசுவதை குறைத்து கொள்ளுவது நல்லது.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது வாழ்வில் தன்னை அண்டி வருப வர்களுக்கு உதவி செய்யும் மனப் பக்குவம் கொண்ட நீங்கள் தன்னைச் சார்ந்தவர்களின் நன்மையை பற்றி சிந்தித்து வருவீர்கள். உங்க ளிடம் இருப்பதை அவர்களுக்கு தந்து மனம கிழ்ச்சி கொள்வீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானாதிபதி சனி அட்டம ஸ்தானத்தில் அமர்ந்து உங்களின் தொழிலில் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் தருவார். கறுப்பு நிற பொருட்களுக்கு கூடுதல் ஆதாயம் கிட்டும். வருமானத்திற்கு தகுந்த செலவுகள் உண்டாகும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் நன்மையை அடையும் நிலை இருந்தாலும் பல இடையூறுகளுக்கு பின்னே முன்னேற்றம் அடைவீர்கள். பொரு ளாதாரத்தில் மனம் போல் பணம் வந்தாலும் அனுபவிக்க முடியாமல் போகும்.

**பெண்களுக்கு**

பெண்களின் எதிர்கால நலன் கருதி பலவி தமான தொழில்களில் ஈடுபாடு கொள்வீர்கள். ஏதாவது ஒரு வழியில் முன்னேற்றம் பெறலாம் என்று நம்பிக்கையை கடைசி வரை விடாமல் இருப்பீர்கள்.

**மாணவர்களுக்கு**

மனதில் திடமான நம்பிக்கையை வைத்து படிப்பில் கவனம் செலுத்துவீர்கள். பொரு ளாதார பாடத்தில் கல்வி முன்னேற்றம் தரும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

05.05.2015 செவ்வாய் அதிகாலை 05.45 முதல் 07.05.2015 வியாழன் பகல் 12.42 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

உயர்ந்த பண்புகளை கொண்டு விளங் குவீர்கள். குல தெய்வ வழிபாடு செய்து வர வளர்ச்சியை பெறுவீர்கள். பணவரவு நன்றாக இருக்கும்.

**பரணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

சொந்த உறவுகள் இணைந்து நன்மை பெறுவீர்கள். பகை தீரும். மனதில் உள்ளதை சொல்லும் தரமான நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**கார்த்திகை 1ஆம் பாதம்**

அரசாங்க காரியங்களில் அனுகூலம் கிடைக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டாகும். பொருளாதாரம் வளர்ச்சியை தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, வெண்மை, சிவப்பு

**அதிர்ஷ்ட திசைகள்:** கிழக்கு, தென்மேற்கு, வடக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** புதன், வியாழன், வெள்ளி

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

சனிக்கிழமை காலை 9 10.30க்குள் விநாயகரை வணங்கி பைரவருக்கு சிவப்பு மலரால் மாலை போட்டு நெய் விளக்கு போட்டு வர, முடியாமல் போன காரியம் சீக்கிரம் நடக்கும்.



# மன்மத வருடம்

சுபமூர்த்த நாட்கள்

## சித்திரை மாதம்

திருமணம், வாசல் கல் வைக்க, கடன் வாங்க,
வாகனம் வாங்க, தொழில் துவங்க,
மாங்கல்யம் செய்ய, கிரக பிரவேசம்

| மாதம் | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | காலை | லக்னம் | லக்னம் |
|---|---|---|---|---|---|---|---|
| 15.04.2015 | புதன் | ஏகாதசி | சதயம் | சித்த | 06.00–07.30 | மேசம் | தேய் |
| 22.04.2015 | புதன் | சதுர்த்தி | ரோஹிணி | சித்த | 06.00–07.00 | மேசம் | வளர் |
| 01.05.2015 | வெள்ளி | திரயோசி | ஹஸ்தம் | அமிர்த | 07.25–08.25 | ரிசபம் | வளர் |
| 06.05.2015 | புதன் | துவதியை | அனுசம் | சித்த | 06.25–07.25 | ரிசபம் | தேய் |
| 08.05.2015 | வெள்ளி | சதுர்த்தி | மூலம் | அமிர்த | 08.25–09.25 | மிதுனம் | தேய் |
| 10.05.2015 | ஞாயிறு | சப்தமி | உத்திரட்டாதி | அமிர்த | 07.00–08.00 | ரிசபம் | தேய் |

### கடன் தீர்க்க

| | | |
|---|---|---|
| 15.04.2015 | வெள்ளி பகல் | 12.00–01.30 |
| 22.04.2015 | புதன் | 01.30–03.00 |
| 25.04.2015 | சனி | 12.00–01.00 |
| 27.04.2015 | திங்கள் | 12.00–02.00 |
| 28.04.2015 | செவ்வாய் | 12.00–01.00 |
| 08.05.2015 | வெள்ளி | 12.00–01.00 |
| 09.05.2015 | சனி | 11.00–02.00 |

### சாந்தி முகூர்த்தம்

| | | |
|---|---|---|
| 15.04.2015 | இரவு | 09.00–10.00 |
| 22.04.2015 | இரவு | 09.00–10.00 |
| 24.04.2015 | இரவு | 12.00–01.00 |
| 01.05.2015 | இரவு | 12.00–01.00 |
| 07.05.2015 | இரவு | 12.00–01.00 |
| 10.05.2015 | இரவு | 11.00–12.00 |

### கிரகப்பிரவேசம் செய்ய

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17.04.2015 | வெள்ளி | திரயோதசி | உத்திரட்டாதி | சித்த | 04.00–05.00 | மீனம் | தேய் |
| 22.04.2015 | புதன் | சதுர்த்தி | ரோஹிணி | அமிர்த | 04.00–05.00 | மீனம் | வளர் |
| 01.05.2015 | வெள்ளி | திரயோதசி | ஹஸ்தம் | அமிர்த | 04.00–05.00 | மீனம் | வளர் |



கணிப்பு: சோதிடர்
வாடிப்பட்டி
R.ஆனந்தன்

### சத்திர சிகிச்சை செய்து குழந்தை பிரசவிக்க:

| தேதி | கிழமை | நட்சத்திரம் | நேரம்/பகல் | லக்னம் |
|---|---|---|---|---|
| 14.04.2015 | செவ்வாய் | அவிட்டம் | 10.30–12.00 | மிதுனம் |
| 15.04.2015 | புதன் | சதயம் | 10.30–11.30 | மிதுனம் |
| 16.04.2015 | வியாழன் | பூரட்டாதி | 10.00–11.30 | மிதுனம் |
| 17.04.2015 | வெள்ளி | உத்திரட்டாதி | 10.00–10.30 | மிதுனம் |
| 20.04.2015 | திங்கள் | பரணி | 10.00–10.30 | மிதுனம் |
| 21.04.2015 | செவ்வாய் | ரோகிணி | 12.00–01.00 | கடகம் |
| 22.04.2015 | புதன் | ரோகிண | 10.00–11.00 | மிதுனம் |
| 24.04.2015 | வெள்ளி | திருவாதிரை | 09.45–10.30 | மிதுனம் |
| 25.04.2015 | சனி | புனர்பூசம் | 10.30–11.15 | மிதுனம் |
| 28.04.2015 | செவ்வாய் | மகம் | 12.00–01.00 | கடகம் |
| 29.04.2015 | புதன் | பூரம் | 10.00–11.00 | மிதுனம் |
| 01.05.2015 | வெள்ளி | ஹஸ்தம் | 12.00–01.00 | கடகம் |
| 03.05.2015 | ஞாயிறு | சுவாதி | 09.00–10.00 | மிதுனம் |
| 06.05.2015 | புதன் | அனுசம் | 09.00–10.00 | மிதுனம் |
| 09.05.2015 | சனி | பூராடம் | 11.00–12.00 | கடகம் |
| 10.05.2015 | ஞாயிறு | உத்திராடம் | 09.00–10.00 | மிதுனம் |
| 13.05.2015 | புதன் | பூரட்டாதி | 09.00–10.00 | மிதுனம் |
| 14.05.2015 | வியாழன் | உத்திரட்டாதி | 09.00–10.00 | மிதுனம் |

## எங்கும் மங்களம் பொங்கிடச் செய்யும்

# "சித்திரைத் தாய்"!



சூரியன் பூமத்திய ரேகையில் நேராகப் பிரகாசிக்கின்ற மாதத்தை, முதற்புள்ளியாய், ஆண்டின் தொடக்கமாகக் கொள்கின்றனர். பன்னிரண்டு ராசிகளால் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்ட ஆண்டில், நம்மீது சூரியன் நேராகப் பிரகாசிக்கும்போது மேஷராசியில் இருக்கின்றார். இதனால் மேஷம் முதல் ராசியானது. இவ்வாறு நேராகப் பிரகாசிக்கின்ற மாதம் சித்திரை என்பதால், சித்திரை மாதம் முதல் மாதமானது.


சித்திரை மாதத்தின் பிறப்பினை ஒட்டியே மற்ற பகுதிகளில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் அமையப் பெறுகின்றன. சித்திரை வருடப்பிறப்பை இந்தியாவின் வடபாகங்களில் 'பைசாகி' என்றும், கேரளாவில் 'விஷு' என்றும் ஆந்திர மாநிலத்தில் யுகாதி என்றும் கொண்டாடுவர்.

சூரியனை ஒளிக்கடவுளாக வழிபடுகின்ற தமிழ் மக்கள், பண்டைக் காலம் தொட்டு தமிழ் மாதங்களை பெண்களாய் தாயாய் உருவகித்துப் போற்றினர். பன்னிரு தமிழ் மாதங்களில் முதலாமவள் என்ற பெருமையைப் பெற்றவள் சித்திரைத் தாய்.

பல சிறப்புக்களைப் பெற்றுள்ள சித்திரை மாதத்தை "வசந்தகாலம்" என்று கூறுகின்றார்கள். மேலும் மங்களம் பொங்குகின்ற இச்சித்திரை மாதத்தினை 'சைத்ரா' எனவும் 'சைத்ர விஷு' என்றும் போற்றுகின்றார்கள்.

சித்திரை மாதத்தில், சித்திரை நட்சத்திரத்தன்று எங்கும் நிறை இறைவனாகிய சிவபெருமான் தங்கப் பலகையில் சித்திரம் ஒன்றினை வரைந்ததாகவும், அதிலிருந்தே பிறவிகளின் கணக்குகளை ஏட்டிலே வைக்கின்ற சித்ரகுப்தன் தோன்றியதாகவும் சொல்லப்படுகின்றது.

அதுமட்டுமின்றி, சித்திரை மாத திருதியை திதியில் தான் மகாவிஷ்ணு மச்சாவதாரம் எடுத்ததாக இதிகாசங்கள் தெரிவிக்கின்றன. சித்திரை மாத சுக்கிலபட்ச அஷ்டமி திதியில் லோகமா



தாவான ஆதிபராசக்தி அவதரித்த தாக தேவிபாகவதம் செப்புகின்றது. அம்மன் ஆலயங்களில் இம்மாதத் தில்தான் பால்குடங்கள் எடுப்பது, விரதக் கஞ்சி காய்ச்சி அம்மனுக்குச் சமர்ப்பித்து பக்தர்களுக்கு அளிப் பது, பூக்குழிகள் என்று சொல்லப்படு கின்ற குண்டம் இறங்குவது, திருவி ளக்குப் பூஜைகள் செய்வது ஆகிய தெய்வ கைங்கரியங்கள் அனைத்தும் சிறப்பாகச் செய்யப்படுகின்றன.

பொதுவாக சித்திரைத் தாய் செல்வச் செழிப்பை தந்திடுவாள் என்பது தமிழர்களின் மிகப்பழைமை யான நம்பிக்கை.

சித்திரை மாதத்தின் அதிகாலைப் பொழுது புலருவதற்கு முதல் இரவு வீட்டில் நிலைக்கண்ணாடி முன்பாக தட்டில் பல வகையான பழங்கள், பணம் காசுகள், தங்க ஆபரணங்கள் முதலியவற்றை அவரவர் தகுதிக் கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் வைத்து விட்டு உறங்கச் சென்று விடு வார்கள்.

மறுநாள் காலையில் தூங்கி எழுந்தவுடன் அந்தத்தட்டில் எதிரேயுள்ள கண்ணாடியில் கண் விழிப்பார்கள். இது தொன்று தொட்டு கடைப்பி டிக்கப்பட்டு வரும் ஒரு பழக்கமாகும். இவ்வாறு செய்வதன் மூலமாக ஆண்டு முழுவதும் செல்வச் செழிப்புடன் வாழலாம் என்று நம்பிக்கை.

சித்திரை மாதத்தில் வருகின்ற மற்றுமொரு சிறப்பு வாய்ந்த நாள் 'அட்சய திருதியை'. அட்சயம் என்று சொல்லுக்கு பல்கிப் பெருகுதல் என்று பொருள்படுகின்றது. இந்த நல்ல நாளில் செய் யப்படுகின்ற எந்த ஒரு காரியமும் மங்களகரமா கவும் வெற்றிகரமாகவும் நடைபெறும் என்பது வேதவாக்கு. அட்சய திருதியை நாளன்று ஆப ரணங்கள் வாங்கினால் குடும்பத்தில் செல்வ செழிப்பு ஏற்படும் என்று நம்பப்படுகின்றது. அட்சய திருதியை நாளில் பலர் புதுக்கணக்குக ளையும், புதிய வியாபாரங்களையும் சுபிட்சத்தை எதிர்நோக்கி ஆரம்பிக்கின்றார்கள்.

அட்சய திருதியை தினத்தின் சிறப்புக்கள் பற்றி புராண இதிசாகங்களிலும் விரிவாகச் சொல லப்பட்டுள்ளது. இந்துக்களால் பெரிதும் போற்றப் படுகின்ற மங்கள வைபவமான மீனாட்சி திருக் கல்யாணம் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் வருகின்ற மிகுந்த புண்ணிய தினமான சித்ரா பௌர்ணமி யன்றே வெகுவிமரிசையாக நடைபெறுகின்றது. மதுரை வைகையாற்றில் கள்ளழகர் இறங்கும் விழாவும், விழுப்புரத்தில் நடைபெறும் கூத்தாண் டவர் திருவிழாவும் சித்ரா பௌர்ணமி தினத் தில்தான் கொண்டாடப்படுகின்றன.

தேவர்களின் தலைவனான தேவேந்திரனும் சிவபெருமானை சித்திரா பௌர்ணமியன்றே வழி பாடுகள் செய்து பேறுகள் பல பெற்றான் என புராண வரலாறுகள் தெரிவிக்கின்றன. திருமாலின் அவதாரமான பரசுராமர், ஜகத் குரு ஆதிசங்கரர் மற்றும் ஸ்ரீ ராமானுஜர் ஆகியோர் அவதரித்ததும் சித்ரா பௌர்ணமியில் என்பது சிறப்பாகும். இத் துணை பெருமைகள் பொருந்திய சித்திரையின் பௌர்ணமி தினத்தில், நினைத்தாலே புண்ணியம் தருகின்ற திருவண்ணாமலையில் அண்ணாமலை யாரையும் ஆபீதகுஜாம்பிகையையும் மனதில் நிறுத்தி கிரிவலம் வருவது வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் தரவல்லதாகும்.

ஏனென்றால் இந்த நல்ல நாளில் திருவண்ணா மலையில் கிரிவலம் செல்லும்போது, ஈசனை வழிபட வருகின்ற தேவர்களின் அருளாசியும், இத்தினத்தில் இன்று கூடுகின்ற சித்தர் பெருமான்களின் பேரருளும் பக்தர்களுக்குத் தவறாது கிட்டும் என்பதே. எண்ணற்ற சிறப்புக் களை தன்னோடு கொண்டு வரும் சித்திரைத் தாயை நாமும் மகிழ்வோடு வணங்கி வரவேற்று நலம் பல பெற்று வாழ்வோமாக!

உத்துக்கடை ராமன்

# விடயங்களை கிரகிக்க

# தாங்கும் சக்தி அவசியம்



நமக்கு ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம் என இரண்டு வகை சரீரங்கள் இருக்கின்றன. நமது உடம்புத ஈன் ஸ்தூல சரீரம். இது சதைப் பிண்டங்களால் ஆனது. இது அழியக்கூடியது ஆகும்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து இந்திரியங்களான "பஞ்சேந்திரியங்கள்" மூலமாக உலகில் நடைபெறும் சகலத்தையும் அறியும் சக்தி உடையது சூட்சும சரீரம்.

சூட்சும சரீரமே சுய ஆதிக்கம் உள்ளது. தானாக இயங்கக் கூடியது. தன்னை அறிந்தது. தெய்வீக சக்தியாக அமைந்துள்ளது. இதையே உள்மனம் என்றும், ஜீவ சக்தி என்றும் சொல்லலாம். சூக்கும மாக நமது சரீரம் முழுவதும் வியாபித்தும், நமது சரீரத்தை இயக்கியும் பஞ்ச இந்திரியங்கள் மூல மாகச் செயல்படுவது இந்த சூட்சும சரீரத்தின் சக்தியே ஆகும்.

ஆகவே, நமது சூட்சும சரீரத்தை சிறிது துஸண்டி விடுவோ மேயானால் ஸ்தூல தேக சம்பந்தமான இச்சை, ஆசாபாசங்கள், காமக்குரோத லோபம், மாச்சரியம் முதலான பல குணங்களை அடக்கி ஆளும் தன்மை உடையதாக ஆக்கலாம். இதைப் பற்றி பின்னால் விரிவாக சொல்லப்படும்.

இப்போது தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால் தாங்கும் சக்தியான நெகடிவ் சக்தியை (Negative Force) அப்பியாசம் செய்து வருவதினால் என்ன என்ன பயன்கள் ஏற்படும் என்பது தான்.

நமது சரீரத்தின் அங்க அமைப்புக்களைப் பற்றி முன்னமே விவரித்துள்ளது. அதன் மூலம் எப்படி நாம் சுவாசத்தின் மூலமாக பிராண சக்தியைப் பெறுகின்றோம் என்று தெரிந்து கொண்டிருக்கக் கூடும். அது போலவே நமது சூட்சும சரீரமும், நரம்பு மண்டலம் மூலமாக ஜீவ சக்தியை உள்ளே இழுத்து வாங்கக் கூடிய நன்மை உடையது.

ஆகவே மனோ சக்தியானது மிக நுட்பமான மனதின் வலிமையால் இழுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்த ஜீவ சக்தி அல்லது மான சக்தியை கிரகிக்கும் பொருட்டு தாங்கும் நிலையை அப்பியாசம் செய்ய வேண்டும்.

இது மிக அவசியமானதும் கூட. மேலும் நீங்கள் எந்த நேரத்தில் எந்தவித எண்ணங்களை, காரியங்களை கிரகிக்க விரும்புகிறீர்களோ அதற்காக உங்கள் இஷ்டப்படி இவைகளை கிரகித்துக் கொள்ள தாங்கும் சக்தி மிக அவசியமாகிறது.

அமைதி நிலையைப் பற்றிப் படித்துத் தெரிந்த பின் தாங்கும் சக்தியை அடைய வேண்டியது அவசியமாகிறது.

ஏனென்றால் நம்மிடத்தில் உள்ள சக்திகளையே நாம் மற்றவர்களுக்கும் கொடுக்கவும், அல்லது பிரயோகிக்கவும் கூடும்.

ஆதலால், நம்மிடத்தில் உள்ள எந்தச் சக்தியையும் சேமிப்பில் இல்லாமல் சூன்யமாக வைத்திருந்தால் எப்படி நாம் மற்றவர்களுக்குப் பிரயோகிக்க முடியும்?

இடம் வேண்டும். பொருள் வேண்டும். ஏவல் வேண்டும். இல்லாவிட்டால் சும்மா இருக்க வேண்டும் என்ற பழமொழிக்கு இணங்க, ஜீவ சக்திகளைத் தங்களிடம் சேமித்து வைத்துக் கொள்ளத் திறமையற்றவர்கள் அவற்றை எப்படி உபயோகித்துக் கொள்ள முடியும்? முடியவே முடியாது.

தாங்கும் சக்தி அதிகமாக உள்ளவர்களை சந்தர்ப்பம் கிடைக்கும் போது கவனித்துப் பார்க்க வேண்டும். மெஸ்மரிசம் செய்பவர்கள், மகான்கள், யோகிகள் ஆகியவர்களின் செயல்களைக் கூர்ந்த கவனித்துப் பார்த்தால் எல்லாமே தெரிய வரும்.

இவர்களைக் கவனித்து வருவதாலும், பார்ப்பதாலும் நீங்கள் எப்படிக் கற்றுக் கொள்ள முடியும்? இவர்கள் ஏதோ வரம் அல்லது அருள் பெற்று எளிதில் எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய மாதிரி வெகு சாந்தத்துடனும், அமைதியாகவும் இருப்பார்கள்.

இவ்விதமான தாங்கும் சக்தியை அப்யசிக்க வேண்டும் என்று சொன்னால் நீங்களும் வெகு அமைதியாக இருந்து எந்தவிதமான எண்ணங்களும், செயல்களும் உங்கள் மனதிற்குள் செல்

வதற்காகக் காத்திருக்க வேண்டும் என்பது அல்ல. ஆனால், நீங்கள் உங்கள் மனதையும், சித்தத்தையும் சுத்தமாக்கி. சுகபோக பாக்கியங் களை அடைவதற்கு ஏதுவான சக்திகளைக் கிரகிக்கவும், அதே சக்தியை மற்றவர்கள் நன்மைக்காகவும், உங்கள் நன்மைக்காகவும் நீங்கள் உபயோகிக்கத் தக்கதான ஜீவகாந்த சக் திகளை அண்ட சராசரங்களில், பிரபஞ்சத்தில், ஆகாயத்தில் இருந்து கிரகித்துக் கொள்ளும் பொருட்டே நீங்கள் இந்த அப்பியாசத்தைப் பழகுவதற்கு அமைதியான வகையில் முயற் சிக்க வேண்டும்.



அதன் பின் நீங்கள் எதை வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதற்குத் தகுந்த எண்ணங் களை உங்கள் மனதில் நீங்கள் எண்ணி அந்த எண்ணங்களை செயல்பட வைக்க வேண்டும்.

அந்த எண்ணங்களை உங்கள் மனதுக்குள் நீங்கள் சொல்லும் பொழுது உங்கள் நாசி யினால் மூச்சை மெதுவாக உள்ளே இழுத்து சுவாசிக்க வேண்டும். அதே சமயத்தில் உங்க ளுக்கு விருப்பமில்லாத வேறு எண்ணங்களை ஒதுக்கிவிட வேண்டும் அல்லது அவற்றை வரா மலே களைய வேண்டும்.

நீங்கள் இவ்வளவு தூரம் பயிற்சிகளைச் செய்து பழகிவிட்டீர்களானால் இதுவே தாங்கும் சக்தியை கிரகிக்க, அடையச் செய்யும் முதல் முயற் சியும், அப்பியாசமும் ஆகும். இனிமேல் உங்கள் மனதுக்குள் பற்பல விதமான எண்ணங்கள் உதிப் பதை உணரக்கூடும். அவைகளில் உங்களுக்குத் தேவையில்லாதவைகளை ஒதுக்கிவிட வேண்டும்.




**வழக்குகளில் வெற்றி பெற**

மேதாத கீர்த்தித ஸோக ஹாரீ
தௌர்பாக்யநாஸந
ப்ரதிவாதி முகஸ்தம்ப
துஷ்டசித்த ப்ரஸாதந
இதைக் கூறினால் வழக்குகளில்
நமக்கு வெற்றி உண்டாகும்.

இவ்விதமாக உங்களது எண்ணங்களை சீராக்கி ஒழுங்குபடுத்தி அவற்றில் உங்கள் விருப்பத்துக்கு அனுகூலமானவைகளை மட்டும் ஏற்றுக் கொண்டு வேண்டாதவைகளை நீக்கி விடுவது என்பது எளி தான செயல் அல்ல.

இந்தச் செயல் ஆரம்பத்தில் மிகக் கஷ்டமாகத் தோன்றினாலும் நாளடைவில் தினசரி பயிற்சியின் மூலமாக எல்லாவற்றையும் சுலபமாக ஆக்கிக் கொள்ள முடியும். மேலும் அனாவசியமானதும் தேவையற்றதுமான எண்ணங்களை அகற்ற அப்பி யாசித்துப் பழகிக் கொள்ள வேண்டும்.

இதனால் உங்களுக்கு வேண்டியவைகள் எதையும் கிரகித்துக் கொள்ளும் சக்தி உங்களுக்கு ஏறபட்டுவிடும்.

உதாரணமாக நீங்கள் ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது உங்கள் கவனத்தைத் திசைதி ருப்பக்கூடிய எண்ணங்களை அகற்றவும் உங்கள் நிலை மாறாமல் உங்களுக்கு வேண்டிய விஷயங் களை கிரகித்துக் கொள்ளவும் உங்களால் முடியும்.

மேலும் நீங்கள் தனித்து இருந்து உங்கள் சரீரத்தில் சூக்கும உடலின் மூலமாக அதன் அற்புதமான தேஜசுடன் ஆனந்தமான ஜோதியுடன் அந்நியோன்யமாகக் கலந்து ஒன்றி இருக்கையில் அதில் இருந்து உங்களுக்கு ஆறாகப் பெருகிப் பாயும் ஆனந்த வெள்ளமாகிய சக்திகள் ஒன்றேனும் சிதறிப் போகாமல் முழுமையாகக் கிரகித்துக் கொள்வது இந்தத் தாங்கும் சக்தியே ஆகும்.!

**என். தம்மண்ணன்**



02-front



# ஈகை எனப்படுவதும் பெருந்தவமேயாம்!

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து," (குறள் 221)**

பொருள் "வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும். பிறருக்குக் கொடுப்ப தெல்லாம் பயனை எதிர்பார்த்துத் தருவது ஆகும்."



"சொல்வத்துப் பயனே ஈதல்" என்று புறநானூறு (பாடல் 189.7.8) கூறுகிறது.

ஊரின் நடுவிலுள்ள நல்ல பழமரம், ஊருணி, மருந்து மரம் ஆகியவை பலருக்கும் பயன்படுகின்றன. அது போல் செல்வர்களிடம் இருக்கும் செல்வம் பலருக்கும் பயன்படும் போதுதான் அது பயனுடையதாகிறது.

பணம் நம்மிடம் இருப்பதனாலேயே, "அது நமக்கே உரிமையானது" என்று நாம் நினைத்துவிடக் கூடாது. மாறாக ஆண்டவன் அந்தப் பணத்தைப் பிறர் தொண்டிற்காக நம்மிடம் கொடுத்து வைத்திருக்கிறான். அந்தப் பணத்திற்கு அறங்காவலனாக இறைவன் நம்மை நியமித்திருக்கிறான் என்று எண்ணி, அதைப் பிறர் நலனுக்கு நாம் பயன்படுத்த வேண்டும்.

பிறருக்கு உதவி வாழும் போதுதான் வாழ்க்கை பயனுடையதாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் ஆகிறது.

கல்நெஞ்சம் கொண்டவர்கள் ஈகைக் குணம் இல்லாமல் இருப்பார்கள். ஏழை எளியவர்களுக்கு உதவாத பணக்காரனுக்கு வாழ்க்கையில் மனநிம்மதி இருக்காது. ஏழை எளியவர்களுக்கும், "இல்லை" என்று வந்தவர்களுக்கும் கொடுத்து உதவுவது (ஈகை) என்பது ஓர் அறச் செயல் மட்டுமல்ல, அது ஒரு பெருந்தவமும் ஆகும்.

"பிறரால் கைவிடப்பட்டவர்களுக்கும், விருந்தினர் களுக்கும், வறியவர்களுக்கும், துணையற்ற சிறுவர்களுக்கும், சான்றோர்களுக்கும் உணவு அளிப்பவன் மறுமையில் அரசனாகப் பிறப்பான்" என்று ஏலாதி கூறு கிறது. (பதினென் கீழ்கணக்கு நூல்களில் ஏலாதியும் ஒன்று. 80 பாடல்களைக் கொண்ட இந்த நூலில் ஈகை யின் சிறப்பு விரிவாக விளக்கப்படுகிறது. இந்த நூலின் ஆசிரியர் கணி மேதாவியார்.)

"ஈயா மனிதரை ஏன் படைத்தாய் கச்சியெ கம்பனே?" என்று வினவுகிறார் பட்டினத்தார்.

"ஈதல் அறம்" என்று அவ்வையார், அறத்திற்கு ஒரு விளக்கம் தந்திருக்கிறார்.

"கடவுள்குச் செலவு செய்ய விரும்புகிறவர்கள், ஏழைகளுக்கு உணவிடுவதன் மூலம் அந்தப் பணத்தைச் செலவிடுங்கள்" என்று, வடலூர் வள்ளலார் குறிப் பிட்டிருக்கிறார்.

"இன்று ஏழையாக இருப்பவர்கள் முற்பிறவியில் பிறருக்கு ஒன்றும் கொடுத்தறியாதவர்கள் என்பதை உணர்ந்து. சிறு அரிசி அளவாவது பிறருக்கு நாள் தோறும் கொடுத்துப் பின்னரே உண்ண வேண்டும்" என்று நாலடியார். (பாடல் எண் 94) கூறுகிறது.

"நொய்யளவு அரிசியையாவது தானம் செய்யுங்கள்" என்று அருணகிரிநாதர் கூறியிருக்கிறார்.

"தானம் செய்வதில் தீவிரமாக இருங்கள்" என்று நபிகள் நாயகம் கூறியுள்ளார்.

எவரேனும் நம்மிடம் எதையேனும் கேட்டு வரும் போது அவர்களுக்கு நாம் கொடுத்து உதவினால், நாம் பிறரிடம் சென்று எதையேனும் கேட்டு வாசிக்கும் நிலை நமக்கு வராது. தானம் தர்மம் செய்வதற்கு அளவுகோல் இல்லை. அதைச் சிறிது செய்தாலும் பெரும் நன்மைகளைத் தரும்.

"இறைக்கின்ற ஊற்றே சுரக்கும்" என்பதற்கேற்ப, ஈகைக் குணத்தால் செல்வம் வளரும்.

நிலையற்ற மனித உடல் உள்ளபோதே நாம் இயன்ற வரையில் நிலையான அறச் செயல்களைச் செய்ய வேண்டும்.

**"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை," (குறள் 36)**

பொருள் "பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்காமல், அறத்தை நாள்தோறும் செய்ய வேண்டும். அதுவே உடம்பிலிருந்து உயிர் நீங்கும் காலத்திலும் அழியாத துணையாகும்."

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி." (குறள் 226)**

பொருள் "ஏழைகளின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் தன் பொருளைச் சேமித்து வைக்கும் இடம் ஆகும்




மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

**குணம் இருக்கும் இடத்தில் பண்பும் பயனும் இருக்கும் என அறிந்த ரிசப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ராசிநாதனும் சனியும் பார்வை பெறுவதால் எடுத்த காரியம் அனுகூலமாக இருக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.**

### பணியாளர்களுக்கு

பணியில் பல சிரமங்கள் இருந்தாலும் உங்களின் கடமைகளில் நன்மையை பெறுவீர்கள். தினமும் பயனுள்ள காரியங்களை செய்து உங்களின் மதிப்பை கூட்டிக் கொள்வீர்கள். பொருளாதாரத்தில் அதிக முன்னேற்றம் உண்டாகும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயத்தில் அதிக ஈடுபாடுகளை குறைத்துக் கொள்வீர்கள். முதுகுவலியால் அவதிப்பட வேண்டி வரும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும் பொருளாதாரத்தில் நன்மையை பெறுவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் முயற்சியின் பலனால் பல நன்மை உண்டாகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். திடீர் வரவு உண்டாகும். கடன் வாங்கவோ, வேறு கடன் திரும்பி செலுத்தவோ வாய்ப்புகள் அமையும். பொருளாதார நன்மைகளை அடைவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினரின் வளர்ச்சி மிகவும் வரவேற்பை பெறும். சக கலைஞர்களின் தொடர்புகளால் புதிய வாய்ப்புகள் உண்டாகும். முக மலர்ச்சியுடன் சகல காரியங்களிலும் செயல்படுவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் புதிய எண்ணங்களில் வளர்ந்து வரும் கற்பனையான செயல்களில் சில உண்மையாக நடக்க வாய்ப்பு அமையும். முந்தைய நிகழ்ச்சி போல தெரியும். பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

பௌதீகம், பொருளாதாரம், இரும்பு சார்ந்த கல்விகளில் முன்னேற்றம் காண்பீர்கள். சகமாணவர்களின் துணையுடன் மேலும் புதிய தகவல்களை பற்றி அறிந்து கொள்வீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

07.05.2015 வியாழன் பகல் 12.43 முதல் 09.05.2015 சனி மாலை 05.28 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்

செய்யும் தொழில் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் சிறப்பான முன்னேற்றம் பெறுவீர்கள்.

### ரோகிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

உடன் பிறப்புகள் மூலம் நன்மை உண்டாகும். பிரிந்த உறவுகள் சுபகாரியத்தில் இணைவார்கள். பொருளாதார வளர்ச்சி இருக்கும்.

### மிருகசீரிடம் 1, 2, ஆம் பாதங்கள்

தாயாரின் உடல் நலனில் சிறு பாதிப்பை தரும். மனத்தெளிவு பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பழுத்த வெண்மை, நீலம், பலவர்ணம்


**அதிர்ஷ்ட திசைகள்:** தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** வெள்ளி, புதன், திங்கள்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளிக்கிழமை அம்மன் வழிபாடு ராகு காலத்திலும், செவ்வாய்க்கிழமை ராகுகாலத்தில் முருகன் வழிபாடும் செய்து வர சகல காரியமும் அனுகூலமாகவும், சிறப்பாகவும் அமையும்.





# சிங்கப்பூரின்
# ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் கோவில்



நாட்டு மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக நிறைய வழிபாட்டுத் தலங்களையும், ஆலய உற்சவங்களையும் ஏற்படுத்தினார்கள். நிலங்களைத் தானமாகக் கோயிலுக்கு எழுதி வைத்தார்கள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய கோவில்களில் ஸ்ரீநிவாச பெருமாள் கோயிலும் ஒன்று.

1800ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ரீநிவாச பெருமாள் கோயில் தோற்றம் கண்டது. இந்த ஆலயம் உருவாக்கத்திற்கும், தோற்றத்திற்கும் வழிகோலியவர்கள் சமூகத்தலைவர்களாக இருந்த அருணாச்சலப் பிள்ளை, கோட்ட பெருமாள்பிள்ளை, இராமசாமி பிள்ளை, அப்பாசாமி பிள்ளை, சொக்கலிங்கப்பிள்ளை, இராமசாமி ஜமீந்தார் ஆகியோர். தாய்நாட்டை விட்டு வந்திருந்த போதிலும், இறைவழிபாட்டை மறவாது கோயில் கட்டி,தங்களின் கலாசாரம், மதம், மொழி ஆகியவற்றை மறவாது ஒழுகி நிற்கத் துடித்த காலம். தங்களின் சக்திக்கேற்ப ஆங்காங்கே சிறு குடில்களாகக் கோவில்களை அமைத்து வழிபட்டார்கள். அப்போது வைணவர்களுக்கு ஒரு சிறப்பான கோயில் வேண்டும் என்றபொது நல எண்ண உந்தலில் 1855ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 20ஆம் நாள் திரு. நரசிங்கம் என்பவருக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி சிராங்கூன் சாலையில் 2 ஏக்கர் 19 போல்ஸ் பரப்புள்ள நிலத்தை இருபத்தொன்று ரூபாய் மூன்று அணாவுக்கு விற்று நிலத்தை அவருக்கு உரிமையாக்கிக்கொடுத்தது. (அப்போது சிங்கப்பூரில் இந்திய நாணயம்தான் உபயோகித்தலில் இருந்து இருக்கிறது)

வாங்கப்பட்ட நிலத்தில் எழும்பிய கோயிலுக்கு "நரசிம்ம பெருமாள்கோயில்" என்று பெயர் வழங்கப்பட்டது. கோவிலுக்குப் பக்கத்தில் ஒருகுளமும் இருந்தது. கோவிலுக்குப் போகும்முன் அக்குளத்தில் குளித்து விட்டுதூய்மையுடன் சன்னதி அடைந்து வழிபட்டு வந்தனர்.

குளம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணால் மூடப்பட்டுவிட்டது. சிறிய கோவிலாக இருந்த போதிலும் பக்தர் கூட்டம் அதிகரிக்க,பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பக் கோவில் பெரிதாக இருக்கவேண்டும் என்று அறக்காப்பாளர்கள் அன்றைய பிரிட்டிஷ் அரசிடம் முறையிட்டார்கள்.

அம்முறையீட்டிற்கிணங்க,25,792ச.அடி நிலம் $ 25.00 வெள்ளிவிலையில் 08.05.1894 ம் ஆண்டு சிராங்கூன் சாலையில் இருக்கும் நரசிங்கப் பெருமாள் கோவில் அறக்காப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

1805.19.12ம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியாரிடமிருந்து 3,422 ச.அடிநிலம் 999 ஆண்டுக்கு வருடம் ஒருவெள்ளி வீதம் குத்தகைக்கு வழங்கப்

பட்டது. 'நரசிம்ம பெருமாள் கோயில்' என வழங்கப்பட்ட பழைய கோவில் அப்போதே சிராங்கூன் சாலையை முகப்பாகக் கொண்டு அமைந்திருந்தது. 'நரசிம்ம பெருமாள், மகாலெட்சுமி, ஆண்டாள், ஆஞ்சநேயர், மகாலெட்சுமி விக்ரங்களுடன், கோவிலின் வெளியில் அரசமரத்தடியில் பிள்ளையார் சிலையை வைத்து வழிபட்டு வந்துள்ளார்கள். இக்கோயில் 1907ஆம் ஆண்டு முதல் முகமதிய இந்து அறக்கட்டளை வாரியத்தினால் மேலாண்மை செய்யப்பட்டு,பின்னர் இந்து அறக்கட்டளை வாரியத்தின் முழு அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1952ஆம் ஆண்டு,மிகவும் மோசமான நிலையில் இருந்த கோவிலைத் திருத்தி அமைத்துப் புது கட்டிடம் ஒன்றை எழுப்ப வாரியம்முடிவு செய்தது. மேலும் கோவிலுக்குள் நுழையும் வழியைத் தவிர சிராங்கூன் சாலையின் முகப்பில் அமைந்திருக்கும் நிலத்தில் கடைகளுடன் கூடிய வீடுகள் கட்டி 99 வருடக் குத்தைக்கு விடவும் வாரியம் எண்ணியது.

அத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பின், இப்போது இருப்பதைவிடக் கோவில் சிறியதாக அமைந்திருக்கும் என்பதுடன் கோவில் உத்தேசக் கட்டிடங்கள் பின்புறத்தை முகப்பாகவும் கொண்டு அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.பொது மக்கள் அத்திட்டத்திற்கு எதிர்ப்புக் தெரிவித்ததால், திட்டத்திற்கு அங்கீகாரம் பெற நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்த மனு விசாரணைத் தேதியின்றி ஒத்திவைக்கப்பட்டது. இருப்பினும், 1957ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் நாள் ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற உபயக்காரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வாரியம் தயாரித்த புதுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு மனநிறைவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.அத்திட்டத்தை 1961ஆம் ஆண்டு பிப்ரவரியில் உயர் நீதிமன்றமும் அங்கீகரித்தது. அதனைத்தொடர்ந்து உள்நாட்டு குத்தகைக்கார்ர்களைக் கொண்டு கோயில் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

1963ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து வரவழைக்கப் பட்ட சிற்பிகளைக் கொண்டு சிற்ப வேலை நடைபெற்றது. இராஜ கோபுரம், பிள்ளையார் சந்நிதி, இவற்றைத் தவிர தற்சமயமுள்ளகோவில் 1966ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

நரசிங்கப்பெருமாள் கோவில் ஸ்ரீநிவாச பெருமாள் கோயிலாக பெயர் மாற்றம் பெற்றது. நரசிங்க அவதாரம் எடுத்த விஷ்ணுவின் உருவத்திற்குப் பதிலாகத் திருப்பதி வெங்கடேசப் பெருமாளை ஒத்த திருவுருவத்தைக் கோவிலில் மூலவராக வைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கருஞ்சிலையும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. ஸ்ரீநிவாச பெருமாள் கோயில் வளாகத்திலேயே கோவிந்தசாமி பிள்ளை அவர்களால் ஒரு கல்யாண மண்டபம்கட்டப்பட்டு, 1965ஆம் ஆண்டு சிங்கப்பூர் முதல் அதிபர் இஞ்சே யூசோப் பின் இஸ்ஸாக் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. கல்யாண மண்டபம் திருமணங்கள், கூட்டங்கள் இன்னும் பல்வேறு சமய சமூக நிகழ்ச்சிகளை நடத்து வதற்காக இன்று பயன்படுத்தப்படுகிறது.

ஸ்ரீநிவாச பெருமாள் கோயில் 1966ஆம் ஆண்டு புதுப்பித்து கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் முடிவுற்றவுடன் கோவிலுக்கு இராஜ கோபுரம் கட்டும் திட்டத்தில் நாட்டம் செலுத்தி அதனை நன்கொடை மூலம் கட்டி முடித்தனர்.

1975ஆம் ஆண்டு கும்பாபிஷேத்தைச் சிறப்பாக நடத்த வைணவ ஆகமங்களில் தேர்ச்சி பெற்ற அலங்கார பட்டர் தமிழகத்திலிருந்து வந்து நடத்தினார். 41 நாட்கள் மண்டலாபிஷேகத்தில் கலாச்சார நிகழ்ச்சி யில் கலந்துகொள்ள திருமதி. எம்.எஸ். சுப்புலெட்சுமி, புலவர் கீரன் அவர்களும் வருகை புரிந்தனர். 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் சிங்கப்பூர் தேசிய நினைவு சின்னங்கள் பாதுகாப்பு வர்ரியத்தால் அரசாங்கத்தால் அங்கீரிக்கப்பட்டது. கோவில் கோபுரம், விமானத்தில் உள்ள சுதை சிற்பங்களாகத் தாயார், ஆண்டாள், பெருமாள் பொழியுடன்காட்சியளிக்கிறார்கள். சன்னிதானத்தில் மூலவராக பெருமாள், ஆண்டாள், தாயார் ஆகியோரின் உற்சவதிருவுருவங்கள் ஏகாதசி மண்டபத்தில் வைக்கப்பட்டு அன்றாட பூஜைகள் நடத்தப்பட்டு வருகிறது. கொடி மரம் இழைக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வந்த செம்புத் தகட்டினால் மூடப்பட்டுள்ளது. காரைக்குடியில் உள்ள சிறந்த நுட்பவாதிகளைக் கொண்டு இராஜகோபுரத்திற்கான கதவு செய்யப்பட்டுள்ளது.



**புரட்டாசி சனி:**

புரட்டாசி மாதம் பெருமாளுக்கு உகந்த மாதம். ஏழுமலை வெங்கடாசலபதி இந்த புரட்டாசி மாதத்தில்தான் மக்களை நெறிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. சனிக்கிழமை பெருமாளுக்கு உரிய தினம். அன்று கோயிலில் அதிக கூட்டமிருக்கும். புரட்டாசி சனியில் அன்னதானம் செய்யும் வழக்கம் பெருமாள் கோயிலில் 1900களின் தொடக்கத்திலிருந்தே உள்ளதாக வாய்மொழி வரலாறு உண்டு. இன்று வரை புரட்டாசி சனியில் அன்னதானம் நடைபெற்று வருகிறது.


**நெல்லை ஆசி**

சிற்பச் சிறப்பின்
பிறப்பிடமாய்
விளங்கும்

சுசீந்திரம்

# ஸ்தாணுமாலயன் ஆலயம் !





குமரி மாவட்டத்தின் பிரம்மாண்டமான கோயில்களில் ஒன்று சுசீந்திரம். கன்னியாகுமரிப் பாதையில் இது இருப்பதனால் பொதுவாக இங்கே வந்திருக்கக் கூடியவர்கள் அதிகம். பெரும்பாலானவர்கள் பயணத்தின் நடுவே புயல் வேகமாக கோயிலைக் கடந்து சென்றிருப்பார்கள். சற்றே கூர்ந்து கவனிப்பவர்கள் தென்தமிழ்நாட்டின் வரலற்றையே இந்த ஒரு கோயிலில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

கன்னியாகுமரி நாகர்கோயில் சாலையில் நாகர்கோயிலில் இருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது சுசீந்திரம். சுசீந்திரம் கோயில் அமைந்திருக்கும் இடம் வரலாற்றுரீதியாக முக்கியத்துவம் கொண்டது. கடலில் இருந்து சுசீந்திரம் வரை விரிந்து கிடக்கும் மணக்குடி காயல் ஒரு காலத்தில் சிறிய துறைமுகம் போலவே இயங்கியது. அதனருகே உள்ள கோட்டாறு பழங்காலம் முதலே முக்கியமான ஒரு சந்தைத்தலம். ஆகவே வணிக முக்கியத்துவம் கொண்ட இடத்தில் அமைந்த பெரும் கோயில் இது.தென்னாட்டின் முக்கியமான நெல்லுற்பத்தி மையமாக இருந்த நாஞ்சில்நாட்டின் நிர்வாகத் தலைமையகமாக இக்கோயில்தான் நெடுங் காலமாக இருந்துள்ளது.

இக்கோயிலைச் சுற்றியிருக்கும் வேளாள ஊர்கள் 12 பிடாகைகளாக வருவாய்ப் பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தன. அவர்கள் அனைவருமே தங்கள் ஆலோசனைகளை சுசீந்திரம் கோயிலில் சுப்ரமணியசாமிகோயிலின் முன்புள்ள செண்பக ராமன் முற்றத்தில் கூடித்தான் தீர்மானிப்பது என்ற வழக்கம் இருந்தது. இது சுதந்திரம் கிடைக்கும் காலம் வரை இப்படியே நீடித்தது.

மிகப்பெரிய நிலச்சொத்துள்ள கோயில் சுசீந்திரம். அந்நகரமே அக்கோயிலை ஒட்டி உருவானதுதான். கோயிலின் நிலங்கள் கோயிலைச்சுற்றி

யிருக்கும் பெரும்பாலான கிராமங்களில் பரந்து கிடந்தன. அவற்றை நிர்வாகம் செய்யும் அமைப்புகள் இருந்தன. அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய் பொதுக்காரியங்களுக்குச் செலவிடப்பட்டதோடு பஞ்சத்துக்கான சேமிப்பாகவும் இருந்தது.

சுசீந்திரம் என்ற பேரை சமகால பக்திநூல்கள் பலவகையாக விளக்குகின்றன. பெரும்பாலும் அவை வரலாற்று பேதம் இல்லாத சொற்பகுப்புகள். சுசீ+இந்திரம் என்று பகுத்து இந்திரன் அகலிகை விஷயத்தில் சாபம் பெற்று இங்கே வந்து தன் சாபத்தை தீர்த்து சுத்தம் செய்து கொண்டதனால் இப்பெயர் என்பார்கள். ஆனால் கோயிலில் அகலிகையின் சிலை கிடையாது. பழைய நூல்களிலும் அப்படிப்பட்ட குறிப்பேதும் இல்லை.


ஸ்ரீஇந்திரம் என்ற பெயரே பழந்தமிழில் சிவிந்திரம் என்று மருவியது என்பது ஆய்வாளர் கருத்து. ஸ்ரீ என்பது சி என்றாகும் மரபு உண்டு. கிபி 941 ஆண்டுள்ள கல்வெட்டு ஒன்றில் சுசிந்திரம் என்ற பெயர் முதன்முதலில் வருகிறது. கிபி 11 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு இந்த ஊரை 'ராஜராஜப் பாண்டிநாட்டு உத்தமசோழ வளநாட்டு நாஞ்சில்நாட்டு பிரம்மதேயம் சுசீந்திரமான சுந்தர சதுர்வேதி மங்கலம்' என்று சொல்கிறது

சுசீந்திரம் பிரம்மதேய கிராமம். இது சதுர்வேதிமங்கலமும் கூட. அதாவது மன்னர்களால் வேதம் பயில பிராமணர்களுக்கு நிலமும் கிராமமும் அளிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட நகரம் இது. இது முதலில் தொன்மையான நாஞ்சில்நாட்டு ஆட்சியாளர்களின் ஆதிக்கத்திலும் பின்பு சேரர் ஆதிக்கத்திலும் அதன்பின் பாண்டிய ஆட்சியிலும் பின்பு சோழர் ஆட்சியிலும் மீண்டும் பாண்டிய ஆட்சியிலும் நடுவே நாயக்கர் ஆதிக்கத்திலும் கடைசியாக வேணாட்டு திருவிதாங்கூர் ஆட்சியிலும் இருந்துள்ளது. ஒவ்வொருவரும் கோயிலை விரிவாக்கம் செய்து கட்டியிருக்கிறார்கள்.


இது ஐதீகப்பிரகாரம் மும்மூர்த்திகளின் கோயில். ஸ்தாணுமாலயன் என்பது மூலவரின் பெயர். ஸ்தாணு என்றால் சிவன். மால் விஷ்ணு. அயன் பிரம்மன். ஆனால் மையச்சிலை சிவலிங்கம்தான். அந்த லிங்கம் மும்மூர்த்தியாக வழிபடப்படுகிறது. கல்வெட்டுகள் இக்கோயில் மூலவரை மகாதேவர், சடையார், நயினா, உடையார் எம்பெருமான், பரமேஸ்வரன் போன்ற பெயர்களில் குறிப்பிடுகின்றன. இக்கோயிலில் உள்ள செண்பகராமன் மண்டபத்தில் உள்ள ஒரு கல்வெட்டில்தான் முதலில் தாணுமாலயன் என்ற பெயர் வருகிறது. இக்கல்வெட்டு 1471 ஆம் ஆண்டைச்சார்ந்தது.

கோயிலின் சிற்ப – கட்டுமான அமைப்பு : பிற பேராலயங்களைப் போலவே இதுவும் பல கோயில்களின் ஒரு பெரிய தொகுப்பு. கோயிலுக்கு முன்னால் உள்ள முன்னுதித்த நங்கை என்ற கோயில் தான் ஆகமப் பழையது. இது ஒரு காளிகோயில். பின்பு வந்தது உள்ளே ஒரு பாறை மேல் இருக்கும் பழமையான சிவன் கோயிலான கைலாசநாதர் ஆலயம். அதன்பின் மையக்கோயில் பெருமாள் கோயில்கள் மற்றும் பல்வேறு சிற்றாலயங்கள். மூலதிருநாள் மகாராஜா காலத்தில்– பேச்சிப்பாறை அணை கட்டப்பட்டபோது தான் சுசீந்திரம் ராஜகோபுரம் கட்டப்பட்டது. ஏற்கனவே அஸ்திவாரம் மட்டுமே இருந்தது. அப்போது மண்ணைத் தோண்டும்போது கிடைத்த மாபெரும் ஒற்றைக்கல்லில் அனுமார் சிலை உள்ளே நிறுவப்பட்டது. இன்று சுசீந்திரம் அனுமார் மிக முக்கியமான வழிபாட்டு மையம். கோயிலுக்குள் உள்ள கொன்றைமரம் புராதனமானது– இப்போது பாஸில் ஆக உள்ளது அது. இக்கோயிலின் தலவிருட்சம்.

கோயிலுக்குள் உள்ள சிற்பங்கள் உலகப் பிரசித்தமாகும். நாயக்கர் கால சிற்பக்கலையின் சிறந்த மாதிரிகள் இங்கே உள்ளன. வீரபத்ர சிலைகள். குறவன் குறத்தி சிலைகள். கல்லை உலோக வழவழப்புவரை கொண்டு சென்றிருப்பதன் நுட்பம் மிகத் தேர்ச்சியான கலையைக் காட்டுகிறது. கோயிலின் பூசைகள் நிர்வாக முறைகள் திருவிழாக்கள் அரிய பொக்கிஷங்களை உள்ளடக்கியிருக்கின்றது.



இக்கோவில் கட்டிடங்கள், சிற்பங்கள் மற்றும் ஓவியங்களை காண குறைந்தது 15 நாட்கள் ஆகும் என்று தமிழ் சான்றோர்கள் தெரிவிக்கின்றார்கள். ஒவ்வொரு சிற்பங்களும் அத்தனை நுண்ணிய வேலைப்பாடுகளால் அமைக்கப் பெற்றுள்ளதாம். காரணம் அனைத்து நாட்டு அரசர்களும் இக்கோவிலை விரிவாக்கம் செய்திருப்பதன் அழகிய வெளிப்பாடுகள்தாம் இவை. கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை 1949 இல் சுசீந்திரம் கோயிலின் தேவாரப்பாடசாலை விழாவுக்கு தலைமைதாங்கிப் பேசும்போது "ஐரோப்பாவில் அமேசான் என்ற வீரப்பெண்கள் இருந்தார்கள். அவர்கள் வில் நாணை இழுத்து அம்பு பூட்டும் வசதிக் காக தங்கள் ஒரு மார்பை வளரவிடாமல் செய்வார்கள். இந்த விஷயத்தை அறிந்த ஓர் ஐரோப்பியர் இந்தக் கோயிலில் ஒரு சிற்பத்தைப் பார்த்து 'ஓ இங்கும் அமேசான் ' என்றா ராம். அவர் குறிப்பிட்டது இந்த கோவிலில் இருக்கும் அர்த்தநாரீஸ்வரர் சிற்பம்' ஆகும்.



# மன்னன் மல்லேஸ்வரனுக்கு

# பாப விமோசனமளித்த புண்டரீக மகரிஷி

இம்மகரிஷி பௌண்ட்ர யாகம் செய்தவர். இம்முனிவர் யாகம் செய்கையில் அசுரர்கள் யாகத்தில் அவிர்ப்பாகம் கேட்டு முனிவரைத் துன்பம் செய்தனர். உடனே முனிவர் மண்டபம் ஒன்றைச் சிருஷ்டி செய்தார். அரக்கரை மண்டபத்தில் தங்கச் செய்தார். வாத்திய கோஷங்கள் முழங்கச் செய்தார். ஒரு விதவைப் பெண்ணையும், ஒரு பிரம்மச்சாரியையும் படைத்து இருவரையும் மண்டபத்தினுள் உரக்க விவாதம் செய்ய வைத்தார். அரக்கர் வாத்திய முழக்கத்தையும், விவாதத்தினையும் கவனித்துக் கேட்டுக் கொண்டிருக்கையில் தேவர்க்கு அவிர்ப்பாகம் கொடுத்து யாகத்தைப் பூர்த்தி செய்தார்.

அருள்மிகு ஸ்தல சயன பெருமாள் திருக்கோவில். இது 108 வைணவ திருத்தலங் களில் 63ஆவது தலமாக புகழ்பெற்று விளங்குகிறது. 14ஆம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசு காலத்தில் விஜயநகர மாமன்னர் பராங்குசன் இந்தக் கோவிலை கட்டி முடித்துள்ளான்.

வைகானச ஆகம முறைப்படி பிள்ளைலோகம் ஜீயர் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு இன்றளவும் நான்கு காலபூஜைகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. இந்த ஆலயத்தில் தலசயன பெருமாள் படுத்த நிலையில் தனது காலடியில் ஸ்ரீதேவி, பூதேவி இருவருடன் கருவறையில் காட்சி தருகிறார். 12 ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் இங்கு தோன்றியதால், பூதத்தாழ்வார் அவதரித்த ஸ்தலம் என்ற புகழும் இந்த ஆலயத்திற்கு உண்டு. மாமல்லபுரத்தில் பல்லவ மன்னர்களின் 7ஆவது அரசனான மல்லேஸ்வரன் என்ற அரசனின் ஆட்சிக் காலத்தில், தினமும் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வந்தது.

ஒரு நாள் திடீரென் மல்லேஸ்வரன் அன்னதானம் வழங்குவதை நிறுத்திவிட்டான். இதனால் பொதுமக்கள் பசி, பட்டினியால் வாடினர். இதனால் கோபமடைந்த வைணவ அடியார்கள், 'மக்களின் பசியை தீர்க்க முடியாத நீ மன்னனாக இருக்க தகுதியற்றவன்' என்று கூறி, 'தண்ணீரில் மிதக்கும் முதலையாக இருப்பாய்' என்று சாபம் கொடுத்து விடுகின்றனர். பின்னர் அங்குள்ள புண்டரீக புஷ்கரணி குளத்தில் முதலை உருவில் மல்லேஸ்வரன் தண்ணீரில் வாழ்ந்து வந்தான். அப்போது அந்தக் குளத்தில் 1000 தாமரை இதழ்களை பறித்து பெருமாளுக்கு படைக்க புண்டரீக மகரிஷி அங்கு

## கெட்ட ஸ்வப்னம் முதலியன விலக்குவதற்காக பின்வரும் சுலோகத்தைப் படிக்க வேண்டும்

துர்ஸ்வப்ன துர்ஸகுன துர்கதிதௌர்மனஸ்ய
துர்பிக்ஷதுர்வ்யஸனதுர்ஸஹதுர்யஸாம்ஸி!
உத்பாததா பவிஷபீதிமஸத்க்ரஹார்த்திம்
வ்யாதீம்ஸ்ச நாஸயது மே ஜகதாமதீஸ!!



சென்றார்.இந்த நிலையில் குளத்து நீரில் முதலை உருவில் வசித்து வந்த மல்லேஸ்வரன் புண்டரீக முனிவரிடம், தன் தவறுக்கு வருந்தி, 'என்னுடைய சாபம் நீங்கப்பெற நீங்கள்தான் அருள் புரிய வேண்டும்' என்று மன்றாடி சாப விமோசனம் கேட்டான். அதற்கு முனிவர், 'நீ! மக்களை பசி, பட்டினியால் வதைத்தாய். உன் சாபம் நீங்கப்பெற வேண்டும் என்றால், 1000 தாமரை இதழ்களை பறித்துக்கொடு' என்று கேட்க, அவனும் பறித்து கொடுத்தான். பின்னர் கடலில் அருள்பாலித்து கொண்டிருந்த தலசயன பெருமாளின் பாதங்களில் 1000 தாமரை இதழ்களை முனிவர் சாத்தினார்.


அப்போது அசரீரியாக ஒலித்த பெருமாள், 'உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்' என்று கூறினார். அதற்கு புண்டரீக மகரிஷி, 'பெருமாளே! நான் முற்றும் துறந்த முனிவன். எனக்கென்று எந்த ஆசையும் கிடையாது. இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவரும் பசி, பட்டினி இன்றி நல்ல சுகபோகத்துடன் வாழ வேண்டும்.

மல்லேஸ்வரனின் சாபம் நீங்க வேண்டும்' என்று வரம் கேட்டார். இறைவனும் அப்படியே ஆகட்டும் என்று அருள்புரிந்தார். பின்னர் அரசன் மல்லேஸ்வரனும் தனது சாபம் நீங்கப்பெற்று மீண்டும் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கும் பணியை தொடங்கினான்.

இவ்வாறு வரலாற்று புகழ் பெற்ற, புண்டரீக மகரிஷி பாதம் பட்ட இந்த புஷ்கரணி தெப்பக் குளத்தில், மாசிமகத்தன்று தலசயன பெருமாளுக்கு தெப்ப உற்சவம் நடைபெற்று வருகிறது.

மேலும் நம் முன்னோர்களுக்கு இந்த புஷ்கரணி தெப்பக்குளத்தில் நீராடி மகாளய அமாவாசை உள்ளிட்ட விசேஷ தினங்களில் திதி, தர்ப்பணம் கொடுத்தால் காசி, கயா, இராமேஸ்வரத்தில் கிடைக்கும் புண்ணியத்தை விட பல மடங்கு புண்ணியமும், மனநிறைவும், மகிழ்ச்சியும் கொடுக்கும் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது. பொதுமக்களாலும் நம்பப்பட்டு வருகிறது.

இந்தக் கோவிலில் மூலஸ்தானத்தில் நான்கு திருக்கரங்களுடன் பூதேவி, ஸ்ரீதேவி இல்லாமல், படுத்த நிலையில் வேறு எங்கும் இல்லாத எளிமையான திருக்கோலத்தில் தல சயனப் பெருமாள் காட்சியளிக்கிறார். ஆனால் உற்சவர் ஸ்ரீதேவி, பூதேவியுடன் உள்ள அரிய காட்சி வேறு எங்கும் காண முடியாத அதிசய காட்சியாகும்.






## காண்போரைக் களிப்புறச் செய்யும்

# மதுரை மீனாளின் திருக்கல்யாணம்!

பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய மதுரை இன்று இந்தியாவின் புகழ்பெற்ற நகரங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. இது புராண முக்கியத்துவம் வாய்ந்த வைகை கரையின் மீது அமைந்துள்ள வளம் பொருந்திய நகரமாகும். பராசக்தியே மலையத்துவச பாண்டியன் மகளாக அவதரித்து, அரியணை ஏறி ஆட்சி புரிந்து, ஈசனை திருமணம் செய்து கொண்ட இடம் இதுவாகும்.

புண்ணிய நகரமாம் மாமதுரை போற்றி என அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் ஆகிய சமயக்குரவர்கள் நால்வரும் பதிகம் பாடி சிறப்பித்த நகரம் மதுரையே ஆகும். எண்ணற்ற பல பண்டைத் தமிழ் நூல்களும், தமிழ் வளர்ச்சி, வாணிகம், விருந்தோம்பல் முதலியவற்றை சுட்டி காட்டி மதுரையை போற்றி வர்ணித்துள்ளன.

மதுரை நகரை தாமரை மலராக உருவகித்து கோயிலை பொகுட்டாகவும் சுற்றிலும் உள்ள வீதிகளையும் தாமரை மலர் இதழ்களாகவும் பழந்தமிழ் நூலான பரிபாடலில் வர்ணிக்கப்பட்டுள்ளது. மதுரையின் மங்கா புகழுக்கு வித்தாய் விளங்குவது மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர் ஆலயமாகும்.

இந்த ஆலயம் பாண்டிய மாமன்னர்களின் காலத்தைச் சேர்ந்த சிற்பகலைக்கு ஒரு எடுத்துக் காட்டாய் விளங்குகின்றது. ஆலயத்தில் உள்ள சிற்பங்களும், சித்திரங்களும் பார்ப்போரை வியப்பின் விளிம்பிக்கே எடுத்துச் செல்லும். இங்குள்ள அழகிய பொற்றாமரை குளமும் பார்த்து மகிழ வேண்டிய ஒன்றாகும். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என நக்கீரன் ஈசனுடன் வாதாடிய இடம் இது என சொல்லுகின்றது திருவிளையாடற் புராணம்.

உலக திருமறையாம் திருக்குறளும் இங்கு வைத்துத் தான் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தின் தெற்குக்கரை மண்டபத்தில் திருக்குறள் எல்லாமும் வெண்மையான சலவை கற்களில் சுவரில் அழகாக பதிக்கப்பட்டுள்ளன. அது போலவே அபிராமி அந்தாதியும் இங்கு இடம் பெற்றுள்ளது. இந்த ஆலயத்திற்கு பெருமை சேர்க்கும் மண்டபங் களில் முக்கியமானது ஆயிரம் கால் மண்டபம். இதன் உள்ளே எண்ணற்ற சிற்பங்களைத் தாங்கி நிற்கும் தொள்ளாயிரத்து எண்பத்தைந்து தூண்கள் இருக்கின்றன. மீதமுள்ள பதினைந்து தூண்களுக்கான இடத்தில் அழகிய நடராஜர் மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. கலையழகு மிகக் கொண்ட சிற்பங் களையும் விக்கிரகங்களையும் இந்த ஆயிரம் கால் மண்டபத்தில் பக்தர்கள் கண்டு களிக்கலாம்.

மதுரையை ஆண்டு வந்த மலையத்துவச பாண்டியனின் மகளான மீனாட்சி ஆணுக்கு நிகரான அனைத்து வகை போர் திறன்களையும் கற்று தேர்ந்தாள். தனது தந்தைக்குப் பின் மதுரையின் அரசியாக மீனாட்சிக்கு பட்டம் சூட்டப்பட்டது. மூன்று தனங்களுடன் பிறந்த அரசி மீனாட்சி, எந்த மன்னனைப் பார்க்கும் போது ஒரு தனம் மறைகின்றதோ, அவனையே கணவனாய் வரித்து திருமணம் செய்து கொள்வாள் என்று மலையத்துவச பாண்டியனுக்கு ஒரு அசரீரீ பகர்ந்திருந்தது. பட்டாபிசேகத்துக்கு பின்பு மதுரையிலிருந்து படையுடன் கிளம்பி திக்கெட்டும் சென்று போர் புரிந்து வெற்றி வாகை சூடினாள் மீனாட்சி. அவ்வாறு அவள் கிழக்கு திசை


சென்ற போது, அமராவதி நாட்டின் மன்னனான இந்திரன் மீனாட்சியுடன் போர் புரிந்தான். ஆனால், மீனாட்சியின் வீரபராக்கிரமத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தோல்வியைத் தழுவினான். இவ்வாறு ஒவ்வொரு திசையிலும் போர் தொடுத்து மன்னர் யாவரையும் வெற்றியில் வீழ்த்திய மீனாட்சி கைலாயத்தின் மீதும் படையெடுத்துச் சென்றாள்.

அங்கே இந்த உலகையே ஆட்சி செய்யும் சிவ பெருமான் மீனாட்சியை யார் என்று உணர்ந்து இருந்ததால், உற்சாகத்துடன் அன்னையை எதிர் கொள்ளச் சென்றார். ஆனால், மீனாட்சியோ படையுடன் வீரம் கொப்பளிக்க சிவனின் எதிரே நின்று கொண்டிருந்தாள். ஈசன் நெருங்கி வர வர அன்னையின் வெற்றி வேட்கை குறைந்து வெட்கம் ஆட்கொண்டது. சிவ பெருமான் அருகில் வர வர தனது கையில் இருந்த வாளை கீழே போட்டு விட்டு தலை குனிந்து நின்றாள் மீனாட்சி, அந்த கணமே மீனாளின் மூன்றாவது தனமும் மறைந்து விட்டது. எதிரே நிற்கும் சிவனே தனது மணாளன் என கண்ட பூரிப்பில் ஆழ்ந்து நின்றாள் மீனாட்சி. அப்போது, சிவபெருமான், "அங்கயற் கண்ணியே நீ மதுரையை விட்டு படையுடன் அகன்ற நாள் முதல் உன்னுடனேயே இருந்தேன், இன்றே உன்னை நேரில் காண்கின்றேன். இனி உன்னை என் துணைவியாய் ஏற்றுக் கொள்வேன்" என்றார். இந்த வார்த்தைகளை கேட்டவுடன் அன்னை மீனாட்சியின் முகம் வெட்கத்தால் சூரியனை போல் சிவந்தது. புலித் தோலை ஆடையாகவும் பாம்பை அணிகலனாகவும் கொண்டு எப்போதும் காட்சி தரும் சிவபெருமான், அந்தக் கோலத்தை விடுத்து அழகு சுந்தரராய் மாப்பிள்ளையயாய் மதுரைக்கு வந்து சேர்ந்தார். நல்ல நாளில், நல்ல நேரம் வந்ததும் மங்கள நாண் பூட்டி தனது மனைவியாய் ஏற்றுக் கொண்டார் அன்னை மீனாட்சியை.

திருமண விருந்திற்கு வந்திருந்த குண்டோதரர்களின் தாகம் தீர்த்திட கையை வைத்து வைகையை உருவாக்கினார் சிவன். இதுவே இன்றைய வைகை நதியாய் திகழ்கின்றது. இவ்வாறு இனிதே மதுரையில் நடைபெற்றது மீனாட்சி சுந்தரேஸ்வரரின் திருக்கல்யாணம். இந்த தெய்வீகத் திருமணமே, ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் முன்னிலையில் சித்திரை மாதத்தில் சித்ரா பௌர்ணமி தினத்தன்று வெகு சிறப்பாக நடத்தப்படுகின்றது.

இவ்வைபவத்தை முன்னிட்டு மதுரை நகரமே விழாக் கோலம் பூண்டிருக்கும். இறைவியை மணந்த ஈசன் ஆறு மாதமும், அவர் தம் துணைவி மீனாட்சி ஆறு மாதமும் மதுரையை ஆள்வதாக ஐதீகம்!.

***அமிதா மணாளன்***





# நோய்களை குணமாக்க பிரமிடு சக்தி

இந்த பூமியில் மனிதன் நூறு வருடங்கள் நீண்ட ஆயுளுடன் நோய், நொடியில்லாமல் மகிழ்ச்சியோடும், நிம்மதியோடும் வாழ்வதற்காகவே படைக்கப்பட்டவன், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதே வாழ்க்கையின் அடிப் படையாகும். ஆனால் நாகரிகமும், விஞ்ஞானமும் வளர்ச்சியடைந் துள்ள இக்கால கட்டத்தில் மனிதன் அமைதியை தொலைத்து பெயருக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அமைதி இழந்து டென்ஷன் என்ற மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறான். இந்த பரபரப்பு என்கிற டென்சன் எல்லாவிதமான நோய்களையும் உருவாக்கும் தன்மை கொண்டது. நம் மனத்தையும் உடலையும் இயல்பு நிலை மாறி செயல்பட வைக்கும் தன்மை கொண்டது.

நம்முடைய உடல்நிலையை பாதிக்கும் விஷயங்களில் அடுத்ததாக சுற்றுப்புறச்சூழல் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது மனித வாழ்க்கையோடு நேரடித் தொடர்பு கொண்டதாகும். நீர், நிலம் நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பௌதிகங்களே சுற்றப்புறச் சூழல் என்று அழைக்கப்படுகிறது. இவற்றில் நீர், நிலம், காற்று, ஆகாயம் ஆகிய நான்கும் பெருமளவு மாசடைந்து வருகிறது. காடுகள் குறைந்து வருவதாலும் மக்கள்தொகைப் பெருக்கம், தொழிற்சாலை போன்றவற்றால் பஞ்சபூதங்களும் மாசடைந்து இயல்பு நிலை மாறிவிட்டன. காற்றில் நச்சு வாயுக்கள் பெருகி வருவதால் ஒக்ஸிஜன் அடர்த்தி குறைந்து வருகிறது.

நீர்நிலைகளில் எல்லாம் பல்வேறுவிதமான கழிவுநீர் கலப்பதால் நீர் மாசு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. இப்படிப்பட்ட நீரையும், காற்றையும் மனிதன் பயன்படுத்தினால் என்ன விளைவுகள் ஏற்படும்? என்பது சொல்லாமலே விளங்கும். இதனால் புதுப்புது நோய்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

மருத்துவமனைகள் பெரும் தொழில் நிறுவனங்கள் போல கணக்கில்லாமல் பெருகி வருகின்றன. இவையே மக்கள் நோய்களால் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை பறைசாற்றுகின்றன. இந்தச் சூழ்நிலையில் மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதே முழுமுதற் கடமையாகும். இதற்கு முதன்மையான உபாயம் ஒன்று இருக்கிறது. அது தான் நோய்கள் வருமுன்னர் காத்துக் கொள்ளும் வழியாகும். இதைத்தான் வள்ளுவரும்

**"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறுபோலக் கெடும்"**

என்று கூறுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சுற்றுச்சூழல் நல்ல முறையில் இருந்தது. இயற்கை வளம் நிறைந்திருந்தன. மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்தனர். அப்படிப்பட்ட சூழ்நிலையிலேயே நோய் வரும் முன் காத்துக்கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். அப்படியென்றால் இன்றைய 21ஆம் நூற்றாண்டில் சுற்றுச்சூழல் சீர்கேடு, அபாயகரமான அளவுக்கு மோசமடைந்திருக்கிறது.


காற்றில் கார்பன் மோனாக்ஸைடு தூசு கலந்த பிராண சக்தியைத்தான் சுவாசித்து வருகிறோம். பல்வேறு கண்ணுக்குத் தெரியாத மாசுக்கள், உப்புக்கள் கலந்த தண்ணீரையே நாம் குடிக்கிறோம். இயற்கையிலேயே சுத்தமான தண்ணீர் என்பது பூமியில் அரிதான பொருளாகி விட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நோய்களின்றி வாழ்வது இன்றைய உலகில் மிகவும் கடினம். இந்த சிக்கலான சூழலில் நோய்களை வர விடாமல் தடுப்பதே புத்திசாலித்தனமாகும். அலோபதி, சித்த மருத்துவம், அக்குபங்சர், ஹோமியோபதி போன்ற பல மருத்துவமுறைகள் உள்ளன.

நோய்கள் வந்த பின்பு, இவற்றைத் தேடி ஓடுவதை விட இயற்கை மருத்துவம் போன்ற வழிகளை வாழ்க்கை முறை யாகக் கடைப்பிடிப்பதால் நேரத்தையும் பணத்தையும் பாதுகாக்கலாம். இயற்கை மருத்துவ முறைகளில் இன்று இயற்கை உணவு, யோகா, தியானம், மூலிகை மருந்துகள்

போன்றவற்றால் உலகம் முழுக்க மக்கள் பயன டைந்து வருகின்றனர். இதோடு பிரமிடு மருத் துவம், அக்னிஹோத்ரம் (ஹோமாதெரபி) என்கிற அற்புதமான இயற்கை மருத்துவ முறைகளும் இன்று விஞ்ஞானப்பூர்வமான ஆய்வுகள் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

துல்லியமான அளவுகளில் செய்யப்பட்ட தாமிர பிரமிடுகளில் அற்புதமாக காஸ்மிக் எனர்ஜி மற்றும் பஞ்சபூத சக்திகள் கிடைத்துக் கொண்டேயிருக்கின் றன. இந்த சக்திகள் எல்லாம் கற்பனையானவை அல்ல. பூமி மற்றும் பிரபஞ்சம் முழு வதும் இந்த சக்திகள் நீக்கமற நிறைந் துள்ளன. எனவே இத்தகைய சிறந்த மருந்தில்லா மருத்துவ முறைகள் இன்றைய மனிதனுக்கு மிகச்சிறந்த வரப்பிரசாதமாகும். இத்தகைய பிரமி டுகள் மூலம் நோய்களை குணமாக் குவது எப்படி? என்று பார்ப்போம்.



## பிரமிடு சிகிச்சை முறைகள் (பிரமிடு மருத்துவம்)

➲ உடலில் வலி உள்ள இடங் களில் பிரமிடுகளை வைத்து விட்டால் அரை மணி நேரத்தில் வலிகள் போய் விடும்.

➲ மூட்டு வலி இருந்தால் மூட்டுகளின் மேல் 6" தாமிர பிரமிடை அரை மணி நேரம் வைத்து வடக்கு பார்த்து படுத்துக் கொள்ள வேண்டும். பிர மிடில் வைத்த தண்ணீரையும் குடித்துவர வலிகள் நீங்கிவிடும்.

➲ ஒரு நல்ல விரிப்பின் மீது வடக்கு திசை நோக்கி உட்கார்ந்து 6" தாமிர பிரமிடை தலையில் வைத்து அரை மணி நேரம் உட்கார வேண்டும். தலைவலி நீங்கி உடல், மனம் இரண்டும் புத்து ணர்ச்சி பெறும் ஞாபகசக்தியை அதிகரிக்கவும். அதே போல் செய்யலாம்.

➲ உங்களுடைய அடிவயிற்றின் மீது பிர மிடை தினமும் அரை மணி நேரம் வைத்திருக்கவும். இதனால் உடல் ஆரோக்கியம் கூடும். எல்லாச் சுரப் பிகளும் சரியானபடி வேலை செய்யும்.

➲ குழந்தைகள் தூங்கும் போது கட்டி லுக்க டியில் பிரமிடுகளை வைத்துவிட்டால் குழந் தைகள் நன்றாகத் தூங்கிவிடுவார்கள். நல்ல ஆரோக்கியம், சுறுசுறுப்புடன் திகழ்வார்கள். எதிர்மறையான சக் திகள், வாஸ்து தோஷங்கள் இருந்தாலும் அவர்களை பாதிக்காமல் பாதுகாக்கிறது.

➲ தூக்கமின்மை நோயால் அவதிப்ப டுவோர் பிரமிடின் உள்ளே தூங்கினால் ஆழ்ந்த கனவுகள் இல்லாத தூக்கம் கிடைக்கும். தூக்கமின் மைக்கு பிரமிடு ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும்.

➲ தினமும் கொம்ப்யூட்டரில் வேலை செய் வோர் அதிக நேரம் ரி வி பார்ப்பவர்களின் கண்கள் மிகவும் பாதிப்படையும் அவர்கள் 3" உயர தாமிர பிரமிடை இரண்டு கண்களிலும் வைத்து படுத்துக் கொண்டு 1 மணி நேரம் சிகிச்சை செய்ய வேண்டும் அல்லது 6" தாமிர பிரமிடை முகத்தின் மீதோ, தலையின் மீதோ 1 மணி நேரம் வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் கண்களின் சக்தி அதிகரிக்கும். புத்துணர்ச்சியும், சுறுசுறுப்பும் உண்டாகும்.

➲ வயிற்று வலி, மார்பு வலி போன்ற வலி உள்ள இங்களில் 6" தாமிர பிரமிடை வைத்து அரை மணி நேரம் வடக்கே தலை வைத்து படுத்து தினமும் சிகிச்சை செய்ய நோய்கள் விரைவில் குணமடையும்.

➲ பிரமிடு மூலம் மனோசக்தியை அதிகப் படுத்தலாம். இதன் மூலம் தெளிந்த சிந்தனை, சரியான முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும்.

➲அஜீரணம், வயிற்றுக் கோளா றுகளுக்கு பிரமிடை வயிற்றின் மீது வைத்து தினமும் சிகிச்சை செய் யலாம். பிரமிடு உள்ளே வைத்த தண்ணீரையும் தினமும் குடித்து வர வேண்டும்.

➲6 அடி உயரத்தில் பெரிய பிரமி டுகள் செய்து உள்ளே வடக்கு, தெற்கு, அச்சில் கட்டிலைப் போட்டு 3ல் 1 பங்கு உயரத்தில் படுத்துக் கொள் ளலாம். உட்கார்ந்தும் தியானம் செய் யலாம். இதனால் உடல் வலி, களைப்பு நீங்கி புத் துணர்ச்சி உண்டாகும். பிரமிடு சக்தி உடலெங்கும் பரவி இரத்த ஓட்டம் சீராகும்.

➲ 6" அடி பிரமிடு உள்ளே தினமும் 3 மணி நேரம் ஓய்வாகப் படுத்தால் நோய்கள் விரை வில் குணமாகும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். பிரமிடு சக்தி நம்மை எப்போதும் உற்சாகமாக செயல்பட வைக்கும். பிரமிடு சக்தி தீராத புண்களை ஆற்றுகின்றது.

➲ பக்கவாதம் எனும் நோய்க்கு 6 அடி உயர பிரமிடு உள்ளே தினமும் 3 மணி நேரம் படுத்து சிகிச்சை பெற்றுவர நோய் விரைவில் குணமாகும். பிரமிடு உள்ளே தண்ணீரை வைத்து குடித்து வர வேண்டும்.

➲ டென்சனைப் போக்க பிரமிடு உள்ளே தினமும் அரை மணி நேரம் உட்கார வேண்டும்.

➲ நரம்பு தளர்ச்சி மற்றும் உடல் எடை குறைய 6 அடி உயர பிரமிடு உள்ளே தினமும் 3 மணி நேரம் படுத்து சிகிச்சை செய்யலாம்.

*வேல்முருகன்*

**ஸ்ரீதுர்க்கா காயத்திரீ (ராகு பகவான் தோஷம் நீங்க 11 முறை ராகுகாலத்தில் சொல்லவும்)**

ஓம்
காத்யாய நாய வித்மஹே
கன்யகுமாரி தீமஹி
தந்நோ துர்கி ப்ரசோதயாத்

# துய்மையான மனிதர்களால்

## சமுதாயம் மேன்மை அடைகின்றது!



காந்திஜி ஓர் அரசியல் ஞானி. போலித் தனம் இல்லாத அரசியல்வாதியான அவர், எல்லா வற்றையும் ஆன்மிகக் கண் கொண்டு பார்த்தார்.

"1. உழைப்பற்ற செல்வம், 2. நேர்மையற்ற வியாபாரம், 3. ஒழுக்கமற்ற கல்வி, 4. ஈடுபாடற்ற வழிபாடு, 5. மனிதத்தன்மையற்ற அறிவியல், 6. மனச்சாட்சியற்ற இன்பம், 7. கொள்கையற்ற அரசியல் ஆகியவை பாவங்கள்" என்று, மகாத்மா காந்திஜி கூறியுள்ளார்.

இன்றைய அரசியல்வாதிகள் நாத்திகம் பேசுவது, சுயநலத்துடன் வாழ்வது, லஞ்சம், வாங்குவது, ஊழல் செய்வது, கொள்கை இல்லாமல் அரசியல் நடத்துவது ஆகியவைதான் அரசியல் வாழ்க்கை என்று நினைக்கிறார்கள்.

பெரும்பாலும் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும், தங்கள் தங்கள் பங்குக்கு தேசிய ஒற்றுமையைக் குலைத்து வருவதையே நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

"எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே இன்றைய அரசியல்வாதிகள் ஊர் மக்கள் சொத்தை அபகரிக்கிறார்கள்.

இன்று நாட்டின் நலனுக்கு உலை வைப்பவர்களாகவே அரசியல்வாதிகள் பலரும் செயல்படுகிறார்கள்.

"அறியாச(ஜ)னங்கள் இருக்கும் வரை அரியாசனம் எங்களுக்குத்தான்" என்பது, இன்றைய போலி அரசியல்வாதிகளின் கருத்தாக உள்ளது.

அரசியல்வாதிகளில் பலரது வாழ்க்கை, மறைமுகமாக சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாகவே இருக்கிறது.

சுயநலமின்றி தன் உயிர் போல் மக்களைக் கருதுவது. பால் நினைந்தூட்டும் தாய் போல் இருந்து மக்கள் நலனைப் பாதுகாப்பது தான் உண்மையான அரசியல் ஆகும்.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற சங்கப் பாடல், "மன்னன் மக்களுக்கு உயிர் போன்றவன்" என்று கூறுகிறது.

"அயோத்தி மக்கள் உயிராகவும், அந்த மக்களின் உடலாகவும் இருந்து தசரத மன்னன் ஆட்சி செய்தான்" என்று, கம்பராமாயணம் (பால காண்டம், பாடல் எண் 177) கூறுகிறது.

நல்லொழுக்கங்கள், நற்பண்புகள் கொண்ட தலைவர்களால் மட்டுமே சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

நல்ல மனிதர் ஒருவரால் சமுதாயமே நன்மை பெறும் என்பதற்கு, மகாத்மா காந்திஜியின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

இதற்கு மாறாக, சுயநலம் கொண்ட ஓர் அரசியல் தலைவரால் சமுதாயத்தில் எல்லா விதமான சீரழிவுகளையும் ஏற்படுத்த முடியும் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

யார் தங்களுடைய பேச்சை ஆண்டவனுடைய பேச்சுடன் இணைத்துக் கொள்கிறார்களோ, அவர்களுடைய பேச்சு ஒளி பொருந்தியதாகவும், பிறரால் தலைமீது வைத்து மதிக்கத்தக்கதாகவும் விளங்கும். எனவேதான், உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்று பாரதியார் குறிப்பிட்டார்.

நல்ல கருத்துகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதுடன், அதைத் தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுபவர்களே இன்றைக்குச் சமுதாயத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

இந்த உண்மை அரசியலுக்கு மட்டுமின்றி அனைத்துத் துறையினருக்கும் கூடப் பொருந்தும்.



# தொப்புளில் மச்சம்



தொப்புளில் ஒரு சிலருக்கு மச்சம் அமையும். இவ்வாறு மச்சம் அமையப் பெற்றவர்கள் சற்று அசாதாரண குண இயல்பு பெற்றவர்களாக இருப்பார்கள். சாதாரணமாக இவர்கள் மற்ற மனிதர்களைவிட ஏதாவது ஒரு விஷயத்தில் ஏதாவது புதுமையும் புரட்சியும் செய்து கொண்டேயிருப்பார்கள். தங்களுக்கு ஒரு தொடர்பும் இல்லாத விஷயங்களையெல்லாம் தலைமீது வாரிப்போட்டுக் கொண்டு தேவையில்லாமல் அதற்காகப் போராடிக் கொண்டிருப்பார்கள். தங்கள் சொந்த வாழ்க்கை அவ்வளவு நிம்மதியாக இல்லாத நிலையிலும் மற்றவர்கள் வாழ்வு சிறப்பாக அமைய வேண்டும் என்று படாதபாடுபடுவார்கள். இவர்கள் அரசியல் தலைவர்களாக குறிப்பாக தொழிலாளர் தலைவர்களாக வாழ்வதுதான் இவர்கள் இயல்பு நிலையாக இருக்கும். எவ்வளவு, துரிதமாக இவர்கள் ஒரு சாராரின் நன் மதிப்பையும் புகழையும் பெறுகிறார்களோ, அவ்வளவு துரிதமாக வேறொருசாராரின் விரோதத்தையும் பெறுவார்கள். அடிக்கடி நீதிமன்றங்களுக்குப் போவது இவர்கள் வாழ்க்கையாகவே ஆகிவிட்டிருக்கும். ஆனால் ஒரு விசேஷம் என்னவென்றால் தங்களுடைய சொந்த பிரச்சினைகளுக்காக இவர்கள் நீதிமன்றமேறுவது மிகவும் குறைவாகவே இருக்கும். மற்றவர்கள் பிரச்சினைகளில் தீர்வு காணுவதற்காகத் தான் இவர்களுக்கு அடிக்கடி நீதிமன்றங்களுக்குப் படையெடுப்பார்கள். இத்தகையோருக்கு நிரந்தரமான ஒரு வேலையோ தொழிலோ இருக்காது என்றாலும் குடும்ப வாழ்வுக்குத் தேவையான வருமானம் எவ்வாறோ அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும். இவர்களுடைய குடும்ப வாழ்வில் சிறு சிறு சலசலப்புகளும் சங்கடங்களும் அடிக்கடி தலை காட்டச் செய்யும். ஆனால் மன நிம்மதி கெடும் அளவுக்கு இவை வலுப்பெறாமல் மங்கிவிடும். இவர்களுக்கு நுரையீரல் தொடர்பான ஒரு வாத நோய் இலேசான நிலையில் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து இருக்கக் கூடும்.

### தொடைகளில் மச்சம்

பொதுவாக தொடைகளில் மச்சம் அமைவது ஆண்களுக்கு நல்ல பலன்களைத் தரக்கூடியதாக இருக்கும். பெண்களுக்கோ சுமாரான பலன்களைத்தான் சொல்ல வேண்டும். வலது தொடையின் மச்சம் அமையப் பெற்ற ஆண்கள் சஞ்சலமற்ற மன உறுதியைப் பெற்றிருப்பார்கள். தங்கள் வாழ்வில் அமையக்கூடிய கஷ்டநஷ்டங்களைப் பற்றி சற்றும் பொருட்படுத்தமாட்டார்கள். அதே போன்று வாழ்க்கையில் அமையக்கூடிய இன்பமயமான சூழ்நிலையில் மெய் மறந்து நடந்து கொள்ள மாட்டார்கள். இன்பங்களை என்ன உணர்வுடன் வரவேற்கிறார்களோ, அதே உணர்வுடன் துன்பங்களையும் அவர்கள் வரவேற்பார்கள். ஒரு வித தீர்க்க தரிசன மனப்பான்மை இவர்களிடம் அமைந்திருக்கும். தங்கள் சொந்த விஷயமாக இருந்தாலும் பிறர் தொடர்பான விஷயமானாலும், அதன் விளைவு எப்படியிருக்கும் என்று முன்னதாகவே யூகித்துணரும் ஆற்றல் இவர்களுக்கு இருக்கும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அது குறித்து முதலிலேயே தீர யோசித்து இவர்கள் செயலில் இறங்குவார்களாதலால் இவர்கள் முயன்று இறங்கும் எந்த விஷயமும் தோல்வியடைவதே இல்லை.

இவர்கள் சந்தியத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். பிறருடைய மன இயல்புகளை புத்தகம் படிப்பதுபோல் இவர்கள் புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருப்பதால் இவர்களை யாராலுமே ஏமாற்ற முடியாது. இவர்களுடைய மனப்போக்கை அவர்கள் செயலைக் கொண்டு பிறரால் யூகித்துணரவே முடியாது. யாராவது ஒருவரிடம் இவர்கள் மிகுந்த கடுமையாக நடந்து கொள்வதைப் பார்த்தால் அவர்களை வெறுக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றும். ஆனால் அவர்களிடம் தான் இவர்களுக்கு உள்ளார்ந்த அன்பும், பாசமும் இருக்கும்.

எஸ்.ஜனார்த்த...



# கற்பூர தீபஒளி

# கண்களை பாதிக்காது!

பெரியோர்களின் பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வது, கற்பூரத் தீபத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வது ஆகியவை நமது உள்ளத்திலுள்ள பக்தி வெளியேயும் வெளிப்படும் வகைகள்.

கற்பூரத் தீப ஒளியைக் கண்தான் கண்டு அனுபவிக்கிறது. அதனால் அதை, பார்வை பாவமில்லாமல் தூய்மையடைய வேண்டும் என்று கண்ணில் ஒற்றிக் கொள்கிறோம்.

பூஜை முடிந்து கற்பூர ஆராத்தி செய்யும் போது பூஜை பூரணத்துவம் பெறுகிறது. கற்பூர ஜுவாலையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளும் போது, அதன் மூலம் இறைவனின் திருவருள் தன்னை வந்தடைவதாகப் பக்தன் கருதுகிறான்

இந்தப் பழக்கமும் நம்பிக்கையும் இந்தியா முழுவதும் பல காலமாக இருந்து வருகின்றன. இந்தப் பழைய முறையைத் தொடரலாம் என்பதே என் கருத்தாகும்.

"கற்பூர ஜுவாலையைக் கையில் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வது காரணமாகக் கண் ஆரோக்கியம் கெடுமா, இல்லையா?" என்பது பற்றி, கண் மருத்துவர்கள்தான் பதில் செல்ல வேண்டும்.


ஜுவாலையைத் தொட்ட கையைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் போது, அப்படி ஒன்றும் அதில் அதிக உஷ்ணம் இருப்பதில்லை.

கண் ஆரோக்கியம் பாதிக்கும் என்று கருதுபவர்கள், ஜுவாலையைத் தொடுவதோடு தங்கள் வழிபாட்டை முடித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஜுவாலையைத் தொட்டுச் சில விநாடிகளுக்குப் பிறகு உஷ்ணமில்லை என்று நினைக்கும் போது கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம்.எப்போதோ ஒரு முறைதான் நாம் கர்ப்பூர ஜ்வாலையைப் பூஜை சமயத்தில் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்கிறோம். இது காரணமாகக் கண் ஆரோக்கியம் பாதிக்கப் படும் என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. கண் பாதிக்கப்படுவதற்கு வேறு பல காரணங்கள் உண்டு என்பது நிச்சயம்.



கற்பூர ஜுவாலை என்பது ஆத்மப் பிரகாசத்தை நினைவுபடுத்துகிறது.

எப்போதோ ஒரு முறை கற்பூரத் தீபத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்வதை விடவும், மணிக்கணக்கில் அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதால் கண் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது அருகில் அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சி களைப் பார்ப்பதால் கண் ஆரோக்கியம் பாதிக்கப் படுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது.



# வாஸ்து

## சாஸ்திரத்தில் தெருக்குத்து!

வாஸ்து சாஸ்திரத்தில் தெருக்குத்து என்றாலே ஒரு வித அச்சத்தை உண்டு பண்ணுகிற வார்த்தையாகவே இருக்கிறது.

குறுக்குத்தெருக்குத்து, சந்துத்தெருக்குத்து, நெடுத்தெருக்குத்து, இரு பக்கவாட்டுத் தெருக்கள் சந்திக்கும் தெருக்குத்து மூன்று பக்கவாட்டுத் தெருக்கள் சந்திக்கும் முச்சந்தித் தெருக்குத்து நான்கு பக்கவாட்டுத் தெருக்கள் சந்திக்கும் நாற்சந்திக் குத்து கீழிருந்து மேல் நோக்கி வரும் தெருக்குத்து வீட்டின் நுழைவாயிலை எதிர்நோக்கி வரும் தெருக் குத்து. வீட்டின் பின்புறத்தை எதிர்நோக்கி வரும் தெருக்குத்து வீட்டின் பக்கவாட்டுப் பகுதிகளை எதிர்நோக்கி வரும் தெருக்குத்து என தெருக்குத் துகள் பலவகை உள்ளன.

தெருக்குத்து என்றாலே என் இவ்வளவு அச்சம் ஏற்படுகிறதென்றால், தெருக்குத்தால் ஏற் படும் பலவீனமான பின்விளைவுகளே அதற்குக் காரணமாகும்.

தெருக்குத்தில்உள்ள மனையும் வீடும் விற் பனைக்கு வரும்போது கூட தெருக்குத்து இல்லாத வீடு, மனைகளைவிட பல மடங்கு விலை குறைவா கவே வாங்கப்படுகின்றன.

இதிலிருந்து தெருக்குத்தால் ஏற்படும் பொருளா தார இழப்பு எவ்வளவு என்று நாம் புரிந்து கொள் ளலாம்.

தெருக்குத்துள்ள வீட்டைக் குறைந்த விலைக்கு விற்க முன்வந்தால் கூட, அதை வாங்குபவர்கள் குறைவாகக் கிடைக்கிறதே என்று உடனே வாங் கிவிட மாட்டார்கள். தெருக்குத்தால் ஏற்படும் தோஷம் தாக்காமலிருக்க பலவிதமான பரிகாரங் களைச் செய்த பின்னரே வாங்குகிறார்கள். வாஸ்து சாஸ்திரம், தெருக்குத்து போன்றவை அவற்றை



மிகவும் சிரத்தையோடு கடைப்பிடிக்கும் இந்து மத மக்களுக்குத் தான் என்றும், இவற்றில் நம்பிக் கையில்லாத கிறிஸ்தவ, முஸ்லிம் போன்ற மற்ற மதக்காரர்களுக்கு வாஸ்து தோஷம் ஏற்படாது என்றும் சொல்லிக் கொண்டு சில வீடு, மனைத் தர கர்கள் இந்து மக்களிடமிருந்து மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்கி, மற்ற மதத்தினரிடம் பல மடங்கு கூடுதல் லாபத்திற்கு விற்றுக் கொள்ளை லாபம் சம் பாதிக்கின்றனர்.

இங்கு ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். தெருக்குத்து என்பது இந்து மக்களுக்கு மட்டு மல்ல. எல்லா மதத்தினருக்கும் பொருந்தக் கூடிய தாகத்தான் அமைகிறது. இந்துக்கள் அல்லாதோரும் இவ்விஷயத்தில் கவனத்தோடு இருப்பது நல்லது.

வீட்டின் எந்தத் திசையில் இருந்து தெருக்குத்து ஏற்பட்டாலும், தெருக்குத்து கடந்து செல்லும் பகு திக்கு தோஷம் உண்டாகுமென்பது அனுபவ உண்மையாகும். பெரும்பாலும் தெருக்குத்து வீட்டில் வசிப்பர்களுக்குப் பயணங்களின் போது ஆபத் துக்கள், சாலை விபத்துகள் பயண வழி மரணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. முக்கியமாக மேற்கிலிருந்துவரும் தெருக்குத்து என்பது உச்ச பட்ச தோஷத்தை உண்டு பண்ணும் முதலுக்கே மோசம் உண்டு பண்ணுவதுடன் ஆளுக்கும் மோசத்தை உண்டு பண்ணும் குடும்பத்தில் உள்ள யாரேனும் ஒரு ஆளுக்கு மோசம் உண்டு பண் ணினாலும் பரவாயில்லை ஒட்டு மொத்த குடும்ப உறுப்பினர்களுக்குமே மோசத்தை உண்டு பண்ணி விடும்.

தெருக்குத்து தோஷத்தைத் தவிர்ப்பதற்கு தெருக்குத்துக்கு நேராக உள்ள வீட்டுச் சுவரில் சுபதி ருஷ்டி கணபதி, கண் திருஷ்டி, கணபதி, வாஸ்துயந் திரம், வேல், திரிசூலம், கதை, சுத்தி, வாள் போன்ற தற்காப்பு ஆயுதங்களைப் பதிக்க வேண்டும்.

அவற்றிற்கு தினந்தோறும் அல்லது வாரந் தோறும் ஏதோ ஒரு கிழமையிலாவது பூக்கள் வைத்து வணங்கவேண்டும். மேலும் தெருக்குத்து ஏற்படும் இடத்திலிருந்து அதன் ஒளி, ஓட்டம் (பார்வை) நேராக வீட்டைக் கடந்து வெளியேறுமாறு வீட்டின் சுவர்களில் ஓட்டைகள், ஜன்னல்கள் வைக்க வேண்டும். இவ்வாறு அமைத்து, உரிய தற்காப்புப் பரிகாரமும் மேற்கொண்டு வந்தால் தெருக்குத்து தோஷத்திலிருந்து விடுபடலாம்.

மகேஷ்வர்மா


# சுக்கிரன்

## 12ஆம் இடத்தில் இருப்பது சிறப்பா?



பன்னிரண்டாம் இடம் சுக்கிரனுக்கு மறைவு ஸ்தானம் கிடையாது அயன, சயன போக இடமான பன்னிரண்டாம் இடத்தில் சுக்கிரன் அமைவது இல்வாழ்க்கையில் மிகச் சிறப்பான சந்தோஷமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

உதாரணமாக மேஷம் சென்ம இலக்கனமாகி இரண்டு ஏழுக்கு உரியவர் சுக்கிரன் மீனத்தில் உச்சம் பெற்று விளங்கக் கூடிய ஜாதகர் உண்மையிலேயே பெரும் அதிர்ஷ்டசாலியாக விளங்குவார் என்பதில் ஐயமில்லை. அதுவும் இருபது வருடம் கொண்ட சுக்கிரன் திசை நடுவயதில் சுமார் 30 வயதிற்கு மேல் வருமாயின் அவருடைய திசையில் உலகில் அனைத்து வகையான இன்பங்களையும் அனுபவிப்பார்.



அதிலும் குரு போன்ற சுபக்கிரகம் பார்ப்பாராயின் மிகுந்த செல்வாக்கைத் தரும். ரேவதி 4 ஆம் பாதம் பெற்று நவாம்சத்திலும் உச்சம் பெற்று விளங்கக் கூடிய அமைப்பு ஜாதகரை மேல்நிலைக்கு உயர்த்தும்.

**திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீராமவர்மா அவர்களின் ஜாதகம்**

**விளக்கம்**

**இலக்கனம் மேஷமாக அதில் சூரியன் உச்சம்.**

சூரியன் சம சப்தமாக அமைந்து பௌர்ணமி யோகம் பெற்று சந்திரன் கேந்திரம் பெற்று சந்திரனை உச்சம் பெற்ற சூரியன் பார்த்ததாலும் 2, 7 ஆம் அதிபதி சுக்கிரன் உச்சம் பெற்று 12ல் அமைந்ததாலும், இலக்கினாதிபதி செவ்வாய் 10இல் உச்சம் பெற்றதாலும் அரசராக திகழ்ந்தார்.

சூரியன், குரு, செவ்வாய், சுக்கிரன் என நான்கு கிரகங்கள் உச்சம், பௌர்ணமி யோகம், சந்திரனுக்கு 10இல் குரு உச்சம். அமலா யோகம் பெற்றதால் அரசராக இருந்தார்.

குரு 4இல் உச்சம் பெற்று மகா புருஷ யோகங்களின் ஒன்றான ஹம்ஸ் யோகம் பெற்று, செவ்வாய் 10இல் உச்சம் பெற்று மகா புருஷயோகமான ருசக யோகத்தைப் பெற்று 5 கிரகம் கேந்திரம் பெற்றதால் உலகப் புகழ் பெற்றவராகிறார். இவையனைத்தையும் விட வேசி யோகம் எனப்படுகிற மிக உயர்ந்த யோகம் இந்த ஜாதகத்தில் பளிச்சிடுவதைக் காண முடியும். சூரியனுக்கு பன்னிரண்டாம் இடத்தில் சுக்கிரன் இருப்பது இவ்வகை யோகத்தைக் குறிக்கும். உச்சம் பெற்ற சூரியனுக்கு பன்னிரண்டாம் இடமான மீன சுக்கிரன் இருப்பது மேலோங்கிய உயர்வான அதிர்ஷ்டத்தை அள்ளிக் கொடுத்தது எனலாம். இவ்வாறாக 12ஆம் இடத்தில் சுக்கிரன் அமையப் பெறுவது யோகம் மிகுந்த அதிர்ஷ்டத்தையேத் தரும்.மேலும் பன்னிரண்டாம் இடத்தில் சுக்கிரன் இருக்கக்கூடிய

அமைப்பை விளக்குகிற புலிப்பாணி அவர்களின் பாக்களை மேற்கோள் காட்டுவது அவசியமெனப் படுகிறது.

*பாரப்பா பன்னிரண்டில் வெள்ளி நிற்க*
*பாங்கான ரெண்டதனில் குருவுமேற*
*கூரப்பா லெக்னாதி கேந்திர கோணம்*
*கொற்றவனே பாக்கியாதே லாபத்தோடு*
*விருப்பா விவர்நோக்க மிகு பொன்சேரும்*
*விதமான முப்பதினாயிரத்தானாகும்*
*சீரப்பா போகருட கடாட்சத்தாலே*
*சிறப்பாகப் புலிப்பாணி செப்பினேனே*

**புலிப்பாணி**

### விளக்கம்

இலக்கனத்திற்கு பன்னிரண்டாம் வீட்டில் சுக்கிரபகவான் அமைய, இரண்டாம் இடத்தில் குருபகவான் நிற்க அல்லது பார்வை செய்ய, இலக்னாதிபதி அவர் பாபராகவோ அல்லது சுப ராகவோ இருந்து கேந்திர கோணத்தில் அமைந்து நிற்க ஒன்பதுகுடையவனின் பார்வை அல்லது இலாபாதிபதியின் பார்வை பெற்று அமைய இருப்பின் மிகுதியான பொன், ஆபரணம், போன்றவைகள் சேர்ந்து அவற்றின் மதிப்பு முப்பதாயிரத்திற்கும் மேலாக அமையும் என்று புலிப்பாணி முனிவர் கூறுகிறார்.

### உச்சம் பெற்ற சனிக்கிரகம்

சனிக்கிரகம் மகர, கும்ப வீடுகளுக்குரிய கிரகம். சனி துலாம் வீடான சுக்கிரன் வீட்டில் உச்சம் பெறக் கூடியதாகும். 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை 2½வருடங்கள் வரை சனி துலாத்தில் உச்சமாக சஞ்சரிக்கும் இந்த 30 மாதங்களுக்குள் பிறந்தவர்கள் சனியின் உச்ச பலனுக்கு உரியவர்கள். சனி உச்சமாக இருக்கு மானால் உறுதியாக சில பிரபலமான யோகங்கள் உண்டாகும் என நம்பலாம்.



### பாதசாரம்

துலாத்தில் சனி உச்சம் பெற்று நிற்கும் போது சித்திரை மூன்றாம் பாதத்தில் நின்றால் அம்சத்திலும் சனி உச்சம் பெற்று வர்க்கோத்தம நிலையை அடையும். இது சிறப்பானதொரு அமைப்பாகும்.

சுவாதி, இரண்டு, மூன்றாம் பாதங்களில் நின்றால் அம்சத்தில் சனி மகர, கும்பங்களில் ஆட்சி பெற்று விளங்கும். இதுவும் பெரிய அதிர்ஷ்டத்தை வழங்கக்கூடிய அமைப்பாகும். இப்படி விளங்கும் போது அடையும் பலன்களும் மேலும் சிறப்பாக விளங்கும் கூடுதலாகவும் அமையும்.இவ்வகையான இலக்கினங்களுள் ஏதேனும் ஒன்று சென்ம இலக்கினமாக அமைந்திருக்குமானால்

1. கன்னிக்கு இரண்டாம் இடத்தில்
2. தனுசுக்கு பதினோராம் இடத்தில்
3. கும்பத்துக்கு ஒன்பதாம் இடத்தில் சனி உச்சம் பெற்று விளங்கும்
4. மிதுனத்துக்கு ஐந்தாம் இடத்தில்

யோக பலன்கள் மிகுதியாக கிடைக்க வாய்ப்புகள் உண்டு. இவையே சென்ம இராசிகளானாலும் பலன்கள் மிகுதியாகவே கிடைக்கும். சனி உச்சமாக நிற்கப் பிறந்தவர்கள் நல்ல திறமைசாலியாகவும் ஆரோக்கியமான வலுத்த உடலையும் பெற்றிருப்பார்கள். நீண்ட ஆயுள், உண்மை உள்ளவர்களாகவும் பல வகையிலும் மக்கள் ஆதரவைப் பெற்றவராகவும் இருப்பர்.

சனி கேந்திரத்திலாவது. மூலத் திரிகோணத்திலாவது உச்சமாக இருந்தால் துன்பமற்ற அரசுத் தலைவனாக விளங்கக் கூடிய வாய்ப்பு உண்டாகும். ஏதாவது நல்ல அரச பதவி நிச்சயம் கிடைக்கும்.

சனி உச்சமானவர்கள் சலியாமல் உழைக்கும் மனோதிடம் பெற்றவர்கள். தங்கள் எண்ணங்களை அடையும் வரையும், சலிப்பில்லாமல் எந்த இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் கடுமையாக உழைப்பார்கள். மேலும் கீழ் மட்டத்து மக்களின் அன்பையும் தொழிலாளரின் ஆதரவையும் பெற்றுத் தரும். சனி கேந்திரத்தில் உச்சமாக இருந்து அமைச்சர்களையும் காண முடியும். அதே சமயம் சன்னியாசியானவர்களையும் பார்க்க முடியும்.

**டொக்டர் கச்சனம் நடராஜன்**

### ஸ்ரீமஹா ப்ரத்தியங்கிரா தேவியின் மூலமந்திரம்

ஓம் க்ஷம் பக்ஷ ஜிஹ்வே
கராள தம்ஷ்ட்ரே ப்ரத்யங்கிரே
க்ஷம் ஹ்ரீம் ஹூம் பட்



# மிதுனம்

மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

எண்ணங்களில் தெளிவாக முடிவுகளை எடுக்கும் மிதுன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தனஸ்தானத்தில் குருவும் லாபஸ்தானத்தில் சூரியன், புதன், செவ்வாயும் இணைவு பெறுவது பல தொழில்களில் ஈடுபாடு கொண்டு வருவாயை பெருக்கி கொள்வீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் உரிமைகளுக்கு உங்களின் ஒத்துழைப்பு மிகவும் பயனுள்ளதாக அமையும். வரவுக்கு மீறிய செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்வீர்கள். உறுதியான மனநிலைகளை கொண்டு மன வலிமையுடன் செயல்படுவீர்கள். பண வரவு நன்றாக இருக்கும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

அரசியலில் இருப்பவர்களுக்கு புதிய பதவி அந்துஸ்துகள் உண்டாகும். மதிக்கத்தக்க வகையில் இருப்பீர்கள். அரசாங்க உத்தியோகம் சிலருக்கு கிடைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் கூடுதல் முதலீடுகளை போடுவதும் வியாபாரத்தை பெருக்கி பண வரவுகளை அதிகரித்துப் புதிய தொழிலில் கவனம் செலுத்தியும் வருவீர்கள். கைவினை பொருட்களுக்கு கூடுதல் ஆதாயம் கிட்டும். வங்கி கடன் எளிமையாக கிடைக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் அதிக சிரமங்களை அடைந்தாலும் அதனை வெளிப்படுத்தாமல் கலை மீது நம்பிக்கை வைத்து செயல்படுவீர்கள். வங்கி மூலம் கடன் பெறுவதுடன் பொருளாதார வளர்ச்சியையும் பெறுவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களிடம் பண விடயத்தில் கவனமுடன் இருந்து செயல்படுவீர்கள். சுயதொழிலுக்கான முதலீடுகளுக்கு வங்கிகள் மூலம் கடன் வசதி கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

### மாணவர்களுக்கு

வணிகம், மருத்துவம், விளையாட்டு போன்ற கல்வியில் வளர்ச்சியை பெறுவீர்கள். உங்களின் முன்னேற்றத்திற்கு பலர் வந்து உதவுவார்கள்.

இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

09.05.2015 சனி மாலை 05.29 முதல் 11.05.2015 திங்கள் இரவு 08.37 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்

எதிரிகளின் பாதிப்பிலிருந்து உங்களை காப்பாற்றி கொள்வீர்கள். வரவுக்குள் செலவுகளை சுருக்கி கொள்வீர்கள். பொருளாதாரத்தில் நன்மை உண்டாகும்.

### திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

திடீர் யோகங்கள் உண்டாகும். கவலைகளை மறந்து தீயவர்களின் பழக்க வழக்கங்களில் சில நேரம் சிறு தவறுகளை செய்ய வேண்டி வரும்.

### புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும் வாய்ப்பு அமையும். அரசாங்க காரியங்கள் அனுகூலமாக அமையும். பொருளாதார நிலை வளர்ச்சியை தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பச்சை, ஆரஞ்சு, வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்:** மேற்கு, வடமேற்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** புதன், வியாழன், திங்கள்


### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்



திங்கட்கிழமை ராகு காலத்திலும், வியாழக் கிழமை காலை 06.00 07.00 நேரத்திலும் நவகிரக கேதுவுக்கு பலவர்ணம் பூமாலை சாத்தி தேங்காய எண்ணெய்யில் விளக்கு போட்டு வழிபாடு செய்து வர தொழில் இருந்து வரும் பிரச்சினைகள் தீருவதுடன் தொழில் விருத்தியும் திடீர் பண வரவு உண்டாகும்.

# பக்திக்கு அகப்படும் இறைவன்!





சபரி கொடுத்த பழங்கள் விதுரர் கொடுத்த மிக எளிய உணவு (பழங்கள். சிலர் ஒரு கோப்பை கஞ்சி என்று கூறுவார்கள்), குசேலரின் அவல் ஆகிய அற்பப் பொருள்களுக்குப் பின்னணியில் அவர்கள் கொண்டிருந்த பக்திக்கே இறைவன் கட்டுப்பட்டான்.

ஸ்ரீராமபிரான் இலங்கைக்குச் செல்வதற்கு அணை கட்டினார். அந்த பணிக்கு அணிலும் தன்னால் இயன்ற சிறு உதவியைச் செய்தது. அதை ஸ்ரீராமபிரான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். இப்படி எத்தனையோ அருளாளர்களை உதாரணமாகச் சொல்லிக் கொண்டே போகலாம். "யார் எனக்கு இலை, மலர், கனி அல்லது நீரைப் பக்தியுடன் படைக்கிறானோ, அத்தகைய தூய பக்தனின் அன்பளிப்பை விருப்பத்துடன் நான் ஏற்றுக்கொள்கிறேன்" கீதை 926

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே**
**அன்பெனும் வலைக்குட்படும் பரம்**
**பொருளே அன்பெனும் கரத்தமர் அமுதே**
**அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே**
**அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே**
**அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே**
**அன்புரு வாம் பரசிவமே. ஸ்ரீ திருவருட்பா**

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்விதம் கூறியுள்ளார்.

"ஒரு எஜமானனுடைய வேலைக்காரன் ஒரு சமயம், எஜமானின் வீட்டுக்கு வந்து மிகுந்த பய பக்தியுடன் நின்றான். அவன் தன் கையில் எதையோ துணியால் மூடி வைத்திருந்தான்.

"எஜமானன் அவனைப் பார்த்து, "என்ன விஷயம்? கையில் என்ன வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"வேலைக்காரன் துணி மூடிப்பிலிருந்து ஒரு இலந்தைப் பழத்தை எடுத்து, "இதை எஜமான் சாப்பிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். வேலைக்காரனின் பக்தியைப் பார்த்து மகிழ்ந்த யஜமான் அந்த இலந்தைப் பழத்தை மிகவும் அன்புடன் ஏற்று, "அடேய்! என்ன அழகான பழம்! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று வினவினான். இது போலவே இறைவனும் பக்தனுடைய இதயத்தைத் தான் பார்க்கிறான். இறைவனின் மகிமைகள் எல்லையற்றவை என்றாலும் அவன் பக்திக்கு அகப்படுகிறான்."



# குடும்ப பிரச்சினையை இன்பமாக மாற்றும் கலை!

நீங்கள் பெற்றோர் மற்றும் உடன் பிறந்தவர்கள் என்ற சொன்னதால் உங்களுக்கு சாக்குபோக்கு சொல்ல ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவர்களை நீங்கள் தேர்வு செய்யவில்லையே! அதுவே உங்கள் மனைவி. கணவராய் இருந்தால், இன்னொருவர் மேல் பழிசொல்லி தப்பித்துக் கொள்ள இயலாது.

உங்கள் எல்லைகளை அறிந்து கொள்ள, குடும்பம் நல்லதொரு பயிற்சி மையம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்களுடன் மட்டுமே வாழ்ந்து கூட்டுப்புழுவாய் மாறிவிட்டீர்கள் எதைச் செய்தாலும் இன்னொருவர் பாதிப்படையும் படியான சந்தர்ப்பத்தை உருவாக்கி விடுகிறீர்கள். அவர்கள் செய்யும் ஒரு சில விஷயங்களை வெறுத்தாலும், அவர்களுடன் கூடி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் உங்களுக்கு இருக்கிறது. யாரோ ஒருவரை பிடிக்காமல் போனால், வெளியே வீசிவிட இது 10,000 பேர் கொண்ட பேஸ்புக் குடும்பம் அல்லவே!

குடும்பம் என்பது உங்கள் விருப்பு வெறுப்புகளை கடந்து, வளர்வதற்கான ஒரு இடம். விருப்பும் வெறுப்பும் உங்களுக்குள் நிலவும் நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலேயே எழுகிறது. விருப்பு வெறுப்பிற்குள் உழல்பவராய் நீங்கள் இருந்தால், விழிப்புணர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏதோ ஒன்றை நீங்கள் விரும்பவோ, வெறுக்கவோ செய்கையில் இயல்பிலேயே நிர்ப்பந்தத்தால் செயல்படுபவர் ஆகிவிடுவீர்கள். உங்களுக்குப் பிடித்தவற்றை நோக்கி சாதக மாயும், பிடிக்காதவற்றின் மீது எதிர்த் தாக்குதல் செய்யும் மனநிலையிலும் செயல்படுவீர்கள்.


### விழிப்புணர்வாய் இரு...

உங்களுக்குப் பிடித்திருக்கிறதோ இல்லையோ உங்கள் குடும்பத்தாருடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாழ்ந்தாக வேண்டிய கட்டாயத்திலேயே இருக்கிறீர்கள். அதனை கசப்பான அனுபவமாக மாற்றிக் கொள்கிறீர்களா அல்லது உங்கள் விருப்பு வெறுப்புகளைகடந்து செல்ல பயன்படுத்துகிறீர்களா என்பதே உங்கள் முன் தொக்கி நிற்கும் கேள்வி.

உங்கள் கணவர் பற்றிய சில அம்சங்கள் உங்களுக்கு பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். சில காலம் கழித்து, "அவர் அப்படித்தான் பரவாயில்லை" என்று. வெறுப்பான மனநிலையை தாண்டி நீங்கள் வளர்வது அவசியம். "ஐயோ, எனக்கு வேறு வழியே இல்லையா, இவருடன் வாழ்ந்தே தீர வேண்டுமா?" எனும் மனநிலையில் இருந்தால், பிறருடன் வாழும் போது, விழிப்புணர்வுடன் வளர்வீர்கள்.

கட்டாயத்தின் பேரில் செயல் புரியாமல், விழிப்புணர்வாய் நகர்வதே ஆன்மீகப் பாதையில் செல்வதற்கு உண்டான சிறந்த வழி, அந்நிலைக்கு பயிற்சியளித்துக் கொள்ள குடும்பம் சிறந்த இடம். இதில் நீங்கள் எப்பேர்ப்பட்ட குடும்பத்தில் இருந்தாலும் அது சிறிது காலத்திற்குத்தான். அதனைப் பயன்படுத்தி உங்கள் விருப்பு வெறுப்புகளைத் தாண்டி நீங்கள் வளர வேண்டும்.

உங்களைச் சுற்றியுள்ள மக்கள் உங்களுடன் உடன் படாவிட்டால் நீங்கள் நல்ல இடத்தில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம். "உங்களால் யாருடன் ஒன்றி வாழமுடியாதோ அவருடன் சந்தோஷமாய் வேலை செய்ய கற்றுக் கொள்ளுங்கள். அது அற்புதங்களை நிகழ்த்தும்" என்று ஆசிரமவாசிகளிடம் நான் சொல்வதுண்டு. உங்களைப் போன்றவர்களுடனே இருக்க நினைத்தால், அது போன்ற மக்களுடனேயே எப்போதும் வாழ வேண்டும் என்ற நிர்பந்தத்தை அது ஏற்படுத்திவிடும். குடும்பம் பிரச்சினையல்ல. ஆனால் உங்களுக்கு பிடித்தமான மக்களுடன் மட்டுமே சேர்ந்து வாழ வேண்டும் என்று நீங்கள் நினைப்பதே பிரச்சினை. உங்களுக்கு பிடித்தவற்றை தேர்ந்தெடுக்காதீர்கள். உங்கள் கைகளில் என்ன உள்ளதோ அதனை அற்புதமாய் மாற்றியமைத்துக் கொள்ள என்ன செய்வதென்று பாருங்கள். உங்களுக்கு கிடைப்பது என்ன எனப்பார்ப்பது உங்கள் வேலை அல்ல. அதிலிருந்து நீங்கள் எதை உருவாக்குகிறீர்கள் என்பதே முக்கியம். அதுவே உங்கள் வேலை. அன்றைய வானிலை எவ்வாறு உள்ளதோ அதைப் பொறுத்து, "இது சிறப்பான நாள்," இது மோசமான நாள்," என்று மக்கள் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கக் கூடும். மேகங்கள் சூழ்ந்ததால் அது மோசமான நாள் ஆகாது. வானிலையை இயற்கையிடமே விட்டு விடுங்கள். ஒரு நாள் வெயில், மறுநாள் மேகம், மற்றொரு நாள் மழை, வேறொரு நாள் பனி, இது இயற்கையின் பணி. வெயில் அடித்தால் மேல் கோட் இல்லாமல் செல்லுங்கள். மழை பெய்தால் ரெயின்கோட்டுடன் செல்லுங்கள். பனி பொழிந்தால் சறுக்கி விளையாடும் பலகையுடன் செல்லுங்கள். சூழ்நிலை எப்படி இருந்தாலும் அந்நாளினை நல்ல நாளாக மாற்றிக் கொள்ளுங்கள். அதேபோல, உங்களைச் சுற்றி தற்போது யார் உட்கார்ந்து இருக்கிறார்கள்



என்று கவலை கொள்ள வேண்டாம். அந்த மனிதருடன் உட்கார்ந்திருக்கும். அந்தச் சமயத்தை அற்புதமான தருணமாக மாற்றிக் கொள்ளுங்கள். எல்லோரும் வருகிறார்கள், போகிறார்கள். நீங்களும் வருகிறீர்கள், போகிறீர்கள். யார் இங்கிருந்தாலும், இந்தக் கணத்தில் அவரிடமிருந்து சிறந்ததையே பெற்றிடுங்கள். உங்களுக்கு வேறு சாய்ஸ் இருந்தால் மாறிக் கொள்ளலாம். ஆனால், சந்தோஷமாய் இருக்க வேண்டும். ஏதாவது மாற்றம் இருந்தால் அது விழிப்புணர்வாய் நடக்கட்டும். கட்டாயத்தின் பேரில் மாற்றம் நடக்கக் கூடாது. உங்கள் தேர்வின் அடிப்படையில் மாற்றம் நடக்கட்டும். தற்போது நீங்கள் இருக்கும் இடத்தில் வேண்டிய படி இருக்க முடியாத பட்சத்தில் வேறெங்குமே உங்களுக்கு வேண்டியதை உங்களால் உருவாக்கிக் கொள்ள இயலாது.

## பெற்ற பலன்களை அளவிடுங்கள்...

ஆன்மீகம் உங்களுக்கு வேலை செய்கிறதா இல்லையா என்பதை எப்படி கண்டு கொள்வீர்கள்! பலன்களால் தானே! நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் அதே மக்களுடன் உங்களால் இன்னும் கொஞ்சம் சந்தோஷமாகவும், சுகமாகவும் இருக்க முடிந்தால், காலையில் எழும்போது அவர்கள் உங்களை எரிச்சலடையச் செய்யாவிட்டால், நீங்கள் முன்னேறுகிறீர்கள் என்று அர்த்தம். எல்லா இடத்திலும் பலன்களை வைத்தேர முன்னேற்றத்தை கணக்கிடுகிறார்கள். ஆன்மீகத்திலும் அப்படியே!

சொர்க்கவாசலில் பெரிய வரிசையொன்று நின்று கொண்டிருந்தது. உள்ளே சேர்த்துக் கொள்வதற்கு முன் அனைவரது கணக்குகளையும் வாசலிலேயே சரி பார்த்துக் கொண்டிருந்தார் புனித பீட்டர். இத்தாலியில் இருக்கும் வேகாஸ் நகரிலிருந்த டாக்ஸி டிரைவர் வந்திருந்தார். அவருக்குப் பின் பிஷப் "இவன் எதற்காக சொர்க்க வாசலுக்கு வந்தான். இவனுக்கு இங்கு என்ன வேலை" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார். ஆனால் கடவுளின் வழி சற்றே விசித்திரமானது என்பது உங்களுக்கே தெரியும். விதியின் வலிமையை நொந்து கொண்ட டாக்ஸி டிரைவர், "சரி நீங்கள் என்னை எங்கு வேண்டுமானாலும் அனுப்புங்கள்." என்றார். கஸ்டமர்கள் எங்கு செல்ல சொல்கிறார்களோ அதற்கு பழகியவர் தானே டாக்ஸி டிரைவர். அவருக்கென்று போக வேண்டிய இடமொன்றும் இல்லையே! அவருடைய பணி அப்படி அல்லவா? டிரைவருடைய கணக்குகள் சரி பார்க்கப்பட்டன. பெரிய புன்னகையுடன் பீட்டர் டிரைவரை வரவேற்று அருமையான பட்டு உடுப்பை வழங்கினார். அழகு தேவதைகள் இருவர் அவரை சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றனர்.

மிகுந்த ஆச்சரியத்துடன் இதனைப் பார்த்துக் கொண்டிருந்தார் பிஷப். அவருடைய முறை வந்தபோது, பிஷப்பை வரவேற்ற பீட்டர், அவருக்கு வீட்டுவேலை செய்பவருடைய உடையையும், தரை துடைப்பானையும் வழங்கினார். "127ஆவது கூடத்தைப் போய் கூட்டு" என்று கட்டளையிட்டார். கலங்கிப் போன பிஷப், "பாவப்பட்ட நகரத்திலிருந்து வந்த அந்த டிரைவருக்கு சொர்க்கம். நான் ஒரு பிஷப் எனக்கு தொழிலாளியின் உடையும், வேலையுமா? எதனால்?" என்று பதறினார். புனித பீட்டர். பிஷப்பை பார்த்து, "அமைதியாக நான் சொல்வதைக் கேள், உன்னால் என்ன பலன் கிடைத்தது என்று தான் நாங்கள் பார்க்கிறோம். நீ பிரசங்கம் செய்த போதெல்லாம் மக்கள் தூங்கிப் போயினர். ஆனால் டிரைவர் டாக்ஸி ஓட்டிய பேதெல்லாம் "ஐயோ கடவுளே, ஐயோ கடவுளே" என தெய்வத்தை அழைத்தனர்," என்றார்.

அதனால், விளையும் பலன்களின்படியே செல்லுங்கள். உங்கள் ஆன்மீகச் செயல்முறை வேலை செய்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ள, வெளிசூழ்நிலை என்னவாக இருந்தாலும் உங்கள் உள்நிலையில் பாதிப்பில்லாமல் இருக்கிறீர்களா என்று பாருங்கள். உங்களுக்குள் போராட்டம் இருந்தால், நீங்கள் இன்னும் பிரயத்தனப்பட வேண்டும். யாரும் உங்களை அடித்துச் சித்திரவதை செய்து விடவில்லை. வார்த்தைகளை வீசுகிறார்கள். அவ்வளவுதானே! அவர்களால் சிறப்பாக செய்ய முடிந்ததைச் செய்கிறார்கள். உங்களுக்கு எதைச் சிறப்பாக செய்யத் தெரியுமோ அதை நீங்கள் செய்யுங்கள். உங்களை சிறப்பாக வைத்துக் கொண்டால் அவர்களையும் மாற்றக்கூடிய வாய்ப்பு உங்கள் கைகளில் உள்ளது. யாரோ ஒருவர் உங்களைப் பார்த்து கூச்சலிடலாம். வசை பாடலாம், ஆனால், உங்களுக்கு நீங்களே ஒரு அகராதியை உருவாக்கிக் கொண்டு அத்தனை அபத்தமான வார்த்தைகளையும்இனிமையானவைகளாகமொழி பெயர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் உங்களுக்கு இருக்கிறது தானே? வேண்டுமானால், அனுதாபங்களை அவர்களுக்கு வழங்கலாம்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**



# புண்ணிய சக்தியுடன் பயணம் செய்ய வேண்டும்!

முடிந்தவரை இரவு நேரப் பிராயணங்களைத் தவிர்த்தல் வேண்டும். பகல் பிரயாணங்களிலும் தனித்துச் செல்வதைவிட, இரண்டு அல்லது பலர் சேர்ந்து செல்வதே உத்தமமானதாகும். பயணச் செலவுகள், வேலையின் தன்மை இவற்றைப் பார்க்கும் போது இது "சாத்தியமானதா" என்று தோன்றும்.

தற்காலத்தில் விபத்து, ஸ்டிரைக், மோசமான சாலை, நிலைமைகள், கொலை, கொள்ளை, வன்முறைச் செயல்கள் போன்ற துன்பங்களைப் பார்க்கும் பொழுது தான் ஒரு மனிதன் எத்தனை புண்ணிய சக்தியுடன் பயணம் சென்று திரும்பி வர வேண்டியுள்ளது என்பது புலனாகும்.

அபரிமிதமான புண்ணிய சக்தி இருந்தாலல்லவா ஒவ்வொரு பிரயாணத்திற்கும் அதைச் செலவழித்து தற்காத்துக் கொள்ள இயலும்! இவ்வாறாக நம் வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியைக் கழிப்பதற்கும் அளவிறந்த புண்ணியம் தேவைப்படுகிறது. எனவே இப்பிறவியில் நாள்தோறும் புண்ணியம் தரும் நற்காரியங்களையும், பூஜைகளையும் செய்தால்தான் ஓரளவு துன்பமின்றி வாழலாம்.

நற்காரியங்கள் செய்யாது தானுண்டு தன் வேலையுண்டு என்று வாழ்வதால் ஒரு பலனுமில்லை. இவ்வாறாக வாழ்வதால் பூர்வ ஜென்மப் புண்ணியங்கள்தான் விரைவில் கழியுமே தவிர

வரும் பிறவிகளுக்கோ, ஏன் இப்பிறவியின் இறுதியிலோ பல துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.

1. இரவு நேரங்களில் தீய சக்திகளின் ஆதிக்கம் (Negative Forces) அதிகம் என்பதாலும்...

2. பிரயாணம் என்பது எதிர்ப்புகளைச் சமாளித்தல் என்பதாலும் மனிதன் விழிப்பு நிலையில் இறை நினைவுடன் காயத்ரீ மந்திரம், தியானம், நாடி ஸ்மரணம் போன்றவற்றுடன் பிரயாணம் செய்தலே அவனைக் காக்கும். இயன்றவரையில் பிரயாணத்தில் உறங்குவதைத் தவிர்க்க வேண்டும். எனவே பகல் நேரத்தில் விழிப்பு நிலைப் பிரயாணமே சிறந்தது. உறக்கத்தில் மனிதன் தன் தேகத்தை மறப்பதால் அவனால் பிரார்த்திக்க இயலாது.

3.பிரயாணத்தில் உள்ள ஆபத்துக்களைக் கருதியே இராகு காலம், வார சூலை போன்றவற்றைக் கணித்து பிரயாணம் மேற்கொள்கின்ற நற்பழக்கத்தை நம் பெரியோர்கள் வகுத்தனர். சூலை இரகசியங்களைச் சற்குருவை நாடி அறிய வேண்டும்.

4. இரவு நேரத்தில் பிரயாணம் மேற்கொள்ள வேண்டி வந்தால் இரயில் பிரயாணமே ஏற்றதாகும். செல்ல வேண்டிய ஊரின் திசையை அறிந்து அந்த திக்கிற்குரிய திக்தேவதையைத் தியானிக்க வேண்டும். இரயில் பிரயாணத்தில் ஆபத்துக்கள் ஓரளவு குறைவு என்றாலும் இதிலும் இறை நினைவைப் பெருக்கும் பூஜைகளைச் செய்தாக வேண்டும்.

**சுவாமி பொன்னையாபிள்ளை**



**ஸ்ரீகிருஷ்ணர்**
**(புத்திரபாக்கியம் பெற 108 முறை சொல்லவும்)**

ஓம்
தாமோதராய வித்மஹே
ருக்மணி வல்லபாய தீமஹி
தந்நோ க்ருஷ்ண ப்ரசோதயாத்



# பாராட்டத்தக்கவர் யார்?



ஒரு நகரத்தில் வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பருவ வயதில் ஒரு மகள் இருந்தாள். அவளுக்குத் திருமணம் ஆகவில்லை. ஆனால், அவள் ஒரு பிராமண இளைஞனோடு இரகசிய உறவு கொண்டிருந்தாள். அயலூரில் இருந்து வந்திருந்த வணிகன் ஒருவன், அந்தப் பெண்ணை மணம் புரிந்து கொண்டு சில நாட்களில் மனைவியை அழைத்துக் கொண்டு சொந்த ஊருக்குப் புறப்பட்டான்.

கணவன் வீட்டுக்குச் சென்றதும், தன்னுடைய ஆசை நாயகனைக் காண இயலாத ஏக்கத்தினால், அவள் இறந்து விட்டாள். அவள் இறந்த செய்தியை அறிந்த ஆசை நாயகனான பிராமணனும் இறந்து போனான். தன்னுடைய புதுமனைவி இறந்த துக்கம் தாளாமல், அவளுடைய கணவனான வணிகனும் இறந்து விட்டான்.

"இறந்து போன மூவரில் பாராட்டத்தக்கவர் யார்? என்று கேட்டது வேதாளம். "இரகசிய தொடர்பு கொண்ட பிராமணனும், அந்தப் பெண்ணும் இறந்து போனதில் வியப்பு இல்லை. மணம் செய்து கொண்டு சில நாட்களே அவளோடு வாழ்ந்தவன் தன் மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொள்ளாமல், அவள் இறந்ததும் தானும் உயிர் துறந்த கணவனே பாராட்டத்தக்கவன்" என்று கதையை விடுவித்தான் விக்கிரமாதித்தன்.

உடனே வேதாளம் கட்டு அவிழ்த்துக் கொண்டு ஓடிப் போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

விக்கிரமாதித்தன் அதைத் தொடர்ந்து போய் கட்டித்தூக்கிக் கொண்டு வந்தான்.

வேதாளம் மறுபடியும் கதை சொல்லத் தொடங்கியது.



## தன ஆகர்ஷண கணபதி மந்திரம்

ஓம் க்லாம் க்லீம் கம் கணபதயே
வரவரத மம தன
தான்ய சம்ருத்திம் தேஹி
தேஹி ஸ்வாஹா

# வரமும் சாபமும்

## உங்கள் கையில்!



சுகிசிவம்
கேள்வி பதில்கள்

பழைய ஜன்மங்களின் பாவ புண்ணியங்களுக்கான பலனை நுகரவே இந்த ஜன்மம் தரப்படுகிறது. அது தண்டனை என்று ஏன் கருத வேண்டும்? புண்ணியங்களின் பலனாக மகிழ்ச்சியும் வரும் செல்வமும் வரும்.

அதனால் அகந்தை அடைந்து ஆட்டமாக ஆடினால் புண்ணியமும் தண்டனையாக வடிவம் பெறும். அதனால் அப்படி மிரட்டி வைத்திருக்கிறார்கள்.

அப்பர் பெருமான் தில்லை நடராஜனைத் தரிசித்த பின் இந்தக் காட்சியை மீண்டும் மீண்டும் தரிசிக்க மனிதப்பிறவியும் வேண்டுவதே இம்மா நிலத்தே என்று பாடுகிறார். அப்படியானால் பிறவி வேண்டும் என்று புண்ணியவானே பாடுகிறாரே எதையும் வரமாகவோ சாபமாகவோ ஆக்கிக் கொள்வது உங்கள் கையில் இருக்கிறது. ஆங்கிலேயர்கள் பண்டித ஜவஹர்லால் நேருவைச் சிறையில் அடைத்தார்கள். புத்தகம் எழுதப் பயன்படுத்திக் கொண்டார். வினோபா ஜியைச் சிறையில் வைத்தார்கள். அங்கு அவர் ஆற்றிய உரைகளே கீதைப் பேருரைகள் என்கிற அழியாத பொக்கிஷம் ஆனது. பகத்சிங்குக்குத் தூக்கு தண்டனை கொடுத்தார்கள்.



அவரது உடல் எடை வாரா வாரம் நிறுத்துப் பார்த்த போது கூடிக் கொண்டே போனது. ஆச்சரியப்பட்டு தூக்கு தண்டனைக் கைதிக்கு மரண பயத்தால் எடை குறையுமே ஒழிய கூடாதே என்றார்கள். தாய் நாட்டிற்காகச் சாகப் போகிறேன் என்ற மகிழ்ச்சியில் எடை கூடு கிறது என்றான். எதுவுமே தண்டனையா? பரிசா? என்பதை உங்கள் வாழ்க்கை முறை தான் தீர்மானிக்கிறது.



சுகி.சிவம்

## சகல காரியங்களும் ஸித்திக்கும் ஸ்ரீவித்யா மகா மந்திரம்

ஓம் நமோ பகவதி சர்வ மங்களதாயினி
சர்வயந்த்ர ஸ்வரூபிணி சர்வமந்திர ஸ்வரூபிணி
சர்வலோக ஜனனீ சர்வாபீஷ்ட ப்ரதாயினி
மஹா த்ரிபுரசுந்தரி மஹாதேவி
சர்வாபீஷ்டம சாதய சாதய ஆபதோ நாசய நாசய
சம்பதோப்ராபய ப்ராபய சஹகுடும்பம் வர்தய வர்தய
பாஹிமாம் ஸ்ரீதேவி துப்யம் நமஹ
பாஹிமாம் ஸ்ரீதேவி துப்யம் நமஹ
பாஹிமாம் ஸ்ரீதேவி துப்யம் நமஹ



# தூய அன்பின் வெளிப்பாடே மனிதாபிமானமாய் பரிணமிக்கிறது!

ஒரு மலர் மலர்ந்து மணம் வீசுவது போன்று, மனிதனின் இதயத்தில் உள்ள அன்பு வெளிப்படும் நிலையே "மனிதாபிமானம்" எனப்படுகிறது.

மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் மனைவி, மக்கள் உட்பட எல்லோருடனும் பழக வேண்டும்.



அன்புதான் வாழ்க்கையை அர்த்தமுள்ள தாக்குகிறது. முதல் நிலையில், உரிமை உடையவர்கள் மீது அன்பு தோன்றுகிறது. பிறகு இரண்டாம் நிலையில், உரிமை இல்லாதவர்களிடமும் அன்பு தோன்றுகிறது. முடிவில் மூன்றாம் நிலையில், எல்லா உயிர்கள் மீதும் நமது அன்பு பரவிப் பரிணாம வளர்ச்சி பெறுகிறது.


இந்த அன்புதான் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அருமருந்து போல் இருந்து, மனித குலத்தை வாழ வைத்திருக்கிறது, இப்போதும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது, இனியும் வாழ வைக்கப் போகிறது. "வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை. அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு" என்று, மகாகவி பாரதியார் குறிப்பிட்டார்.

"அன்பே சிவம்" என்பது ஆன்றோர் வாக்கு.

"அன்பும் சிவமும் வேறு வேறு என்பவர்கள் அறிவுத் தெளிவற்ற மூடர்கள்" என்கிறார் திருமூலர்.

எனவே சுயநலம் கலவாத தூய அன்பு என்ற பண்பை, ஆன்றோர் இறைவனுடன் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். இந்த உலகில் மனிதாபிமானம் மட்டுமே விலை மதிப்பற்றது. இறைநெறியை உரிய முறையில் பேணி வளர்த்தால் மனிதாபிமானம், மனித நேயம் வளர்ந்தோங்கும்.

# எல்லோரும் நம்மிடம் வியாபாரம் செய்ய




வியாபாரம் என்பது போட்டி பொறாமை நிறைந்தது. ஒரேவித வியாபாரத்தைப் பலர் செய்யும் பொழுது யாருக்கு அதிகமாக வியாபாரம் நடக்கிறதோ அவர் அதிக லாபம் ஈட்ட முடியும்.

எல்லோருக்கும் லாபம் அதிகம் கிடைக்க வேண்டும். ஆனால், கிடைப்பதில்லை. பலர் நம் கடைக்கு வந்தால் மட்டுமே வியாபாரம் சூடு பிடிக்கும். மேலும் மேலும் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும். அதற்கு என்ன வழி? கீழ்க்கண்ட யந்திரத்தைத் தாமிரத் தகட்டில் எழுதிக் கொள்ள வேண்டும். பூஜை அறையை நன்கு சுத்தம் செய்து மெழுகிக் கோலமிட வேண்டும். அவ்வாறு கோலமிட்ட பின் எந்திரத் தகட்டை ஒரு பீடத்தின் மேல் வைக்க வேண்டும்.

பின் தூப தீபம் காட்டி பூஜையைத் தொடங்க வேண்டும். அர்ச்சிப்பதற்குச் செவ்வரளிப் பூவைப் பயன்படுத்தலாம்.

### சிவ சம்புவராகி யந்திரம்

நிவேதனப் பொருள்களாக சுண்டல், வடை அல்லது அதிரசம் இருக்கலாம். பின் கீழ்க்கண்ட மூல மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க வேண்டும். அவ்வாறு ஜெபிக்கும் போது மனம் ஒரு முகப்பட்ட நிலையில் இருக்க வேண்டும்.




சிவ சம்புவராகி யந்திரம்


### சிவ சம்புவராகி யந்திரம்

ஓம் ஐம் க்லீம் சௌம் சிவசம்புவராகி வாவா ஹும்பட் ஸ்வாஹா

மேற்கண்ட மூலமந்திரத்தை 1008 முறை ஜெபித்த பின் நிவேதனம் செய்து தூபதீபம் காட்ட வேண்டும்.

இவ்வாறு 48 நாட்கள் ஜெபித்து வர பொருள்களை வாங்குபவர்கள் அனைவரும் நம்முடைய கடையைத் தேடி வருவார்கள். நம்மிடம் பொருட்களை வாங்க ஆர்வமுடன் இருப்பார்கள். இதனால் வியாபாரம் அதிகம் நடக்கும். லாபமும் கிடைக்கும். தொழிலை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய முடியும்.

இதைத் தொடர்ந்து வாழ்வில் வசதிகள் பெருகும். நினைத்த காரியங்கள் பலிதமாகும். ஒரு வியாபாரிக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்.



நீலகண்ட யந்திரம்

### நீலகண்ட யந்திரம்

மூலமந்திரம்

"ஓம் ஆம் சிவாய நம ஐயும் கிலியும் சவ்வும் ஸ்ரீயுப் நமச்சிவாய"

மேற்கண்ட மூலமந்திரத்தைத் தினமும் 108 முறை ஜெபிக்க வேண்டும். இவ்வாறு 48 நாட்கள் ஜெபித்து வர வஞ்சனைகள். பில்லி சூன்யம் நீங்கும். தொழில் செய்யத் தடையாக வரும் சகல வியாதிகளும் நீங்கும். வஞ்சகர்கள் நம்மை விட்டு விலகுவர். இதனால் தொழிலில் மீண்டும் புதுத் தெம்புடன் ஈடுபட முடியும். வெற்றி உண்டாகும். நிவேதனப் பொருளாக வெண்பொங்கல், சுண்டல் ஆகியவை இருக்கலாம்.

**வேங்கடவன்**

## வஞ்சனைகள் நோய்கள் நீங்க


தொழிலில் போட்டி பொறாமைகள் உண்டானால் வஞ்சக எண்ணங்கள் உருவாகும். ஒருவரை ஒருவர் எப்படிக் கெடுத்து விட்டுத் தான் மேலே வருவது, எப்படி அடுத்தவரை வஞ்சனையால் ஏமாற்றலாம் என்பது போன்ற சிந்தனைகள் தோன்றும்.

ஒரு சிலர் எந்தப் பாவத்திற்கும் அஞ்சாதவர்களாக இருப்பார்கள். இவன் வளர்ந்து வருகிறானே இதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும். அதற்குச் செய்வினைகளைச் செய்யவும் துணிவார்கள்.

இவைகளைத் துணிந்து எதிர்த்துச் சமாளித்து வெற்றி பெற நீலகண்டன் நமக்கு உதவ முன் வருகிறார். அவர் ஆலகால விஷத்தை உண்டவர். தீயவற்றை நீக்கி நம்மைக் காப்பார்.

கீழ்க்கண்ட யந்திரத்தை தாமிரத் தகட்டில் எழுதிக் கொள்ள வேண்டும். பூஜை அறையில் சுத்தம் செய்து மெழுகிக் கோலமிட்ட பீடத்தின் மேல் இந்த யந்திரத்தை வைக்க வேண்டும். முதலில் தூப தீபம் காட்டி கீழ்க்கண்ட மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

# நைவேத்திய சமயத்தில் திரையிடுவதன் தாற்பரியம்



சுவாமிக்கு நைவேத்தியம் ஆகும் போது தான் திரை யிடுவார்கள்

நாத்திகன், குஷ்டரோகி, பைத்தியக்காரன், தீயொழுக்க முடையவன், சாஸ்திரங்களை அவமதித்துப் பேசுபவன், ஏமாற் றுக்காரன், மலடி, உடம்பு முழு வதும் எண்ணெய் பூசிக்கொண்டு நிற்பவன் ஆகியவர்கள் பார்க்கும் படி இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படுமானால் அந்தப் பூஜை உரிய பலனைத் தராது என்று சொல்வார்கள்.

மேற்கூறியவர்களை மட்டும் நைவேத்தியம் செய்யும் போது, "வராதே!" என்று சொன்னால், அவர்களில் பலரும் தகராறு செய்து குழப்பத் தைத்தான் ஏற்படுத்துவார்கள்", அல்லது, மனம் வருந்துவார்கள். எனவே அனைவருக்கும் பொது வாகவே திரையிடும் வழக்கம் வந்திருக்கக்கூடும்.

நைவேத்தியம் செய்யப்படும் போது திரை தொங்குவதைத் தான், "பூஜை செய்யும் போது என்று குறிப்பிடுகிறார்கள்.

நிவேதனங்களைப் பார்க்கும் போது கண் பட்டு விடும். அதனால் சிலருக்கு அவற்றைச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணமும் தோன்றக் கூடும், சிலருக்கு நாவில் நீர் ஊறும் என்பதற்காகவும் திரை யிடும் வழக்கம் வந்திருக்கலாம்.

வைதீகரான சிலர், தாங்கள் உணவருந்தும் போதே பிறர் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள். அத் தகையவர்கள், தாங்கள் தெய்வத்திற்குப் படையலி டுவதைப் பிறர் பார்க்க எப்படி அனுமதிப்பார்கள்?

அபிஷேகம் செய்யும் போது, அலங்காரம் செய்யும் போதும் சில கோயில்களில் திரையிடுகி றார்கள், பல கோயில்களில் அவ்விதம் இல்லை.

காசி விஸ்வநாதர் கோயிலில் பூஜை, அபி சேகம், அலங்காரம், நிவேதனம் ஆகிய எந்த நேரத் திலும் திரையிடுவதில்லை.

சுவாமி விக்கிரகத்தையும் படத்தையும் வெறும் விக்கிரகம் அல்லது படம் என்று கருதாமல் சாட்சாத் இறைவனாகவே பக்தன் கருதுகிறான். அத்தகைய பக்தனுக்கு அந்த அர்ச்சாமூர்த்தி சின்மயமாகத் திகழ்கிறது.

ஆழ்ந்த பக்தியுடன் பூஜை செய்யும் பக்தன், பகவான் அங்கு உயிர்கொண்டு எழுந்தருளியிருப் பதாகவே கருதிப் பூஜையும் நிவேதனமும் செய் கிறான். அதே மனிநிலையில் உள்ளவர்கள் உடன் இருக்கும் போது திரையைத் தொங்கவிடுவது, கதவை மூடுவது ஆகியவற்றைப் பின்பற்றத்தான் வேண்டும் என்ற அவசியம் இல்லை.

பக்தி சிரத்தையுடன் பக்தன் செய்வதைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் பெறாமல், கேலியாகப் பார்க்கவும் பேசவும் கூடியவர்கள், மற்ற சம்பிர தாயத்தினர் ஆகியவர்கள் எதிரில் திரையிடுவதும் சரியானதுதான்.

சுவாமியைத் தரிசிக்க விரும்புகிறவர்கள் எந்த நேரத்திலும் அவரைத் தரிசிக்க ஒப்புக் கொள்வார்கள், "நிவேதனத்தின் போது மட்டும் தான் சுவாமியைப் பார்ப்பேன்!" என்று வீம்பு செய்ய மாட்டார்கள்.



# கடகம்

மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

கடல் கடந்து சென்றாலும் தான் கொண்ட கொள்கையில் மறவாத பண்பு கொண்ட கடக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம குருவும், ராசி புதனும் பார்வை பெறுவதால் கொடுக்கல் வாங்கலில் முன்னேற்றமும் தொழிலில் திடீர் வருமானமும் கிடைக்கும். புதிய தொழில் பற்றி ஆலோசனைகளில் ஈடுபடுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியில் எதையும் சாதாரணமாக எடுத்து கொண்டு செயல்படுவீர்கள். முகத்தில் தெளிவான மலர்ச்சி இருக்கும். உணவு, எரிவாயு சம்பந்தமான தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு உண்டாகும். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் தெரியும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது கருத்துகளை வெளிப்படையாக பேசி மனவளர்ச்சியை பெறும் உங்களுக்கு சில நேரம் சில சோதனைகள் வந்து மறையும். குணமுள்ள நீங்கள் தன்னை சுற்றி இருப்பவர்களுக்கு பல உதவிகளை செய்வீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானத்தில் சூரியன் உச்சம் பெற்று தன் வீட்டை சந்திரன் பார்வை பெறுவதால் தொழிலில் முன்னேற்றம் காண்பதுடன் எதிர்பார்த்த வருமானம் கூடுதலாக கிடைக்கும். பணப்புழக்கம் அதிகமாக இருந்து கொண்டே இருக்கும். வங்கி கடன் கேட்டால் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையின் வளர்ச்சிக்கு வழி கிடைக்கும். புதிய தகவல்களால் உங்களின் மனக்கவலை மறையும். திருமண தடை நீங்கி திருமண வாய்ப்புகள் கைகூடும். பொருளாதார நிலை உயரும்.

**பெண்களுக்கு**

பெண்களின் கடமை உணர்வுகளால் மேலும் பல நிலைகளை அடிக்கடி மாற்றிக் கொள்வீர்கள். அரசாங்க உதவிகள் உங்களுக்கு கிடைக்கும். பொருளாதாரத்தில் ஏற்றம் தரும்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் கவனம் செலுத்தி வந்தால் மட்டுமே உங்களின் தேர்வில் வெற்றி பெற முடியும். கவனமாக தொடர்ந்து படித்தால் தேர்வில் வெற்றி பெற முடியும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

14.04.2015 செவ்வாய் பகல் 12.33 முதல் 16.04.2015 வியாழன் பகல் 02.54 மணி வரை

11.05.2015 திங்கள் இரவு 08.38 முதல் 13.05.2015 புதன் இரவு 11.00 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**புனர்பூசம் 4 ஆம் பாதம்**

தங்க நகை வாங்கும் யோகம் உண்டாகும். திருமண தடை நீங்கி நல்ல வரன் அமையும். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

எதை எடுத்தாலும் பல முறை முயற்சி செய்த பின்பே நமக்கு கிடைக்கும். வருமானம் வந்தாலும் அதை உடனே செலவு செய்து விடுவீர்கள்.

**ஆயில்யம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

பரந்த மனம் கொண்ட நீங்கள் எல்லோரிடமும் கனவில் வந்தது போல எதையாவது பேச்சில் மன மாற்றத்தை தருவீர்கள்.


**அதிர்ஷ்ட நிறங்கள்:** வெண்மை, மஞ்சள், பச்சை


**அதிர்ஷ்ட திசைகள்:** வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வியாழன்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வியாழக்கிழமை காலை 06.00 மணி முதல் 07.00 மணிக்குள் தேங்காய் எண்ணெய் விளக்கு போட்டு விநாயகரை வழிபாடு செய்து வரும் போது கேது தோசம் நீங்கி நன்மை பெறுவீர்கள்.





# வாழும் நாள் முழுவதும்

## சாஸ்திரம் படிக்க வேண்டும்!

மெய்ஞானம் எய்திய ஜீவன்முக்தர்களான ஞானிகளுக்குச் சாஸ்திரங்களைப் படிப்பதால் அல்லது படிக்காமல் விடுவதால் லாபமோ நஷ்டமோ இல்லை. சாஸ்திரங்களைப் படிப்பதால், அவர்கள் புதிதாக அடையப் போகும் பயனும் ஒன்றுமில்லை என்றாலும், அநேகமாக எல்லா அருளாளர்களும் வாழ்நாள் முழுவதும் சாஸ்திரங்களுடன் ஏதேனும் ஒரு விதத்தில் தொடர்பு கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

ஞானியாகவும் இல்லாமல், அஞ்ஞானியாகவும் இல்லாமல் இரண்டாங்கெட்டான் ஞானி என்ற நிலையிலுள்ள நம்மைப் போன்றவர்கள் அனைவரும் அவசியம் சாஸ்திரங்களைப் படிக்கத்தான் வேண்டும். சாஸ்திரங்களைப் படிப்பதையும் பிறர் சொல்லக் கேட்பதையும் வாழ்நாள் முழுவதும் ஒருவன் செய்து வர வேண்டும். இதையே வேதம், "ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் நப்ரமதி தவ்யம்" என்று குறிப்பிடுகிறது. "சுற்றிலினும் கேட்டல் நன்று" என்பார்கள். நாமாகப் படிப்பதால் அகங்காரம் ஏற்படவும் வாய்ப்புண்டு. பிறர் சொல்லைக் கேட்டால் அகங்காரம் ஏற்படுவதற்கு வழியில்லை. அருளுரைகளைப் படிக்கவும் கேட்கவும் செய்யாதவன் உயிரோடிருந்தும் இறந்தவனைப் போன்றவனே ஆவான்.

"கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்ற பாடத்தை நாம் சிறு வயதில் வெற்றிவேற்கையில் படித்திருக்கிறோம். பிச்சை எடுப்பது இழிந்தது. "ஏற்பது இகழ்ச்சி." அந்த இழிந்த செயலைச் செய்தேனும் கல்வி கற்க வேண்டுமாம். இது உலக வாழ்க்கைக்குத் தேவையான உலகியல் அறிவைக் குறிப்பிடுகிறது. இனி இதனினும் மேலானது அல்லவா ஆத்மஞானம்?

சாஸ்திரங்கள் என்பவை அருளாளர்களான அனுபூதிமான்களின் அனுபவங்களின் தொகுப்பு. இந்தச் சாஸ்திரங்கள் ஆத்மஞானத்திற்கு உரிய வழிமுறைகளைச் செல்வதாலேயே தெய்வத்துக்கு ஒப்பாக விளங்குகின்றன.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் "ரிஷி கடன்" என்ற ஒரு கடன் உண்டு. இந்தக் கடன், ரிஷிகள் இயற்றிய நூல்களைப் பயில்வதனால் நீங்கும் என்பார்கள்.

"பகவான், பக்தன், பாசுவதம் (ஆன்மிக நூல்கள்) ஆகிய மூன்றும் ஒன்றே" என்று குறிப்பிட்டார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். மேலும் அவர், "நான் எவ்வளவு காலம் வாழ்கிறேனோ, அவ்வளவு காலமும் கற்பேன்" என்றும் கூறியிருக்கிறார்.

மேலே இது வரையில், "நாம் சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும் என்ற கருத்தைப் பார்த்தோம்.

இனி, "ஆன்மிக சாதனை இல்லாத வெறும் நூலறிவு இறைவனை அடைய உதவாது" என்ற கருத்தை நாம் நம் உள்ளத்தில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

கற்க வேண்டியதைத் தான் கற்க வெண்டும். கற்றபின் அதற்குத்தக நிற்கவும் வேண்டும்.

"வேதங்களைக் கற்றதாலோ, நுண்ணறிவினாலோ, விரிந்த கேள்வியினாலோ இந்த ஆத்மா ஒரு சாதகனால் அடையப் படுவதன்று" என்று, கடோபநிஷதம் தெரிவிக்கிறது.

செல்வத்தினாலோ, கல்வியினாலோ இறைவன் அடைய முடியாது. இதுதான் விஷ்ணுவும் பிரம்மாவும் இறைவனது அடிமுடி தேடிய திருவண்ணாமலை வரலாறு உணர்த்தும் தத்துவமாகும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறியுள்ளார்:

"பருந்தும் கழுகும் ஆகாயத்தில் மிகவும் உயரத்தில் பறப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். ஆயினும் அவற்றின் பார்வை, எந்தக் குழிகளில் அழுகிய பிணங்கள் கிடக்கின்றன என்று கீழ் நோக்கியே இருக்கும். அது போல், பண்டிதர்கள் எனப்படுபவர்கள், சாஸ்திரங்களைக் கற்றவர்களாக இருப்பினும் காமகாஞ்சனமாகிய உலகபற்றுகளால் பந்தப்பட்ட மனமுடையவராக இருக்கின்றனர். ஆதலால் அவர்கள் மெய்ஞானத்தை பெறுவதில்லை.

"சாஸ்திர ஞானத்தால் மட்டும் என்ன பயன்? பண்டிதர்களுக்குச் சாஸ்திரங்களிலும் சுலோகங்களிலும் நல்ல பழக்கம் இருக்கலாம். ஆனால் அவற்றைத் திருப்பித் திருப்பிச் சொல்வதில் என்ன பிரயோஜனம்? · திருமுறைகளில் சொல்லியவற்றை எல்லாம் அனுபவத்துக்கு கொண்டு வர வேண்டும். ஒருவனுக்கு உலகப்பற்றுள்ள வரையில் அதாவது காமமும் காசாசையும் இருக்கும் வரையில், கேவலம் படிப்பு மட்டும் ஞானத்தையாவது மோட்சத்தையாவது தராது.

"சாஸ்திரங்களைப் படிப்பதனால் பகவத் பிரேமை உண்டாகுமா? நாட்டில் இன்ன இன்ன தேதிகளில் இவ்வளவு மழை பெய்யும் என்பதைப் பற்றிய முன்னறிவிப்பு பஞ்சாங்கங்களில் இருக்கிறது. மழையைப் பற்றி இவ்விதம் தெரிவிக்கும் அந்தப் பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வராது. 'அதைப் போல, அநேக நல்ல விஷயங்கள் சாஸ்திரங்களில் இருக்கின்றன. ஆனால் அவற்றைப் படித்தால் மட்டும் ஒருவன் தர்மவானாகி விடமாட்டான். ஈசுவரனுடைய பிரேமையைப் பெற வேண்டுமானால், அந்தச் சாஸ்திரங்களின் சொல்லிய நன்னெறிகளின் படி நடக்க வேண்டும். "சாஸ்திரங்களை மட்டும் படித்துவிட்டு இறைவனை விவரிக்க முற்படுவது, தேசப் படத்தில் மட்டும் காசியைப் பார்த்து விட்டு அந்தப் புனிதத்தலத்தைப் பற்றி இன்னொருவனுக்கு விளக்க முற்படுவது போன்றது."

அளவறிந்து சத்தான உணவைச் சரியாக உட்கொண்டால், அது உடல் ஆரோக்கியத்தை நன்றாக வைத்திருக்கும் என்று இயற்கை மருத்துவம் கூறுகிறது. அவ்விதம் உடல் நலனுக்கு உணவு உறுதுணை ஆவது போல, மனநலனுக்கு நற்சிந்தனைகள் தேவை. பித்தளைப் பாத்திரத்தில் களிம்பு ஏறாமல் இருக்க வேண்டுமானால், நாள்தோறும் அதை நன்றாகத் தேய்த்துத் துலக்க வேண்டும்.



அன்றாடம் பசியிலிருந்து விடுபட அன்றாடம் உணவு உட்கொள்கிறோம். இவை போல ஆரோக்கியமான மனநிலை தொடர்ந்து நம்மிடம் நீடிக்கவும், மனத்தில் குற்றங்கள் கூடு கட்டாமல் இருக்கவும் நற்சிந்தனைகளை நாம் நாள்தோறும் கொள்ள வேண்டும்.

ஜபம், தியானம் போன்ற ஆத்ம சாதனைகள், சான்றோர் தொடர்பு, நல்ல நூல்களைக் கற்றல், சுயபரிசோதனை ஆகியவற்றின் மூலம் நற்சிந்தனைகள் நம் உள்ளத்தில் தங்குகின்றன.

கேள்வி "சுரப்பவர் தங்கட்கெல்லாம் குடு நரகங்கள் வைத்தார்" என்று தேவாரத்தில் வருகிறது. இதற்கு என்ன பொருள்?

இதன் மூலம் திருநாவுக்கரசரின் தேவாரம், "பிறருக்குக் கொடுத்து வாழாதவர்கள் நரகம் செல்வார்கள்" என்று எச்சரிக்கை தருகிறது.




மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

மனிதனின் செயல்பாடுகளை நன்கு ஆராய்ந்து செயல்படும் சிம்மராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சாதகமான கிரக சூழ்நிலைகள் இல்லாவிட்டாலும் தொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும் பொருளாதாரத்தில் நன்மை உண்டாகும்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் பேச்சும், முடிவு எடுப்பதில் இருக்கும் ஆழமான சிந்தனையும் கொண்ட உங்களுக்கு இந்த கால கட்டத்தின் தொழிற்சங்க பொறுப்புகளை ஏற்க வேண்டிய நிலை வரும். மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். பொருளாதாரத்தில் சுமாரான பலன் கிட்டும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனின் அக்கறை கொண்டு விளங்கும் நீங்கள் யாரையும் எதிர்த்து பேசி தன்னை சார்ந்தவர்களுக்கு நல்ல பலனை பெற்றுத் தருவீர்கள். சொன்ன சொல் மாறாமல் இருப்பீர்கள். வரவுக்குள் செலவு செய்வீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானதிபதி வலுவாக இருப்பதுடன் சனி பார்வை பெறுவதால் தொழிலில் பல போட்டிகளை சந்திக்க வேண்டி வரும். துணிச்சலுடன் பல தொழில்களை செய்வீர்கள். பண வரவு வந்தாலும் புதிய செலவுகள் வந்து பொருளாதாரம் ஏற்ற இறக்கமாக அமையும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு சுமையாக இருந்த நிலை மாறி நன்மையை பெறுவீர்கள். உலக கலைஞர்கள் பலரை சந்திக்க வேண்டி வரும். எளிமையான வாழ்க்கையை விரும்புவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களிடம் கருத்து வேற்றுமை இருந்தாலும் அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்வீர்கள். சுயதொழிலில் எதிர் பார்த்த அளவு பலன் இல்லாவிட்டாலும் பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

### மாணவர்களுக்கு

மின்சாரம், இரும்பு, வாகனம் போன்ற கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். தேர்வில் கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

16.04.2015 வியாழன் பகல் 02.53 முதல் 18.04.2015 சனி மாலை 05.29 மணி வரை

13.05.2015 புதன் இரவு 11.01 முதல் 15.05.2015 வெள்ளி இரவு 01.33 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

அரசாங்க பதவிகள் கிடைக்க வாய்ப்பு அமையும். புத்துயிர் பெற்று புது வாழ்வினை பெறுவீர்கள். பொருளாதார வளர்ச்சி கிடைக்கும்.

### பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கலைஞர்களின் வாழ்க்கை வளமாக அமையும். சொந்த ஊரில் நல்ல மதிப்பை பெற்று திகழ்வீர்கள். வர்த்தக ரீதியான பயணம் நன்மையை தரும்.

### உத்திரம் 1 ஆம் பாதம்

கடவுள் நம்பிக்கை உங்களுக்கு நல்ல பலனை தரும். கடன் சிறிதளவு குறைய வாய்ப்பு அமையும். பணவரவு நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** சிவப்பு, ஆரஞ்சு, பழுத்த வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்:** கிழக்கு, தென்கிழக்கு, வடகிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, புதன், வெள்ளி

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

சனிக்கிழமை
ராகு காலத்தில்
பைரவரை வணங்கி
நல்லெண்ணெய்
தீபமிட்டு
வெண்ணெய்
வைத்து வணங்கி வர
நன்மை கிடைக்கும்.







# மருவூரில்



# சித்ரா பௌர்ணமி!

உலகத்தை நல்வழிப்படுத்தும் பொருட்டு இறையருளும் இயற்கையும் ஒன்றாய் இணைந்து செயல்படுவது தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் ஒரு நல்ல விடயமாகும். ஒவ்வொரு மாதமும் வருகின்ற பௌர்ணமி மற்றும் அமாவாசை நாட்களில் இறைவழிபாட்டிற்கு உகந்ததாக கருதுவது இந்து சமய மக்களிடம் வழக்கமாக இருந்து வருகின்றது. அதிலும் சித்திரை மாதம் வருகின்ற சித்ரா பௌர்ணமி உலகை காக்கும் லோகமாதாவாகிய அம்மனுக்கு மிகவும் உகந்ததாக கருதப்படுகின்றது. எனவே உலகெங்கும் அம்மன் திருத்தலங்களில் அன்றைய தினம் சிறப்பு வழிபாடுகளும், யாகங்களும் நடைபெறுகின்றன. மேல்மருவத்தூரில் வீற்றிருக்கும் அன்னையின் சக்தி பீடத்திலும் சித்திரை முழு நிலவு திருநாள் வழிபாடுகள் மே 3 ஆம் திகதி, 2015 இல் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. அன்னையின் அருள் வேண்டி அலை மோதிய பக்தர்கள் ஓம் சக்தி மந்திரத்தை உச்சரித்து 1008 யாக குண்டங்கள் கலச விளக்கு வேள்வி பூஜைகளை கண்டும், அன்னையை தரிசித்தும் ஆனந்தம் அடைந்தார்கள்.



உலகின் அனைத்து வடிவங்களிலும் அன்னை தோன்றுவாள் என்று உணர்த்துகின்ற வண்ணம் பல்வேறு வடிவங்களில் யாக குண்டங்களும், கலசங்களும் சக்தி பீடத்தில் அமைக்கப்பட்டிருந்தன. நடுநடுவே யாக குண்டங்களை கொண்ட இதழ்களோடு தாமரை, சூலாயுதம், ஒரு தலை மற்றும் இரு தலை நாகங்கள், சக்கரம், முக்கோணம், சாய் சதுரம், நட்சத்திரம், வட்டம் என 1008 யாக குண்டங்கள் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. தவத்திரு அடிகளாரின் எண்ணத்திற்கேற்ப பல நுட்பமான சக்கரங்களில், 9000 இயற்கை விலைப் பொருட்கள் நிறைந்த கலசங்களும், 9000 விளக்குகளும் வைக்கப்பட்டு அன்னையை வேண்டி வேள்வி பூஜைகள் நடத்தப்பட்டன.

அன்னை பராசக்தி கருவறை முன்பாக அமைக்கப்பட்டிருந்த பிரதான யாக குண்டத்தில் கற்பூரம் ஏற்றி வைத்து அருள் திரு. பங்காரு அடிகளார் வேள்வி பூஜையை ஆரம்பித்து வைத்தார்கள். அச்சமயம் ஆயிரக்கணக்கான செவ்வாடை பக்தர்கள் சூழ, பிரதான அதிதிகள் பலர் வேள்வி பூஜையில் கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெற்றனர். வேள்வி நிறைவுப் பெற்ற போது, அதில் இருக்கும் திருச்சாம்பலை வீட்டில் வைத்து பூசிப்பதற்காக பக்தர்கள் ஆர்வத்துடன் எடுத்துச் சென்றார்கள். அத்துடன் வேள்வியில் வைக்கப்பட்ட நாக வடிவிலானயாக குண்டங்களையும் பக்தர்கள் பக்தியோடு எடுத்துச் சென்றார்கள். ஆன்மீக வழிபாடுகளுடன், கலையுணர்வும் இணைந்து கொண்ட இந்த சித்ரா பௌர்ணமி விழா ஏற்பாடுகளை மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் அவர்களின் வழிகாட்டுதலின் படி மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. உலகெங்கிலும் ஆங்காங்கே ஏற்பட்டு கொண்டிருக்கும் இயற்கை சீற்றங்களும் பாகுபாடு உணர்வுகளும், பயங்கரவாத நிகழ்வுகளும் அறவே நீங்கப் பெற்று அன்பும் பாச உணர்வும் எங்கெங்கும் தலையெடுத்து மக்கள் மெய்ஞான அறிவு பெற்று வாழ்வை அமைதியாய் வாழ்ந்திட வேண்டும் என்பதே மருவூரில் சித்ரா பௌர்ணமி வேள்வியின் நோக்கமாகும். இவை நல்லவை நிறைவேறி உலகில் அன்பும் அமைதியும் நிலவிட அருட் கொடையாளான அன்னை ஆதி பராசக்தியை நாமும் வணங்கி வழிபடுவோமாக!

நவநீதம்

# வியாதிகளும் தடுக்கும் முறைகளும்



சுக்ல பட்ச பிரதமையில் இருந்து மூன்று மூன்று நாட்கள் கெடுவுடன் சூரிய உதய காலத்தில் முதலில் இடது நாசியின் வழியாகவும், கிருஷ்ண பட்ச பிரதமையில் இருந்து மூன்று மூன்று நாட்கள் சூரிய உதய காலத்தில் முதல் முதலாக வலது நாசி வழியாகவும் மூச்சு ஓட ஆரம்பித்து நடைபெறுவது சுபாவமான நியமம் என சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த சுவாச கதியில் முரண்பாடான ஓட்டம் ஏற்பட்டால் அதுவே வியாதிகளுக்கு காரணம் ஆகும். ஆதலால் அந்தச் சமயம் சுவாச ஓட்ட நிலையை சீர்படுத்தி விட்டால் வியாதிகளை குணமாக்கி விடலாம்.

பிரதமை முதலிய திதிகளில் நிர்ணயமான நியமப்படி மூச்சு நடைபெறவில்லையானால் சந்தேகமின்றி ஏதாவது கஷ்டம் ஏற்படும். எப்படி என்றால் சுக்லபட்ச பிரதமையில் காலையில் தூக்கத்தில் இருந்து விழித்தவுடன் சூரிய உதய காலத்தில் முதன் முதலாக வலது நாசி வழியாக மூச்சு ஓடுமேயானால் அப்போது முதல் பௌர்ணமி வரை இடையில் உஷ்ண சம்பந்தமான வியாதிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

கிருஷ்ண பட்ச பிரதமையில் இது போல காலை எழுந்தவுடன் சூரிய உதய காலத்தில் முதலில் இடது நாசி வழியாக சுவாசம் ஓட ஆரம்பிக்குமானால் அன்று முதல் அமாவாசை வரையிலான காலத்தில் கபம், குளிர் சம்பந்தமான வியாதிகள் ஏற்படும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.



இது போல இரண்டு பட்சங்கள் வரை தொடர்ந்து சூரிய உதய சமயத்தில் சுவாசம் எதிரிடையாக நடக்குமானால் சொந்தத்தில் ஒருவருக்கு மிகக் கடுமையான வியாதி அல்லது மரணம் சம்பவிக்கக் கூடும். அல்லது வேறு ஏதாவது வகையில் ஆபத்துக்கள் ஏற்படலாம். இதே போன்ற நிலை அமாவாசை முதல் பௌர்ணமி வரை பிறகு பௌர்ணமி முதல் அமாவாசை வரையான பட்சங்களில் மூன்று பட்சங்களுக்கு தொடர்ந்து இருக்குமானால் தனக்கே நிச்சயம் மரணம் ஏற்படும் என தெரிந்து கொள்ளலாம்.

இது போல அமாவாசை, பௌர்ணமி களுக்கு பிறகு ஏற்படும் பிரதமையில் அல்லது அடுத்த முதல் நாளில் இந்த மாதிரி எதிர்மாறாக சுவாசம் ஓடிக் கொண்டிருக்கும் விபரம் தெரிந்தால் அந்த மூக்கை சில தினங்கள் அடைத்து வைத்து விட்டால் மேலே சொல்லியபடி வியாதிகள் ஏற்படாது. ஆதலால் இப்படி விபரீதமாக சுவாசம் ஓடிக் கொண்டிருக்கும் காலங்களில் அந்த மூக்கை அடைத்து வைத்துவிட வேண்டும். சாப்பிடும் போதும், குளிக்கும் போதும் தவிர மற்ற காலங்களில் அடைத்து விடவும். இப்படி இடைவிடாமல் சில நாட்கள் அந்த மூக்கை அடைத்து வைத்தால் அந்த திதிகளில் சொல்லப்பட்ட வியாதிகள் ஏற்படாது தவிர்க்கலாம். இதை அசிரத்தையாய் விட்டு விட்டு வியாதிகள் ஏற்பட்ட பிறகு சுக்லபட்சமாக இருந்தால் வலது மூக்கில் வரும் சுவாசத்தை அடைத்து விட வேண்டும். கிருஷ்ணபட்சமாக இருந்தால் இடது மூக்கின் சுவாசத்தை அடைத்து விட வேண்டும். இதன்படி செய்தால் அந்த வியாதிகள் சீக்கிரம் குணம் அடைந்து விடும். வியாதிகள் இதனால் குறைந்து வருமே தவிர அதிகம் ஆகாது. சாதாரண வியாதிகள் இந்த முறையில் சீக்கிரமாகவே ஒரு சில நாட்களில் குணமாகி விடும்.

## மருந்துகள் இல்லாமலேயே வியாதி நிவாரணம்

நமது சரீரத்தில் நாம் செய்யும் ஒழுங்கில்லாத செயல்களாலும் நடவடிக்கைகளாலும் பல வியாதிகள் உண்டாகின்றன. ஆனால் அப்படி ஏற்படும் வியாதிகளை எந்த விதமான மருந்துகளும் இல்லாமலேயே நமது சரீரத்தில் நடைபெறும் செய்கைகளினாலேயே குணப்படுத்தும் தன்மையையும் இறைவன் நம் உடலிலேயே வைத்து நம்மை படைத்திருக்கிறான்.

ஆனால் நாம் அந்த சுலபமான வழிமுறைகளை தெரிந்து கொள்ளாத காரணங்களால் தான் பலவிதமான வியாதிகளால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். சித்த புருஷர்களும் யோகிகளும் மருந்து இல்லாமலேயே வியாதிகளை குணமாக்கும் வித்தையை தெரிந்து வைத்து இருக்கிறார்கள். அந்த முறைகளை பின்பற்றியே அவர்கள் திடகாத்திரத்துடன் செயல்பட்டு பல அற்புதங்களை நடத்தியும் இருக்கிறார்கள்.

இப்படி அந்த சித்த புருஷர்கள் கையாண்ட முறைகளை சிவ ஸ்வரோதயம் என்ற நூல் விபரமாகக் கூறுகிறது. அப்படிப்பட்ட முறைகள் என்ன என்பதை இனிப் பார்ப்போம். இந்த சுலபமான முறைகளினால் பணம் விரயமாகாமலேயே அநேக வியாதிகளை நாமே குணப்படுத்திக் கொள்ளலாம். இப்படிப்பட்ட சித்தர் முறைகளினால் இயற்கையில் இறைவன் நமக்கு அளித்திருக்கும் சக்திகளையும் உபாயங்களையும் கொண்டு வியாதிகளை குணப்படுத்தி விட்டால் மறுபடி அது போல வியாதிகள் நம்மிடம் வரவே வராது.

## வியாதிகளும் அதற்கு சிகிச்சையும்

### சுரம்

இந்த சுரம்காய்ச்சல் ஏற்பட்ட உடன் நமது சுவாசத்தின் கதியை முதலில் கவனிக்க வேண்டும். இந்த சுவாசம் அந்தச் சமயம் எந்த மூக்கின் வழியாக ஓடிக் கொண்டு இருக்கிறதோ அந்த மூக்கை அடைத்து விட வேண்டும். சுரம் தணிந்து குணம் அடையும் வரை அந்த மூக்கை அடைத்தே வைத்து இருக்க வேண்டும். இந்த மாதிரி செய்து விட்டால் 1015 நாளில் தணியக் கூடிய சுரமானது 56 நாளில் குறைந்து விடும். இந்த மாதிரி காய்ச்சல் இருக்கும் சமயத்தில் வியாதியஸ்தர் எப்போதும் வெள்ளி போன்ற வெள்ளை வர்ணத்தை மானசீகமாகக் கண்ணால் மனதுள் தியானம் செய்து வந்தால் மிகத் துரிதமாக வியாதி குணமடையும்.



### உள்ஜுரம்

வெள்ளை விஷ்ணு கிரந்த அல்லது பூவரசு இலையை கொஞ்சம் கையில் எடுத்து கசக்கி துணியில் வைத்து முடிந்து கொண்டு என்றைக்கு சுரம் காணும் முறை வருமோ அந்த சமயம் அன்று அதிகாலையிலேயே அந்த முடிந்து வைத்த இலையை அடிக்கடி முகர்ந்து கொண்டே இருக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் அந்த சுரம் நின்று விடும்.


### தலைவலி

தலைவலி கண்டவுடன் கட்டிலில் அல்லது நாற்காலியில் மல்லாந்து படுத்துக் கொள்ளவும். அப்படி படுத்துக் கொண்டு இரண்டு கைகளையும் இரண்டு புறமும் கீழே தொங்கப் போட்டுக் கொள்ளவும் அல்லது நீட்டிக் கொள்ளவும். பின்பு கயிறு அல்லது கர்சிப் போன்றவற்றால் இரு முழங்கைகளுக்கும் மேல் நன்றாக இறுக்க கட்டிக் கொள்ளவும். இப்படிச் செய்தல் சில நிமிடங்களில் தலைவலி போய்விடும். இப்படிக் கட்டும் போது நன்கு இறுக்கி வலி ஏற்படும் அளவு இறுக்கமாக கட்டி விட வேண்டும். பின்பு தலைவலி குறைந்து வரும் போது இந்த கட்டுகளை அவிழ்த்து விடலாம்.

**சிவராஜயோகி**

**தனம், தான்யம், சௌக்கியம் சௌபாக்கியம் தரும் ஐஸ்வர்ய மஹாலெட்சுமி மந்திரம்**

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம்
ஞானாய கமலதாரிண்யை
சக்த்யை சிம்ம வாஹின்யை
பலாயை ஸ்வாஹா"



ஆற்றுநீர் காட்டாற்று வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடும்போது, அது பயிர் பச்சைகளையும், கால் நடைகளையும், கிராமங்களையும் கூட அழித்து விடுகிறது. அதே நீரை அணைகட்டித் தேக்கிப் பயன்படுத்தும் போது குடிநீர், விவசாயம், மின்சாரம் எடுத்தல், மீன் பிடித்தல் போன்ற பல ஆக்க வேலைகளுக்குப் பயன்படுகிறது.

மனமும் ஒரு விதத்தில் காட்டாற்று வெள்ளம் போன்றது தான். அதை அதன் போக்கிலேயே விட்டு விட்டால் அது எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் மனிதனை இழுத்துச் சென்று அவனை அதோகதிக்கு ஆளாக்கி விடும். அதே மனதைக் கட்டுப்படுத்தி முறையான ஆன்மிகப் பயிற்சிகளில் செலுத்துவதன் மூலம், முக்தி என்ற வாழ்க்கையின் லட்சியத்தை ஒருவன் அடைந்து விட முடியும்.

ஆற்றில் ஓடும் தண்ணீரை அணைகட்டித் தேக்குகிறோம். அதுபோல், மனதைக் கவர்ந்து செல்லும் வெளி விஷயங்களிலுள்ள வேகத்தை உறுதியான முயற்சியுடன் அடக்கிப் பழகுவதைத் தவிர, மனதை நிலைநிறுத்துவதற்கு வேறு வழியில்லை.

# மனதில் சாந்தி நிலைத்திருக்க...




"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது ஆன்றோர் வாக்கு. இந்த உண்மை, நாம் இறைவனிடம் மனதை நிலைத்திருக்கச் செய்வதற்கும் பொருந்தும்.

சாதகர் ஒருவர், திரும்பத் திரும்ப இறைவனைப் பற்றிய சிந்தனையில் மனதை ஈடுபடுத்துவதற்கு முயற்சி செய்யத்தான் வேண்டும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "பழக்கத்தாலும் வைராக்கியத்தாலும் மனதை அடக்க முடியும்" என்று, பகவத்கீதையில் கூறுகிறார். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறிய இந்தப் பதில்தான் சரியான பதில், உங்கள் கேள்விக்கு வேறு எத்தகைய பதிலை யார் கூறினாலும், அந்தப் பதில் கீதையில் சொல்லப்பட்டிருக்கும் கருத்தையே சுற்றி வளைத்துச் சொல்லுவதாக இருக்கும்.

மனதை நிலைத்திருக்கச் செய்யும் வழி, பகவத்கீதையில் இரண்டாம் அத்தியாயத்தில் ஸ்திதப்ரக்ஞ லட்சணம்" என்ற தலைப்பில், 255 சுலோகம் முதல் 272 சுலோகம் வரையில் விளக்கப்பட்டிருக்கிறது.

நிலையற்ற உலகப் பொருள்களும் சிந்தனைகளும் தற்காலிகமாக மனதிற்கு உவப்பைத் தந்தாலும், முடிவில் அவை நமது அழிவிற்கே அடி கோலுகின்றன. இந்த உண்மையை மனம் பந்தப்படுத்தும் உலகியல் விஷயங்களில் செல்லும் போதெல்லாம்,



நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்வது மிகவும் நல்ல பயிற்சியாகும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சாதகர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் பல உபதேசங்கள் வழங்கியுள்ளார்.


அவற்றில் சில வருமாறு:

"நீந்தக் கற்றுக் கொள்ள விரும்புபவன் சில நாட்கள் நீந்துவதற்குப் பழக வேண்டும். ஒரே ஒரு நாள் நீந்தப் பழகியவுடன் கடலில் நீந்துவதற்கு ஒருவனும் துணியமாட்டான். அதேபோல், பிரம்மமாகிய கடலில் நீந்த விரும்பினால், முதலில் பல முறை பயன்படாத முயற்சிகள் செய்தாக வேண்டும். அப்போது தான் அங்கு நீந்தக் கூடிய சக்தி உனக்கு உண்டாகும்.

"புதிதாகப் பிறந்த கன்றுக்குட்டி நிற்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னால், தட்டுத் தடுமாறிப் பல முறை கீழே விழுகிறது. அது போல, ஆன்மிக வாழ்க்கையில் கடைசியாக வெற்றி பெறுவதற்கு முன்னால் பல தவறுகள் அடிக்கடி நேரிடும்.

"எதுவரையில் மனிதனிடம் தெய்விகம் இருக்கும்? நெருப்பில் இருக்கும் வரையில்தான் இரும்பு செந்நிறம் கொண்டதாக இருக்கும். நெருப்பை விட்டு அகற்றியதும் அது கருநிறம் அடைந்து விடும். அது போல் இறைவனுடன் தொடர்பு கொண்டிருக்கும் வரையில் தான் மனிதன் தெய்விகம் பொருந்தியவனாக இருப்பான். "நமது உள்ளத்தில் சில சமயங்களில் மட்டும் தான் சாந்தி உண்டாகிறது. ஆனால் அது ஏன் நிலைத்திருப்பதில்லை? மூங்கிலைப் போட்டு எரிக்கும் நெருப்பு, இடைவிடாமல் தூண்டப்படாமல் போனால் விரைவில் அணைந்து போய்விடும். ஆன்மிக நெருப்பு எப்போதும் ஜொலித்துக் கொண்டிருக்க வேண்டுமானால் இடைவிடாத பக்தி அவசியம்."

## எந்த நேரத்தில் என்ன புஷ்பங்கள்?



கடவுளுக்கு எந்த நேரத்தில் என்ன புஷ்ப ங்கள் சாத்தலாம் ?

**காலை:**

தாமரை, துளசி, நவமல்லிகை, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, சண்பகம், புன்னாகம், தாழை.

**நண்பகல்:**

வெண் தாமரை, அரளி, துளசி, நெய்தல், வில்வம், சங்கபுஷ்பம், மருதாணி, கோவிதாரம், ஒரிதழ்.

**மாலை:**

செந்தாமரை, அல்லி, மல்லிகை, ஜாதி முல்லை, மரிக்கொழுந்து, வெட்டிவேர், கஜகர்ணிகை, துளசி, வில்வம்.

**அஷ்ட புஷ்பங்கள்:**

அறுகு, சண்பகம், பன்னாகம், நந்தியாவட்டை, பாதிரி, ப்ரஹதி, அரளி, தும்பை இலைகள்.



# மனிதனை

## மாண்புறச் செய்வது மதம்

**"மதம்" என்றால் என்ன?**

பதில் விலங்கு நிலையில் இருப்பவனை, பாமர மனிதன் என்ற நிலைக்கு உயர்த்துவது மதம். பாமர மனிதனைப் பண்புள்ளவன் என்ற நிலைக்கு உயர்த்துவது மதம். பண்புள்ள மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துவது மதம்.

மதம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்குக் "கருத்து கொள்கை, வழி" போன்ற பல பொருள்கள் உண்டு. மதம் என்பதை தமிழில் "சமயம்" என்று வழங்குகிறோம். உணவைப் பக்குவப்படுத்துவது சமையல், மனிதனின் மனத்தைப் பக்குவப்படுத்துவது சமயம்.

மனிதனைப் பண்படுத்துவது, பக்குவப் படுத்துவது, உயர்ந்த இலட்சியத்திற்குத் தயார் செய்வது சமயம் ஆகும்.


வாழ்க்கையில் அறம் இருக்க வேண்டும். எளிமை இருக்க வேண்டும், தூய்மை இருக்க வேண்டும் இதைத்தான் மதம் போதிக்கிறது.

கரடு முரடான கற்பாறையிலிருந்து, சிற்பி அழகிய தெய்வ வடிவம் அமைக்கிறான். ஆதலால் கரடு முரடாக இருந்த பாறை, ஆலயத்தில் வைத்து வழிபடும் தகுதியைப் பெறுகிறது. கட்டையைக் கோடரி கொண்டு வெட்டினால் கர்ணகடூர சப்தம் ஏற்படுகிறது. அதே கட்டையை அழகிய வீணையாக்கிய பிறகு வெட்டக்கூட வேண்டாம் தட்டினாலே இனிய ஓசை தருகிறது.

கற்பாறை வழிபடும் தெய்வ விக்கிரம் ஆவது போல கட்டையின் கர்ணகடூர சப்தம் வீணையின் இன்னிசை ஆவது போல பக்குவம் பெறாத மனிதனைப் பக்குவப்படுத்தி, இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்வது மதம்.

# பக்தியில் உருகும் கண்ணீரே வலிமை மிக்கது!

அழுதால் உன்னைப் பெற லாமே என்பது மணிவா சகரின் மாணிக்க வாக்கு. நாம் உலகப் பொருள்களுக்காக வருந்தி அழுவது போல் இறைவனை அடைவதற்கு மனமுருகி அழுதால், இறைவன் அருள் கிட்டும், அவன் காட்சி அளிப்பான். கடவுளோடு தோழமை உறவு கொள்வதைத் "தோழமை யோகம்" என்று ராஜாஜி குறிப்பிட்டார். இது தவிர, கர்மயோகம், பக்தி யோகம், ராஜயோகம், ஞான யோகம் ஆகியவை இருப் பது நமக்குத் தெரியும். இதுபோல் இறைவனுக்காக ஏங்கி அழுவதை அழுகை யோகம் என்று கூடச் சொல்லலாம். "அழுகை யோகம்" என்று குறிப்பிடா விட்டாலும், இறைவனை அடைந்தவர்கள் அத்தனை பேரும்அழுது அழுதுதான் போராடிப் போராடித்தான் பெரிதும் முயற்சி செய் துதான் இறைவனை அடைந் திருக்கிறார்கள். சிரித்துக் கொண்டே (சுலபமாக) இறைவனை அடையலாம் என்றால், எல்லோருமே இறைவனை அடைந்திருப் பார்கள்.



மாணிக்கவாசகர்

அழுதால் இறைவனைப் பெற முடியும் என்பதை, சமீப காலத்தில் வாழ்ந்து காட்டியவர் பகவான் ஸ்ரீரா மகிருஷ்ணர்." குழந்தை விளையாட்டுப் பொம்மை களின் திருப்தி அடைந்து விளையாடிக் கொண்டி ருக்கிறது. அது போல், நாம் உலகப் பொருள்களில் திருப்தி அடைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது வாழ்க்கையில் நாம் மனப்பக்குவம் பெறும் ஒரு நேரம் வருகிறது. அப்போது (உலகப்பற்றின் நம்மைச் சிக்க வைக்கும்) உலக விஷயங்களாகிய பொம்மைகளை வீசியெறிந்து விட்டு, இறைவ னுக்காக நாம் அழுகிறோம்", இறைவனைப் பெறு கிறோம்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சில கருத்துக்கள் வருமாறு."

"எந்த வழியில் நமக்கு இறைவனின் தரிசனம் கிடைக்கும்?"

"உருகிய உள்ளத்துடன் இறைவனுக்காக உன்னால் அழ முடியுமா? மனைவி, மக்கள், பொருள் ஆகியவற்றுக்காக மக்கள் குடம் குட மாகக் கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால் கடவுள் வேண்டும் என்று யார் அழுகிறார்கள்? குழந்தை விளையாட்டுப் பொருள்களோடு ஈடுபட்டிருக்கும் வரையில் தாய் தன் சமையல் வேலைகளையும், மற்ற வேலைகளையும் கவனிக்கிறாள். விளை யாட்டுக் கருவிகள் குழந்தையின் பசியை நீக்கு வதில்லை, எனவே ஒரு சமயத்தில் குழந்தை அவைகளை வீசி எறிந்து விட்டு, தாயை வேண்டிக் "கோ"வென்று கத்தி அழு கிறது. உடனே தாய் என்ன வேலை செய்து கொண் டிருந்தாலும் சாதம் பாதி வடித்துக் கொண்டிருந் தாலும் கூட எல்லா வற்றையும் அப்படியே விட்டுவிட்டு ஓடி வந்து குழந்தையை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொள்கிறாள்.

"சாதகனுக்கு வலிமை எது? அவன் கடவுளின் குழந்தையாதலால், கண் ணீர்தான் அவனுக்கு முக் கியமான வலிமை. அழும் குழந்தையின் விருப்பத்தை அதன் தாய் நிறைவேற்றி வைக்கிறாள். அது போல் அழுது கொண்டிருக்கும் மகன் கேட்பவற்றையெல்லாம் இறைவன் கொடுத் தருள்கிறான்.

"விளையாட்டுப் பொருள்களையும் காசுக ளையும் வேண்டும் குழந்தை, அவற்றைத் தரும் படி தன் தாயை அழுது தொந்தரவு செய்கிறது. அது போல் தனக்கு நெருக்கமாகவும் பிரியமா கவும் இறைவன் இருப்பதைத் தெரிந்து கொண்ட பக்தனும், அந்த இறைவனைக் காண வேண்டும் என்று உள்ளன்புடன் மனங்கசிந்து உருகுவதும், கடைசியில் தெய்வீகத்தரிசனத்தைப் பெறுவதும் நிச்சயம். தன்னை அவ்விதம் அன்போடும் உறுதியான பக்தியோடும் தேடுபவனின் பார்வை க்குப் புலப்படாமல் இறைவன் மறைந் திருப்பதில்லை."

# சாஸ்திரங்களை படிப்பதும்

## ஆராய்வதும் "சுவாத்யாயம்" என்பதாகிறது!



மனிதனைப் பந்தத்திலிருந்து விடுவிக்கவும், தெய்வநிலைக்கு உயர்த்தவும் வல்ல ஆற்றல் படைத்த ஆன்மிக நூல்களைச் சாஸ்திரங்கள் என்று சொல்கிறோம்.

சாஸ்திரங்கள் என்பவை அருளாளர்களான அனுபூதிமான்களால் அருளப் பெற்றவை.

முக்திக்கு வழி காட்டக்கூடிய இத்தகைய சாஸ்திரங்களைப் படிப்பதும் ஆழ்ந்து ஆராய்வதும் "சுவாத்யாயம்" எனப்படும்.

பாச (உலகப்பற்றை வளர்க்கும்) நூல்களைப் பயிலாமல், பதி (இறைவனை அடைவதற்கு உதவும்) நூல்களைப் பயில்வதற்கே சுவாத்யாயம் என்ற சொல் பொருந்தும்.

இந்த வகையில் பார்த்தால் புற்றீசல்கள் போல நாள் தோறும் இப்போது தோன்றியும் மறைந்தும் வரும் பயனற்ற வார, மாத, நாளிதழ்களைப் படிப்பது சுவாத்யாயம் அல்ல.

"சாஸ்திரங்களைக் கற்பதையும், பிறருக்குக் கற்பிப்பதையும் வாழ்நாள் முழுவதும் ஒருவன் செய்து வர வேண்டும்" என்று வேதம் கட்டளையிடுகிறது.

இந்த உண்மையை, "ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் நப்ரமதிதவ்யம்" என்று தைத்திரீய உபநிஷதம் குறிப்பிடுகிறது.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற மட்டில் சாஸ்திரங்களைப் பயிலவும் வேண்டும்", அவற்றை மக்களிடையே இறைவனுக்குச் செய்யும் ஒரு தொண்டாகவும், கர்மயோகமாகவும் கருதிப் பிரசாரம் செய்யவும் வேண்டும்.

அருள் நூல்களைப் பயில்வதும், அருள் நூல்களைப் பிறரைப் பயிலச் செய்வதும் ஒருவரது வாழ்க்கையில் இணைந்தே இடம் பெற வேண்டும். சுவாத்யாயத்திற்கு உகந்த நூல்கள் எந்த மொழியில் வேண்டுமானாலும் இருக்கலாம். சுவாத்யாயத்தின் மூலம் ஒருவன், ரிஷிகளை மகிழ்வித்து அவர்களின் ஆசிகளுக்கு உரியவன் ஆகிறான். அத்தகையவன் ரிஷிகடனைச் செலுத்தியவன் ஆவான்.







# ஒழுக்கத்தின் மேன்மை

ஒழுக்கம் என்ற தேவதை என்றும் நம்மோடு இருந்து, தன் ஆயிரம் கைகளால் எப் போதும் நம்மை அரவணைத்துப் பாதுகாக்கும்.

ஒழுக்கமின்மை என்ற அரக்கன் தன் ஆயிரம் கைகளால் நாள் தோறும், நாழிகை தோறும் ஒழுக் கமற்றவர்களை நெறித்து அணு அணுவாகச் சித்திர வதை செய்வான்.

ஒழுக்கமுள்ளவன் நிம்மதியாக வாழ்வான் பயமில்லாமல் வாழ்வான். ஒழுக்கமற்றவன் நாள் தோறும் செத்துப் பிழைப்பான். நிம்மதியாக வாழ் வதற்கு ஒழுக்கம் தேவை.

அறம், ஒழுக்கம், தெய்வபக்தி ஆகியவற்றுக்கு அழிவு என்பதே இல்லை

நல்லொழுக்கம் கொண்டவர்கள்தான் மற்றவர்க ளுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும். அத்தகை யவர்களையே மக்களும் தங்கள் வழிகாட்டியாக ஏற்பார்கள். மதிப்பார்கள்.

ஒழுக்கத்துடன் வாழும் வாழ்க்கை ஆண்டவ னுக்குப் பிரியமானது.

**ஒழுக்கம் என்பது ஓர் உயர்ந்த செல்வமாகும்.**

"ஒழுக்கம்தான் மனிதனுக்கு உயர்வு தருகிறது. அதனால் அதை வருந்தியேனும் காக்க வேண்டும்" (குறள்132) என்று, திருவள்ளுவர் குறிப்பிடு கிறார்.

மனிதன் எந்தச் சூழ்நிலையில் வாழ்பவனாக இருந்தாலும், அவன் கடைப்பிடிக்கும் ஒழுக்கம் தான் அவனுக்குத் துணையாகவும், அரணாகவும் இருக்கும். ஒழுக்கம் இல்லாத மனிதன் கயவன் ஆகிவிடுகிறான்.

எப்படியும் நாம் ஒரு நாள் செத்துத்தான் போகப் போகிறோம். அப்படி இருக்கும் போதுஇந்த உலகில் நாம் (ஏன் ஒழுக்கத்துடன் வாழக் கூடாது? ஒழுக் கத்துடன் வாழ்ந்தால் தான் என்ன?எவ்வ ளவுதான் ஒருவனிடம் செல்வம் இருந்தாலும் பட்டம், பதவி, அந்தஸ்து இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால் அவனது வாழ்க்கை பழிக்குரியது, உலகம் அவனைத் தூற்றும். அவ னுக்குச் சிறப்பில்லை.

ஒழுக்கமற்றவர்கள் இறுதியில் செல்லாக்கா சாகிச் சீரழிந்து போவார்கள். ஒழுக்கம் தனிமனி தனைப் பாதுகாக்கும், குடும்பத்தைப் பாதுகாக்கும், சமுதாயத்தைப் பாதுகாக்கும், நாட்டைப் பாது காக்கும், உலகைக் காப்பாற்றும். உயர்ந்த தனி மனித ஒழுக்கத்திற்குச் சான்றாய் விளங்கியவர் பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர். நல்லவற்றை உள்ளத்தில் தங்க வைத்துக் கொள்வதும், தீயவற்றை உள்ளத்திலிருந்து வெளியேற்றுவதும் தான் கலைகளிலேயே மிகவும் பெரிய கலையாகும்.



# சோதிட துளிகள்

ஒருவரது ஜனன ஜாதகத்தில் 9க்கு டையவன் நின்ற இடத்திலிருந்து லக்னாதிபதி 5, , 10 இல் இருந்தால் ஜாதகன் வாழ் வில் என்றுமே பாக்கியம் உள்ளவன். தெய்வ அருளால் ஏதோ ஒரு வழியில் பணம் வந்து கொண்டிருக்கும் பிற ருக்கு உதவி செய்யும் குணம் இருக்கும்.

ஜாதகத்தில் சுக்ரனுடன் கேது இணைந்து சுக்ரன் ஆட்சியோ அல்லது உச்சம் பெற்றோ அல்லது கேது உச்ச ராசியில் சுக்ரனோடு இருக்க பிறந்த ஜாதகருக்கு தன் வாழ்நாள் முழுவதும் செல்வமானது ஊற்று போல் பெருகி உன்னத நிலையை அடைவர். ஒருவருடைய ஜனன லக் னத்துக்கு 2, 5 வீடுகளில் குரு அமைந்து, புத னையோ, அல்லது சுக்ரனையோ குரு பார்த்தால் அவருக்கு கலாநிதி யோகம் ஏற்படும். இதன் பலன், சோகமில்லா சுக வாழ்வு, சொகுசு வீடு, வாகன சுகம் ஆகியவை ஏற்படும்.

ஜனன லக்னத்திற்கு 2 இல் ராகு, கேது இருப் பது தோஷமே. ஆனால் 2, 8மிடம் மேஷம், ரிஷபம், மிதுனம், சிம்மம், தனுசு என்ற ராசியாக வந்தால் யாதொரு தோஷமும் இல்லை.

ஒருவரது ஜாதகத்தில் ராகு லக்னத்திலிருந்து ஆறாம் வீட்டில் பலமுடன் திகழ்ந்தால் அஷ் டலட்சுமி யோகம் ஏற்படுகிறது. இதன் பலன் செல்வம், செல்வாக்கு, புகழ், கீர்த்தி திடீர் பணவ ரவும் அதிர்ஷ்டம் ஏற்படும்.

லக்னத்தில் லக்னாதிபதி பலம் பெற்று இருந் தாலும் அல்லது குரு, சந்திரன் பலம் பெற்று இருந்தாலும் பார்த்தாலும் இவர் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் அடைவார்.

ஒருவரது ஜாதகத்தில் புதன், லக்னத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ 1, 4, 7, 10 இல் இருந்து 2 ஆம் இடமான வாக்கு ஸ்தானத்தை குரு பார்க்க பிறந்தவர் ஜோதிடம் சொல்வதில் புகழ் பெறுவார். மேலும் வாக்கு பலிதம், வாக்கு வசியம் ஏற்படும். பெண் ஜனன ஜாதகத்தில் லக் னத்திற்கு ஏழாம் இல்லத்தில் பாபக்கிரகங்களும் பாக்கியஸ் தானமான 9 ஆம் இல்லத்தில் சுபக்கி ரகங்களும் இருக்க எம்மதம் ஆயினும் அவள் சன்னியாசி யாக இருப்பாள். ஒரு ஆண் ஜாத கத்தில் ஜனன லக்னத்திற்கு 4 ஆம் இல்லத்தில் சனி இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகருக்கு வளர்ப்பு தாய் இருக்க வேண்டும்.

ஜனன லக்னத்தில் 3க்கும், 9க்கும் உரிய கிர கங்கள் பலம் பெற்று குரு, சுக்கிரன் தொடர்பு இருப்பின் ஜாதகன் தெய்வ அருளால் ஜப, தவங்கள் செய்து மடாதிபதி ஆவார்.

ஒன்பதாம் அதிபதி ஆட்சி, உச்சம் பெற்றோ அல்லது திரிகோணத்திலோ இருந்து சுபரால் பார்க்கப்பட்டால் வறுமையான குடும்பத்தில் பிறந்து அபார செல்வ நிலையை அடைந்து பல பேரை வாழ வைக்கும் உன்னத அமைப்பு உண் டாகும். இவர் பிறக்க இவரை பெற்றோர் என்ன தவம் செய்தனரோ என்று கூறுவார்கள்.

திருமணத்திற்கு பின் மனைவி மூலம் சொத் துக்களை அடைந்து இன்பகரமான வாழ்க்கை வாழ்பவர்கள் ஜாதகத்தில் 7 ஆம் இட அதிபதி, 9, 11 ஆம் பாவத்தில் நின்று சுபராகவும் சுபர் வீடுகளில் இருக்கும் நிலையானால் யோகம் யோகமே வாழ்வில் நாளும் சுகமே. ஒரு ஜாதகத்தில் 11க்குரியவரும் 3க்குரிய வரும் இணைந்து 7 இல் இருந்திட மூத்த சகோதர சகோ தரிகளாலும், பெண்களால் தொல்லையும் பல பெண்களுடன் தொடர்பும் ஏற்படும். ஒரு ஆண் ஜாதகத்தில் களத்திர ஸ்தானத்தில் ராகு, சனி இருந்தால் மனதிற்கு பிடித்தாற்போல் மனைவி அமையாது மனைவியால் எந்த விதத்திலும் ஆதாயம் இருக்காது மகிழ்ச்சியும் இருக்காது.

ஒரு பெண் ஜாதகத்தில் லக்னத்தில் சந்தி ரனும், சுக்ரனும் இருந்தால் உண்மையிலேயே அப் பெண் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்க பிறந்தவள். ஜனன லக்னத்திற்கு 3 ஆம் வீட்டில் சுப கிரகம் இருந்தால் நற்குணம், தன தான்யமும் சுகமும் கொண்ட வாழ்க்கை அமையும்.

**ஆர்.சூரியநாராயணமூர்த்தி**




மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

உள்ளதை உள்ளபடி சொல்லி தன் தன்மை மாறாத கன்னி ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ராகு கேதுகளால் சில துன்பம் வந்தாலும் குருவின் அருளால் அதை நடக்காமல் செய்து வருவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணபீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் பொறுப்பு தன்மையால் செயல்பாடுகள் திருப்தியாக இருக்கும். சிறு விடயமாக இருந்தாலும் கருத்து ஒற்றுமையுடன் பேசி அனைவரிடமும் வாழ்த்துகளை பெறுவீர்கள். பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது நலனின் அக்கறையுடன் செயல்படும் நீங்கள் பிறருக்கு உதவி செய்வதில் கருணையுடன் ஈடுபாடு கொள்வீர்கள். திரைமறைவில் நடக்கும் சம்பவங்களை வெளிச்சமிட்டு காட்டுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

தொழிலில் தனி கவனம் செலுத்தும் நீங்கள் சில நேரம் கடுமையான போட்டிகளையும் சந்திக்க வேண்டி வரும். எல்லா துன்பங்களிலிருந்தும் உங்களை சனி காப்பாற்றி நன்மை பெற செய்வார். கைவினை பொருட்களுக்கு நல்ல மதிப்பு இருக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் போட்டிகளில் ஈடுபாடுகள் கொள்ள வேண்டி வரும். தன்னை பழித்தவரை கடைசி வரை விடாமல் பேசி உடன்பாடு படசெய்வீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்களிடம் நல்ல தொழில் வளர்ச்சியை எதிர்பார்க்கலாம். உறுதியான முடிவுகளில் நன்மை கிடைக்கும். வங்கி கடன் வசதிகளும். பொருளாதாரத்தில் முன்னேற்றமும் பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு**

கல்வியின் தொல்பொருள் ஆராய்ச்சி, மருத்துவம், பொருளாதாரத்தில் சிறப்பான முன்னேற்றம் பெறுவீர்கள். அதிக மதிப்பெண் பெற வாய்ப்பு அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

18.04.2015 சனி மாலை 05.30 முதல் 20.04.2015 திங்கள் இரவு 09.12 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**

வருமானத்தை பெருக்கி கொள்ள புதிய தொழிலில் முதலீடுகளை செய்வீர்கள். பணியாளர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும்.

**ஹஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

மனித குலத்திற்கு எதையாவது செய்ய வேண்டுமென்ற கொள்கையுடன் ஏதாவது செய்ய முன் வருவீர்கள் ஒன்லைன் வர்த்தகம் சிறப்பாக அமையும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

சிறப்பான கொள்கைகளை உடைய நீங்கள் தன்னை சார்ந்த பிரச்சினைகளை தனியே இருந்து எதிர்த்து செயல்படுவீர்கள். முக்கியமான விடயங்களில் கவனமாக செயல்படுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பச்சை, வெண்மை, மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள்:** தென்மேற்கு, தெற்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி, திங்கள்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**



வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் துர்க்கை அம்மன் கோவில் சென்று குங்குமச்சிமிழ் தானம் தந்து வணங்கி வர தடைப்பட்ட காரியம் நிறைவேறும்.

# அன்னம் வழங்கிய அன்னபூரணி

கதையமைப்பு : ஆர்.வி.




4
நீ உலக அன்னை. உன்னை ஒரு போதும் பாவம் அணுகாது. பிராயசித்தமாக நீ தவம் செய்ய வேண்டிய அவசியமில்லை.
இருந்தாலும் உலகிற்கு முன்னுதாரணமாக நான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக உங்களை விட்டுப் பிரிந்து சில காலம் நான் தவத்தில் ஈடுபடுவதுதான் நியாயம்.
5
உதவி ஈசனிடம் பலவாறு மன்றாடி பிரார்த்தனை செய்து, முடிவில் அனுமதி பெற்றுவிட்டாள்.
முதலில் பத்ரிகாசிரமத்திற்குச் செல்கிறேன். அங்கே காத்யாயன மகரிஷி இருக்கிறார். அவர், ஜகன்மாதவாகிய நானே அவருக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாகத் தவம் செய்துகொண்டிருக்கிறார். இப்போது அவரது அந்த விருப்பத்தையும் நிறைவேற்றுகிறேன்.
6
காத்யாயன மகரிஷியின் முன்பு உமாதேவி ஸ்வயம்புக் குழந்தையாகத் தோன்றினாள்.
உலக அன்னையே! உன் அருளால் நீதான் இப்போது குழந்தையாகப் பிறந்திருக்கிறாய் என்பதை நான் அறிந்து கொண்டேன். உன்னை என் மகளாக வளர்ப்பேன். உனக்குக் காத்யாயினி என்று பெயர் சூட்டுகிறேன்.
7
குழந்தைப் பருவத்திலிருந்தே தபஸ்வினியாக வளர்ந்த காத்யாயினி கன்னிப்பருவம் அடைந்தாள். அப்போது காசி மாநகரில் கடுமையான பஞ்சம் தலை விரித்தாடுகிறது என்ற செய்தி எட்டியது.
அப்பா! நான் காசிக்குச் சென்று மக்களைப் பசி துன்பத்திலிருந்து விடுவிக்க விரும்புகிறேன். அதற்கு எனக்கு அனுமதி கொடுங்கள்
மகராசியாகப் போய் வா, மகளே! உனக்கு வெற்றி உண்டாகட்டும்!


8 பஞ்சம் தலைவிரித்தாடிய காசி மாநகரத்திற்கு தேவி சென்றாள்.
அங்கு அவள் தன் தெய்வீக சங்கல்பத்தால் ஒரு பெரிய மாளிகையை எழுப்பினாள்.
அந்த மாளிகையில் அவள் தன் கையில் உணவு எடுக்க எடுக்கக் குறையாத ஓர் அட்சய பாத்திரத்துடன் அன்னபூரணியாகக் காட்சியளித்தாள்.
எல்லோரும் வாருங்கள்! இனிமேல் யாரும் பசியால் வருந்தக் கூடாது. அன்னபூரணி அழைக்கிறேன். வாருங்கள், எல்லோரும் வயிறாற உணவருந்திச் செல்லுங்கள்!
9 வந்தவர்கள் எல்லோரும் திருப்தியாக வயிறு நிரம்பச் சாப்பிட்டார்கள்.
அன்னம் வழங்கிய அன்னபூரணியை மக்கள் வாயார வாழ்த்தினார்கள்.
தாயே! அன்னபூரணியே! நீ வாழ்க! உன் புகழ் ஓங்குக!
நாட்டில் நிலவிய பஞ்சம் காரணமாக காசி ராஜாவின் தானியக் களஞ்சியம் காலியாக இருந்தது.
இந்த நிலையில் எவ்வளவு பேர் சென்றாலும், அவ்வளவு பேருக்கும் அன்னபூரணி தன் மாளிகையில் வயிறாற விருந்து படைத்து உபசரித்தாள்.
அன்னபூரணியின் இந்த அதிசயச் செயல் காசி ராஜாவுக்கு எட்டியது.
அவர் சேவகன் ஒருவனை அன்னபூரணியிடம் அனுப்பினார்.
11 ராஜ சேவகன் தேவியின் முன் நின்று வணங்கினான்.
தேவி! காசி ராஜா உங்களிடமிருந்து சிறிதளவு தானியம் கடனாக வாங்கி வரச் சொன்னார்.
சேவகரே! இங்கு தானியம் கடனாகக் கொடுப்பதற்கில்லை.
எத்தனை பேர் வேண்டுமானாலும் இங்கே வந்து தாராளமாகச் சாப்பிட்டு விட்டுப் போகலாம்! இதை அரசரிடம் போய் சொல்லுங்கள்!

12 அதைக் கேட்ட அரசன், "நான் இந்த நாட்டின் மன்னன்... எனக்கே இப்படி பதில் சொல்லி அனுப்பும் இந்தப் பெண்மணி யார்? என்று யோசித்தான். அதைத் தொடர்ந்து அரசனும் அமைச்சர்களும் கலந்து பேசி அன்னபூரணி இருக்கும் இடம் சென்று அவளைச் சோதிக்க முடிவு செய்தார்கள்.
எனவே அவர்கள் மாறு வேடத்தில் அன்னபூரணியின் மாளிகைக்குச் சென்று சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்களுக்கு அன்னபூரணியே விதவிதமான உணவு வகைகளைப் பரிமாறினாள்.


இது என்ன அற்புதம்! எடுக்க எடுக்க உணவு குறையவே இல்லையே!



ஆமாம்! இப்படியெல்லாம் சாதாரண பெண்மணி ஒருத்தியால் செய்யவே முடியாது. இவர் தெய் வாம்சம்பெற்றவராகஇருக்கவேண்டும்.இவற்றைத் தெய்வசக்தியால்தான் நிகழ்த்த முடியும்!

13 சாப்பிட்டு முடித்த பிறகு...


காசியின் மன்னரே! தாங்களும் அமைச்சர்களும் திருப்தியாகச் சாப்பிட்டீர்களா?



தெய்வீக அன்னையே! தாங்கள் என் அரண்மனைக்கு எழுந்தருளி அருள் புரிய வேண்டுகிறேன்!

14 தேவி தன் சுயரூபத்தில் பார்வதிதேவியாக அவர்களுக்குக் காட்சியளித்து அரசனை வாழ்த்தினாள்.

அரசே! உன் உள்ளம் தூய்மையானது. எனது அருளால் இனி இந்த நாட்டில் மழை பொழிந்து, பஞ்சம் நீங்கும்; நாடு செழிக்கும். நான் தொடர்ந்து இங்கேயே இருப்பதற்கில்லை. நான் விரைவில் தவம் செய்வதற்காகப் புறப்பட்டுச் செல்ல வேண்டும். மேலும், எனது அருளால் நீ இந்த பிறவியிலேயே முக்தியும் பெறுவாய் என்று வாழ்த்துகிறேன்.



அன்னையே!
நீங்கள் தவம் புரிவதற்காகக் காசியிலிருந்து சென்றாலும் தங்களின் தெய்வீக சாந்நித்தியம் நிரந்தரமாக என்றென்றும் காசியில் இருப்பதற்கு அருள் புரியுங்கள்.

15 அரசனின் வேண்டுகோளுக்கு அன்னபூரணி மனமிரங்கினாள். ஆதலால் அவள் காசித் திருத்தலத்தில் தன்னுடைய தெய்வீக சாந்நித்தியம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று கூறி அருள் புரிந்தாள். பின்னர் தவம் புரிய சென்றாள். இன்றும் காசியில் அன்னபூரணியின் ஆலயம் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. அங்கு எழுந்தருளியிருக்கும்அன்னபூரணிபக்தர்களுக்குத் தன் அருளை எப்போதும் வாரி வாரி வழங்கியபடியே இருக்கிறாள்.





# துலாம்

மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

சுமைகளை கூட சுகமாக எண்ணும் துலாம் ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஏழாமிடத்தில் கிரக நிலை வலுபெற்று இருப்பதால் உங்களின் முயற்சிகளுக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் நன்மையாக அமையும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் முயற்சிக்கு நல்ல வளர்ச்சி கிட்டும். திறமைசாலிகள் வருமானத்தை பெருக்கிக் கொள்வீர்கள். தொழிற்சங்க பணிகளில் சிறப்பாக செயல்பட்டு நன்மை பெறுவீர்கள். பொருளாதாரத்தில் தேவைகள் நிறைவேறும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

எதையும் பலருக்கு நன்மை கிடைக்கும்படி செயல்படும் நீங்கள் பொது நலனில் கவனமுடன் செயல்படுவீர்கள். குடும்ப பாரம் நீக்கி பலரின் குடும்பங்களை வாழ வைக்க உதவியாக இருப்பீர்கள். பொருளாதாரத்தில் நன்றாக இருப்பீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானத்தில் குரு வக்கிரமாகி தொழில் ஸ்தானாதிபதி பார்வை பெறுவதால் எந்த தொழிலாக இருந்தாலும் இம்மாதம் பண புழக்கம் நன்றாக இருக்கும். நவரத்தின வியாபாரம் சிறப்பாக அமையும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் நடிப்பு, இசை, நாட்டியம் போன்ற துறையில் வளர்ச்சியை பெறுவீர்கள். கடல் கடந்து சென்று வர முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி யை பெறுவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் சுபகாரிய முயற்சிகள் நல்ல பலனை தரும். சுயதொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதாரத்தில் மேன்மை அடைவீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியல் வளர்ச்சியை பெறுவீர்கள். புதை பொருள் ஆராய்ச்சி, பொருளாதாரம், மருத்துவம் போன்ற கல்வி சிறப்பாக அமையும்.

இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

20.04.2015 திங்கள் இரவு 09.13 முதல் 22.04.2015 புதன் இரவு 02.47 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்

கட்டிட கலையில் சிறந்து விளங்கும் நீங்கள் புதிய கட்டிடம் கட்டும் வாய்ப்புகள் அமையும். பொருளாதாரத்தில் உயர்வை பெறுவீர்கள்.

### சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சுறுசுறுப்பாக செயல்படும் உங்களுக்கு தனித் திறமைகளை வளர்த்து கொள்வீர்கள். தொழிலில் வெளிநாட்டு வாய்ப்புகளும் அமையும்.

### விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

புதல்வருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். தொழிலில் சில நேரம் பண பிரச்சினைகள் வந்து நன்மை உண்டாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பழுத்த வெண்மை, நீலம், பச்சை

**அதிர்ஷ்ட திசைகள்:** மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** வெள்ளி, புதன், ஞாயிறு

## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை காலை 06.00 மணி முதல் 07.00 மணிக்குள் தட்சணா மூர்த்தியை வணங்கி மஞ்சள் பொடி அர்ச்சனை செய்து கொண்டை கடலை வைத்து வணங்கி வர தடைகள் நீங்கி நன்மை உண்டாகும்.





# சீரடி சாய்பாபா இவருக்குள் அவர்

பம்பாயைச் சேர்ந்த சேட் அரிச்சந்திர பிடாலி என்பவரின் மகனுக்குக் காக்கை வலிப்பு என்ற நோய் இருந்தது. ஆகவே அரிச்சந்திர பிபாலி தன் மனைவி மகனுடன் சீரடி வந்து சேர்ந்தார். பாபாவை தரிசனம் செய்தவுடன் சிறுவன் கீழே விழுந்தான். காக்கை வலிப்பும் வந்தது. அவன் தாய் "திருடனுக்கு பயந்து ஒரு வீட்டில் ஏறி ஒளிந்த போது கீழே விழுந்தது போலும் புலிக்கு பயந்த பசு கசாப்புக் கடைக்காரனிடம் அகப்பட்டது போலும், மழை, மின்னல் இடிக்கு பயந்து மரத்தடியில் ஒதுங்கிய நேரத்தில் அந்த மரம் அவன் மீதே சாய்ந்து விழுந்தது போலும், வரம் பெற ஆலயத்திற்கு வந்தால் அவன் மீதே இடி விழுந்தது போலும் உங்களை நாடி வந்தால் உங்கள் முன்பே இறந்து விடுவான் போலே இருக்கிறதே" என்று கதறினாள். அப்பொழுது "கவலையை விடு! பிள்ளையை எடு! இறைவனையே நம்பிடு! கொஞ்சம் நேரத்தில் நலம் பெறு வான்" என்றார் சாயிபாபா.

சிறுவன் சிறிது நேரத்தில் நலத்துடன் விழித்து எழுந்தான். "நம்பிக்கையும், பொறுமையும் உள்ளவர்களை ஸ்ரீ ஹரி பாது காப்பார். இப்பொழுது நிம்மதி அடைந்ததா உள்ளம்" என்று கேட்டார் சாயிபாபா.

மகன் குணமடைந்த மகிழ்ச்சியில் அரிச்சந்திர பிடாலி தம்பதிகள் அனை வருக்கும் இனிப்பு கொடுத்து பாபாவை வணங்கி விடை பெறுவதற்கு அனுமதி கேட்டனர்.


அந்தச் சமயம் பாபா, அவர்களுக்கு உதி (விபூதி) கொடுத்து ஆசி வழங்கி. அத்துடன் ரூ.3 **கொடுத்து "முன் ஒரு சமயம் ரூ.2 கொடுத்து உள்ளேன். அத்துடன் இதையும் சேர்த்து பூஜையில் வைத்து வணங்கி வர நலம் கிட்டும்" என்று கூறி அருளினார்.**

**முதல் முறையாக சீரடி வந்து சாயிபாபாவை தரிசிக்க வந்த அவர் களுக்கு பாபா கூறியது புரியாத புதிராக இருந்தது.**

**பிறகு தம்முடைய ஊரை அடைந்தவுடன் அவருடைய அன்னையிடம் கேட்ட போது. அவருக்கும் முதலில் புரியவில்லை.**

**பிறகு சிந்தனை வந்தது. அரிச்சந்திர பிடாலி சேட்டின் தந்தையார் அரிச்சந்திர சேட் சிறுவனாக இருந்த போது, தந்தையும் மகனும் "அகல் கோட் மஹராஜ்" என்ற ஞானியைத் தரிசனம் செய்த போது, அவரிடம் ரூ.இரண்டு பெற்று பூஜையில் வைத்து வணங்கி வந்தனர். பின்பு அந்த இரண்டு ரூபாய் காணாமல் போனது. இதனைத்தான் பாபா நினைவுப்படுத்தினார்.**

**அந்த ஆகல்கோட் சுவாமியே சாயி பாபாவாக அவதரித்துள்ளார் என்று புரிகிறது அல்லவா?**



# மாயையாய் என்றும் இருந்திடும் மாயை!

மாயைக்கு எத்தனை எத்தனையோ விளக்கங்களை நம் சாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றன. அத்தனை விளக்கங்களுக்கும் பிடிபடாமல் மாயை பற்றிய கருத்து, இன்னும் நமக்கெல்லாம் மாயையாகத் தான் இருக்கிறது.

"யாமா" என்ற. சொல், "எது இல்லையே அதுவே மாயையாகும்" என்ற பொருளில் அமைந்துள்ளது. ஆனால் மாயையை இல்லை என்றும் சொல்ல முடியாது," இருக்கிறது என்றும் சொல்ல முடியாது. ஆதலால், "அது அநிர்வசநீயமானது (விவரிக்க முடியாதது)" என்று விவேகசூடாமணி போன்ற வேதாந்த நூல்கள் கூறுகின்றன.

மாயையைப் பற்றி வர்ணிக்கும் போது, "த்ரிகுணாத்மிகா" என்று விவேகசூடாமணி குறிப்பிடுகிறது. "மாயா பஞ்சகம்" என்ற சுலோகத்தில் ஆதி சங்கரர், "மாயை முடியாத காரியங்களைச் செய்து முடிப்பதில் திறமையுடையது (அகடிதகடனாபடி

யஸிமாயா)" என்று திரும்பத்திரும்ப ஐந்து பாடல்களிலும் கூறியுள்ளார். பொதுவாக நிர்க்குணப் பிரம்மத்தை சிவனுக்கும், பிரம்மத்திடமிருந்து பிரிக்க முடியாத மாயாசக்தியை அம்பாளுக்கும் ஒப்பிடுவது வழக்கம். பெண்ணுக்கே உரித்தான தனிசக்தி மோகத்தையும் மயக்கத்தையும் ஏற்படுத்தும் சக்தி என்பர். அதன் அடிப்படையில் மாயாசக்தியும் உலகையே மயக்கி ஆட்டிப்படைப்பதால், மாயையைப் பெண்ணுக்கு ஒப்பிட்டு கூறியுள்ளனர்.

மாயை முக்கணமயமானது என்பது போல், மாயை பல வடிவங்களை எடுக்க வல்லது என்ற கருத்தில், "மாயா பஹுரூபிணீ" என்றும் சொல்வதுண்டு. எனவே, மாயையை இன்னது தான் என்று ஓர் எல்லைக்குள் உட்படுத்திச் சொல்வது சாத்தியமில்லை. அது ஆயிரமாயிரம் வேஷங்களைப் போடும், ஆயிரமாயிரம் விதங்களில் ஜீவர்களை அலைக்கழிக்கும்.

சொரூப சக்தி, தடஸ்த சக்தி, மாயா சக்தி என்று மாயைக்கு மூன்று விதச் சக்திகள் உண்டு இந்தக் கருத்து, சைதன்ய சித்தாந்தத்திலும் வல்லப சித்தாந்தத்திலும் இடம் பெற்றுள்ளது.

சொரூப சக்தி என்பது இறைவனிடமுள்ள மாயா சக்தியைக் குறிக்கும். மாயாசக்தி என்பது பொதுவாக நாம் அறிந்திருக்கிற மாயையைக் குறிக்கிறது.

மேலே குறிப்பிட்ட மாயையின் மூன்று சக்திகளும் இணைந்துள்ள நிலையில் ராதை எனப்படுகிறாள்.இறைவன் (ஸ்ரீகிருஷ்ணன்) இந்த மூன்று வித மாயாசக்திகளுக்கும் அதிபதியாக விளங்குகிறான்.

சுவாமி விவேகானந்தர் வேதாந்த ரீதியில் மாயைக்கு விளக்கம் அளித்து நிகழ்த்திய சொற்பொழிவுகள், அவரது "ஞானயோகம்" என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றை நீங்கள் அவசியம் படியுங்கள்.


**மாயையைக் கடக்கும் வழி**

பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "குணமயமான எனது தெய்வீக மாயை கடத்தற்கரியது. ஆனால் என்னை எவர் பக்தியுடன் வழிபடுகிறார்களோ, அவர்கள் மாயையைக் கடப்பார்கள்" என்று (கீதை 714) கூறியுள்ளார்.

மாயையைக் கடப்பதற்கு எளிய வழி பகவானை வழிபடுவது தான். மனமுருகிய பிரார்த்தனையும், தீவிர ஆத்மசாதனையும் இருந்தால் குருவருளாலும் திருவருளாலும் மாயையைக் கடக்க முடியும்.


## சொர்க்கவாசல் திறக்க காரணம்!!

**எம்பெருமானுடன் போரிட்டு, அவரின் அருள் பெற்ற அரக்கர்கள் இருவர், தாம் பெற்ற வைகுண்ட இன்பத்தை உலகில் உள்ள எல்லோரும் பெற வேண்டும் என்று விரும்பி ஆண்டவனிடம் வைகுண்ட ஏகாதசி தினத்தில் திருவரங்க வடக்கு வாசல் வழியாக தாங்கள் அர்ச்சாவதாரத்தில் வெளிவரும்போது தங்களை தரிசிப்பவர்கள் எத்தகைய பாவங்கள் செய்து இருந்தாலும் அவர்களுக்கு முக்தி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அவர்களின் வேண்டுகோளை பெருமான் ஏற்றுக் கொண்டார். அதன் காரணமாகவே வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறக்கப்பட்டு சாமி பவனி வரும் நிகழ்ச்சி ஏற்பட்டது.**





# சமநிலை தன்னம்பிக்கை தரும்




ஈர்ப்பு விசை காரணமாய் பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளத்தைப் போல் இச்சக்கரம் மனதைக் கீழ்நோக்கி இழுக்கக் கூடியது. அப்படி இழுத்து மனதில் குழப்பத்தையும் அமைதி யின்மை யையும் உண்டு பண்ணி விடும். ஒருவர் ஆரோக் கியத்துடன் திகழ வேண்டுமென்றால் அவருடைய உடலும் மனதும் இயற்கை சார்ந்த (சூழ்நிலை) கட் டுப்பாடுகளைப் புரிந்து கொண்டு மதிக்க வேண்டும். இந்த நிலையில் உடல் சார்ந்த இச்சைகளும் மனம் சார்ந்த கற்பனைகளும் அவருக்குப் பிரச்சினையா கவே இருக்கும். உடலும் மனமும் ஓர் இணக்கமான, அமைதி நிலையை அடைய வேண்டுமெனில் உண் பது, உறங்குவது உடலுறவு கொள்வது இவை கட் டுப்பாட்டில் இருக்க வேண்டும்.இரண்டாம் சக்கர நபர் தன்னை ஒரு பிரபுவாய், சாகசக்காரராய், வீரராய் பாவித்துக் கொள்வார். (Selfesteem) தன்மதிப்பை உய ரளவில் பராமரிப்பார்.

சுவாதிட்டான சக்கரம் விண்ணுக்கும் மண்ணுக் கும் இடையிலான தளத்தை (astral plane) சூழ்ந்து கொண்டிருக்கிறது. இங்கே நிலவுலகம் ஓர் ஆபர ணமாய் ஜொலிக்கிறது. விண்ணுலகம் கைக் கெட் டுவதால் தோன்றுகிறது. பயனற்ற தன்மையில் வெறுமையே மிஞ்சும். கற்பனை கைகொடுக்கும் அருங்கலைகளில், உலகத்தை எதிர்மறை மனதோடு பார்ப்பவர்க்கு எதிலும் கிளர்ச்சி ஏற்படாது, எதுவும் அவரைத் திருப்திப்படுத்தாது. அடுத்தவருடைய நேரத்தை, பண்புகளைத் தனதாக்கிக் கொள்ளும் விருப்பத்தில் பொறாமை தோன்றுகிறது. இது மனக் கவலையில், அழிவு தரும் நிலையில் முடிகிறது. மகிழ்ச்சியான தளமோ ஆழ்ந்த மனநிறைவை அளிக் கிறது.

"மகிழ்ச்சி உங்கள் உணர்வுநிலையில்
ஊடுருவிப் பரவி நிற்கும்"

குறியீடு: இச்சக்கரம் ஆறு செந்நிற இதழ்கள் கொண்டதாகும். இந்த அழுத்தமான வண்ணம் மனதைத் தூண்டும் எண்ணங்களும் விருப்பங்களும் இச்சக்கரத்தில் தோன்றுவதைக் குறிக்கிறது.

இந்தச் சக்கரத்தின் யந்திரம் பிறை நிலா வடிவம் கொண்டது. சந்திரன் உள்ளில் மறைந்து கிடக்கும் தன்னுணர்வற்ற சக்திகளை அடையாளம் காட்டுவது. அத்துடன் சந்திரனுக்குரிய குறியீடு பெரும்பாலும் பெண்களை அடையாளப்படுத்துவதாகும். அவர் களுடைய மாதவிலக்கும் ஒரு சுழற்சியின் படி நிகழ் கிறது அல்லவா. சுவாதிட்டான சக்கரத்தின் சமநிலை தன்னம்பிக்கையை, படைப்பாற்றலைக் கொடுக்கும் ஆக்கபூர்மாய் பயன்படுத்தினால் கற்பனையும் பாலு றவு சக்தியும் ஒரு முழுமை உணர்வை ஏற்படுத்தும்.

ஒட்டுமொத்த சக்கர அமைவுக்கும் ஆக்க மையமாய் இருப்பது இரண்டாம் சக்கரம். இதன் அதிர்வுகள் உடம்பெங்கும் ஓடிக் கொண்டிருக்கும் ஆக்கத்திறனை உயர்த்தும். மனித சரீரம் இயல்பி லேயே உள்நோக்கியும், வெளிநோக்கியும் பாய்கிற சக்தியைக் கொண்டது. புறத்தே பாயும் சக்தி சக்கரங்

களின் மையத் தில் தொடங்கி, உடம்பைச் சுற்றியிருக்கும் ஒளிப் பிரபையில் பாய்கிறது, அதிர்வை ஏற்படுத்துகிறது. உள்நோக்கிப் பாயும் சக்தியோ வெளிவட்டத்தில் இருந்து மையத்துக்குப் பாய்ந்து அதிர்வை ஏற் படுத்தும். இரண்டு சக்தியோட்டங்களும் ஓர் இணைக் கத்தன்மையைக் கொண்டிருந்தால்தான் சாதகர் சமநிலையில் இருக்க முடியும். ஒரு முறை அது சக்கர மையத்துக்குள் வந்து விட்டால் உடலெங்கும் விநியோகிக்கப்பட்டு விடும். காரணம் இரண்டாம் சக்கரம் பால் சார்ந்த சக்தியுடன் சமநிலையில் இருப் பது தான்.

அது சாதகருக்கு மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுக்கிறது. நிலவுலகில் நதிகளுடன் உள்ள தொடர்பை இச்சக்கரம் உருப்படுத்துகிறது. உலகத்தைப் போலவே உடம்பும் எழுபத்து இரண்டு சதவிகிதம் நீரானது நதி களுக்குச் சீரழிவை ஏற்படுத்துகிற மனிதன் தன்னைத்தானே அழித்துக் கொண்டவனாவான். நதிகளை மாசடையச் செய்கிறவன் தன்னைத் தானே மாசு படுத்திக் கொள்கிறான்.



இரண்டாம் சக்கரம் தனது நுண்ணிய சக்திக்கு ஒப்பான மூன்று இராசிக்குறிகளைக் கொண்டிருக்கிறது. அவை கடக ராசிக்கான நண்டு, விருச்சிக ராசிக்கான தேள், மகர ராசிக்கான மீன். இவை முறையே மார்பகத்திலும் பிறப்புறுப்பிலும், பாதங்களிலும் இடம் பெறுகிறவை. இரண்டாம் சக்கரம் சமநிலையை இழந்து விட்டால் இம்மூன்று அங்கங்களும் நலிவடையும் மார்பில் கட்டி, நெஞ்சிறுக்கம், இனப் பெருக்கத்துக்கான சிலை யகத்தில் கட்டி, மாத விலக்கு ஒழுங்கற்றுப் போதல், ஆண்மைக்குறைவு சுக்கியம் என்கிற பெரும் சுரப்பி (prostate) யில் பிரச்சினை என்று பல உபாதைகள் உண்டாகும். பாதங்களில் ஆணி, தோல் தடித்துப் போவது. நகங்கள் உள்நோக்கி வளர்வது போன்ற தொல்லை கள் ஏற்படும். சமயத்தில் சிறுநீரகம், சிறுநீர்ப்பாதை உபத்திரவம், முதுகுவலி போன்றவையும் இருக்கும்.

இரண்டாம் சக்கரம் சமநிலையில் இருந்தால் ஒருவருடைய படைப்பாற்றல் திட்டமிடுகிற ஒவ்வொன்றையும் மகிழ்ச்சியோடு செய்து முடிக்கும். வெளிப்படும் சக்திக்கு அளவேயிருக்காது. சாதகர் எதிலும் வெளிச்சப்பக்கத்தையே காண்பவரா யிருப்பார். எது நடந்தாலும் கவலைப்படமாட்டார்.

**"கடந்த காலத்தில் எதுவெல்லாம் கடினமாயிருந்ததோ, அதுவெல்லாம் எளிதாகி வெற்றி உறுதி செய்யப்பட்டு விடும்"**

ஆக்கபூர்வமான செயல்முறை புதிய கருத்துகளைத் தோற்றுவிக்கும், புதிய வாய்ப்புகளையும். சாதகர் உண்மையான அன்பைத் தனது நண்பர்களுக்கும், குடும்பத்தவர்க்கும் பகிர்ந்தளிப்பவராயிருப்பார். அடுத்தவர்களிடம் அவருக்குள்ள அக்கறை ஏழைகளுக்கும், நிராதரவானவர்களுக்கும், இன்னலுக்குள்ளான பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உதவு மளவிற்கு விரிவுபடும். கண்ணியத்துக்குரிய வகையில் மற்றவர்களுடன் பழகுவதே இயல் பான நடத்தை முறையாகும். சாதகர் தன்னுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் அமைதியான முறையில் வெளிப்படுத்துவார்.

அவருடைய உள்ளுணர்வுத்திறன் மிகுதியாய் இருக்கும். தனது உள்ளுணர் வின் குரலைக் கவனமுடன் கேட்டு அதற்கேற்பவே அவர் எதையும் தேர்வு செய்வார். தன்னுடைய முடிவற்ற சக்தியை சமூக நலனுக்காகவே அவர் பயன்படுத்துவார்.

தன்னிடமுள்ள படைப்பாற்றலை கலைகளில் நெறிப்படுத்துவார். ஆன்மாவுடன் அவருக்குள்ள தொடர்பு வியக்கத்தக்கது. ஆன்மா சார்ந்த வழிநடத்தலைப் பெறுவது அவருக்கு எளிதாயிருக்கும். அதீத சக்தியால் சமநிலை இழக் கப்பட்டால் இச்சக்கரத்துக்குரியவர் எதையும் திறமையுடன் கையாள்வார். ஆனால் அடுத்தவருக்கு எது நேர்ந்தாலும் பொருட்படுத்தமாட்டார். தன்னைப் பற்றியே அவர் அக்கறை கொண்டிருப்பார். சுயநலம், பேராசை, கர்வம் இருக்கும். உடைமைகளை, பணத்தைச் சேகரிப்பதே மகிழ்ச்சியளிக்கிற காரியம் என்று தவறாகக் கருதிக் கொள்வார். எத்தனை இருந்தாலும் அதில் திருப்தி ஏற்படாது. இது தன் முனைப்புடன் (Ego) கூடிய மனோபாவம். பணத்தின்பால் விருப்பம் வைத்த மக்கள் அறியாமை, மகிழ்ச்சியின்மை, மனநிறைவின்மை, இவற்றால் கவரப்பட்டு விடுகிறார்கள்.

பி.எஸ்.ஆச்சார்யா

ராசிக்கட்டங்கள்

# அடிப்படை உண்மைகள்

ஜாதகம் கணிக்கும் போது பன்னிரண்டு கட்டங்கள் போடுவார்கள். ஜென்ம நேரத்தில் ஒவ்வொரு கிரகமும் எந்த கட்டத்தில் இருந்தன என்பதை அதில் குறித்திருப்பதைப் பார்த் திருப்பார்கள். தமிழில் இதை ராசிக்கட்டம் என்பார்கள். ஆங்கிலத்தில் வீடுகள் (Houses) என்ற பெயர். இந்தக் கட்டங்கள் அமைப்பதின் அடிப்படை என்ன? இந்த வழக்கம் எப்போது தோன்றியது? சரித்திரத்தையும் விஞ்ஞானத்தையும் சற்றே அலசிப் பார்க்கலாம்.

ராசிக்கட்டங்களின் அடிப்படையிலுள்ள விஞ்ஞானத்தைப் புரிந்து கொள்ள சில அடிப்படையான வான இயல் உண்மைகளை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கிரகங்களின் சுற்றுப்பாதை, பூமியின் சுழற்சி, சுற்று, நட்சத்திரக் கூட்டங்கள் ஆகியவற்றைக் குறித்த அடிப்படை உண்மைகள் தெரிந்தால் மட்டுமே ராசிக்கட்டங்கள் என்றால் என்ன என்பதை விஞ்ஞானப் பூர்வமாக அறிந்து கொள்ள முடியும்.

### அட்ச ரேகை, தீர்க்க ரேகை

பூமியிலுள்ள இடங்களை = நாடுகளை அவை எங்கே இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள வரைபடங்களை (MAP) உபயோகிக்கிறோம் அல்லவா? இந்த வரைபடங்களை சற்றே உற்று கவனித்தால் அதில் குறுக்காகவும் நெடுக்காகவும் பலகோடுகள் இருப்பதைக் காணலாம். இவற்றை அட்ச ரேகைகள், தீர்க்க ரேகைகள் (Latitude and Longitiude) என்கிறோம்.

ஒரு இடம் உலகில் எங்கே இருக்கிறது என்பதை இந்த வரை படங்களில் உள்ள ரேகைகளை வைத்து துல்லியமாகக் கூறி விட முடியும். இத்தனை டிகிரி வடக்கு இத்தனை டிகிரி கிழக்கு என்று கூறினால் போதும் வரைபடத்தில் உதவியுடன் துல்லியமாக அந்த இடத்தைக் கண்டுபிடித்து விட முடியும்.

ஆனால் வான இயலில் ஒரு பெரிய பிரச்சினை உள்ளது பூமியும் பிற கிரகங்களும் ஒரே இடத்தில் நிலையாக இருப்பது இல்லை. சூரியனை அவை நீள் வட்டப் பாதைகளில் சுற்றிக் கொண்டேயிருக் கின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிரகமும் வெவ்வேறு இடங்களுக்கு மாறிக்கொண்டேயிருக்கும்.



எனவே ஒரு கிரகம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வானில் எங்கே இருக்கிறது என்பதைக் குறிப்பிட ஒரு வழிமுறை தேவைப்பட்டது. இதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு வழிதான் நமது ராசிக்கட்டங்கள் ஆங்கிலத்தில் சோடியாக் (Zodiac) என்பார்கள்.

### சோடியாக் சரித்திரம்

அசரிய அரசர்கள் பாபிலோனை ஆண்ட காலத் தில் கி.மு 7ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு. 5ஆம் நூற் றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தான் இந்த சோடியாக் முறை கண்டுபிடிக்கப்பட்டது.



இதற்குப் பல நூற்றாண்டுக ளுக்கு முன்னரே ஒரு வட் டத்தை 360 சம பாகங் களாகப் பிரிக்கும் முறையை பாபிலோ னியர்கள் கண்டுபி டித்து விட்டனர். இன்றைய நவீன விஞ்ஞானத்தில் இந்த ஒவ்வொரு சம பாகத்தையும் ஒரு டிகிரி என் கிறோம் ஒரு முழு வட்டம் என்பது மொத்தம் 360 டிகிரிகள்.

மேலே தெரிகின்ற வானத்தை பாபிலோனி யர்கள் முப்பது டிகிரிகள் கொண்ட பன்னிரண்டு சம பாகங் களாகப் பிரித்தனர். ஒவ்வொரு பாகத் திற்கும் ஒரு நட்சத்திரக் கூட்டம் ஆக பன்னிரண்டு பாகங்கள். பன்னி ரண்டு நட்சத்திரக் கூட்டங்கள்.

இந்த பன்னிரண்டு பாகங்களும், பன்னி ரண்டு நட்சத்திரக் கூட்டங்களுமே பின்னாளில் ஜோதிடக் கலையின் பன்னிரண்டு ராசிக் கட்டங்களாக உரு மாறின.

நவீன டெலஸ் கோப்புகள் போன்ற எந்த விஞ் ஞானக் கருவிகளும் இல்லாத காலத்தில் பாபிலோ னியர்களால் இதை எப்படி சாதிக்க முடிந்தது? இதை புரிந்து கொள்ள வான இயல் விஞ்ஞானத்தை சிறிது தெரிந்து கொள்ள வேண்டும்.

### விஞ்ஞான அடிப்படையில் சோடியாக்

பூமி தனது அச்சில் சுழன்று கொண்டிருப்பதுடன் சூரியனையும் சுற்றி வருகிறது. பூமி ஒரு முறை முழுமையாக சூரியனை சுற்றி வர (360 டிகிரிகள்) எடுத்துக் கொள்ளும் காலத்தையே ஒரு வருடம் என் கிறோம். ஒரு வருடத்திற்கு (360 டிகிரிகள்) பன்னி ரண்டு மாதங்கள் +360 ஐ 12ஆல் வகுத்தால் ஒவ்வொரு மாத் திற்கு 30 டிகிரிகள்.

எனவே தான் பாபிலோனியர்கள் வானத்தை முப்பது டிகிரிகள் கொண்ட பன்னிரண்டு பகுதி களாகப் பிரித்தனர்.

ஒவ்வொரு முப்பது டிகிரிக்கும் (ஒவ்வொரு மாதத்திற்கும்) ஒரு நட்சத்திரக் கூட்டம்.

எந்த மாதத்திற்கு எந்த நட்சத்திரக் கூட்டம் என் பதை எப்படித் தீர்மானித்தனர்? இதிலும் வான இயலே அடிப்படையாக இருந்திருக்கிறது.

பல்லாயிரம் ஆண்டுகள் வானத்தை ஆராய்ந்து வந்த பாபிலோனியர்கள் ஒவ்வொரு நாளும் காலை யில் சூரியன் உதயமாகும் போது அதன் அருகில் தோன்றும் நட்சத்திரக் கூட்டம் எது என் பதைக் குறித்து வைத்தனர்.

இதையே வேறு வகை யாகக் கூறுவ தென்றால் ஒவ்வொரு நாளும் சூரியன் எந்த நட்சத்திரக் கூட்டத்தின் அருகில் உதிக் கிறது என்பதைக் குறித்துக் கொண்டனர்.

இவ்வாறு சூரிய உத யத்தின் போது அதன் அருகில் தெரியும் நட்சத்திரக் கூட்டத்தை ஆங்கிலத்தில் அசன்ட்டென்ட் (Ascendant) என்பார்கள். சூரிய உதயத்தோடு தோன்றும் நட்சத்திரக் கூட்டத்தை சூரிய னோடு எழுதல் (Heliacal Rising) என்பார்கள். இதையே இந் திய ஜோதிட முறையில் நாம் லக்னம் என்கிறோம்.

ஒரு குழந்தை பிறந்த நேரத்தில் சூரியன் எந்த நட்சத்திரக் கூட்டத்திற்கு அருகில் உதயமானதோ அந்த நட்சத்திரக் கூட்டமே அந்த குழந்தையின் "லக்னம்" என எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் சூரியன் வெவ்வேறு நட்சத்திரக் கூட்டங்களின் அருகில் உதயமாவதைக் கண்ட பாபிலோனியர்கள் எந்த மாதத்தில் எந்த நட்சத்திரக் கூட்டத்தில் உதயமாகிறது என்பதை கவனித்து குறித்து வைத்தனர். பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து வானத்தை ஆராய்ந்ததன் பலனாகவே இந்த சோடியாக்கை அவர்களால் உருவாக்க முடிந்தது.

**ஜான் பி. நாயகம்**

# கள்ளச்சிரிப்பை மெல்ல விரித்த குழந்தைக் கண்ணன்!


கம்சனுக்கு ஓரளவு மனம் தெளிந்தது. "சகோதரி வயிற்றுச் சிசுக்களை அநியாயமாகக் கொல்றேனே. சிசுசத்தி தோஷம் என்னைச் சும்மா விடுமா?" என்று கண்ணீர் சொரிந்தான். மைத்துனர் வசுதேவனின் கால்களைத் தொட்டு வணங்கினான். தத்துவங்களைப் பேச ஆரம்பித்தான். தேவகி சற்றே மனம் தேறிக் கொண்டான்.

அரசவையைக் கூட்டிக் கம்சன் மற்ற அரக்கர்களோடு தன் எதிரியைக் கொல்லத் திட்டம் தீட்டினான். ஸ்ரீ ஹரிக்கு ஆதரவான அந்தணர் முனிவர் முதலியவர்களைக் கொள்வோம். பத்து நாட்களுக்கு முன்பு இருந்து பிறந்த குழந்தை எதுவாயினும் கொன்று விடுவோம்" என அந்தக் குட்டி அரக்கச் சாத்தான்கள் வேதம் ஓதின. அதுவே முற்றிலும் சரி என கம்சன் ஆமோதித்தான். அப்படியே அரச கட்டளை அநியாயம் தலைவிரித்து ஆட கட்டளை நிறைவேற்றப்பட்டது.

கோகுலத்தில் கண்ணன் பிறந்த தினத்தை திருவிழாவாகக் கொண்டாடினார்கள். யசோதைக்கும் நந்தனுக்கும் ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. குழந்தை பிறந்தது செய்யும் சடங்குகளை நிறைவேற்றினார்கள். நந்தன் இரண்டு லட்சம் பசுக்களைப் பிராமணருக்குத் கோதானமாகக் கொடுத்தான். எள்ளை ஏழு மலை எனக் குவித்தான். அதற்குள் நவரத்தினங்களையும் பொதிந்து அறவோர் பெரியோர் எல்லோருக்கும் ஈந்தான்.

அன்று ஆயர்பாடியில் உள்ள ஆவினங்களுக்கு அபிஷேகம், ஆராதனை, காலியினங்கள் அங்கே களி கொண்டு இரைந்தன. கண்ணனை வாழ்த்தின. கோபாலர்கள் குளித்து புத்தாடை புனைந்து அலங்கார புருஷர்களாகத் திரிந்தார்கள். யதுகுலப் பெண்டிர் நெற்றிக்கு நூல் இழை எனச் சந்தனக் கோடிட்டு தங்கள் சந்தோஷத்தைக் காட்டினர். அவரவர் தங்கள் உள்ளத்துப் பாரம் குறைய நகை குலுங்க, நளின மேனி அலுங்க, சிரிப்புச் சிதற, சிரசில் தொத்திய சிறு புஷ்பங்கள் தெருவில் சிந்த, கை நிறையப் பரிசுப் பொருள்களை ஏந்தினர். இப்படி யசோதர பாலனைப் பார்க்க பறந்து வந்தார்கள்.

குழலும் கொட்டும் இசை முழங்கின. கோபர்கள் பால், நெய், வெண்ணெய்களை வாரி வழங்கினர்.




நந்தகோபன் ஈந்த வண்ணம் இருந்தான். அண்ணல் இருக்கும் இடத்தில் தானே அலைமகள் இருப்பாள். அதனால் அன்று முதல் லட்சுமி கடாட்சம் கோகுலத்தில் கோலோச்சத் தொடங்கியது.

ஒரு சில நாள்களுக்குப் பின் நந்தன் கப்பம் செலுத்துவதற்காக மதுராவுக்குச் சென்றான். அங்கே அவன் வசுதேவரைச் சந்திக்க நேர்ந்தது. இருவரும் உடல் நலம் ஊர் வளம் பற்றியும் உரையாடிக் கொண்

டனர். ஊடே வசுதேவர் கேட்டார். "உங்களுக்கு மகன் பிறந்தது கேட்டு மிகவும் மகிழ்ந்தேன். அவன் எப்படிஇருக்கிறான்? எனது மகன் பல ராமன் அவனுடைய அன்னை ரோகிணி எப்படி இருக்கிறார்கள்?" எனக் கேட்டார். பின்பு கம்சன், பெற்ற குழந்தைகளை கொன்றதற்குச் சமாதானம் சொன்னார். "விதியின் வலுத்தெரிந்தவர்கள் இப் படி நடந்திருக்க மாட் டார்கள்!" என்று கூறினான் நந்தன்.

அப்போது வசுதேவர் "நந்தரே! கப்பம் கட்டி விட்டுச் சீக்கிரமே கோகுலத்திற்குத் திரும்புங்கள். அங்கே விசித்திர நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக உணர்கிறேன்" என்றதும் நந்தன் கண்ணன் திரு வடி களை நினைந்து துதித்தான்.



### வேதனைப்பட வந்த பூதனை!

அன்று யசோதை தன் குழந்தையைக் குளிப்பாட்டினாள். திருமேனிக்கு அகில் புகை காட்டினாள். நெற்றிக்கு நாமமிட்டுச் சவ்வாது திலகம் இட்டாள். கண்களுக்கு மை தீட்டினாள்.

இதே போல ரோகிணி பச்சைக் குழந்தை பல ராமனுக்கும் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். ராமன் நெற்றிக்கு நாமத்தைத் தீட்டினாள் அப் போது சில கோபியர் திருமகளைப் போன்ற மங் கலத் தோற்றம் கொண்ட மங்கை ஒருத்தியைத் தன் னுடன் அழைத்து வந்தார்கள்.

"இதோ இந்தச் சுமங்கலியைத் தெருவிலே கண்டோம். இவள் ஆயர்பாடியில் குமரன் பிறந்த திகதி கேட்டு குதூகலத்தால் அதைப் பார்க்க ஆசைப்பட்டு ஓடி வந்தாளாம்! அதனால் இவளை அழைத்து வந்திருக்கிறோம!" என்று ஓர் அதிசய அழகு தேவதைப் பெண்ணை அவர்கள் முன் நிறுத் தினார்கள்.

அவள் வேறு யாரும் அல்லள், பூதனை என்ற அரக்கி, சிசுக்களை அவள் தின்பண்டம் போலத் தின்பாள். கம்சனால் ஏவப்பட்டவள். கிராமங்கள் தோறும் திரிந்தவள். கோகுலத்திற்கு வந்ததும் அந்தக் கொடியவள் மங்கலமாகத் தன் தோற்றத்தை மகாலட்சுமி போல மாற்றிக்கொண்டாள். அப் போது அவளுடைய அழகைக் கண்டு கோபியர் மயங்கினர்.

விதி அவளைக் கண்ணனுடன் விளையாட அழைத்து வந்தது. நீறுபூத்த நெருப்பு என கொடி யோரைத் தண்டிக்கும் தெய்வம், தன் அளவற்ற ஆற்றலை உள்ளடக்கி அங்கு சிசுவாகப் படுக் கையில் கிடந்தது. கை கால்களை ஆட்டி நீட்டி அனைவரையும் உற்றுப் பார்த்து ஒன்றும் தெரி யாதது போல கள்ளச் சிரிப்பை அது மெல்ல விரித்தது.

பாவம்! பூதனையைத் தெரியாதவன் போல கண்ணை மூடிக் கொண்ட, குழந்தையை அவள் பாமரன் என நினைத்தாள். மடி மீது எடுத்து வைத்தாள். பட்டுப் பட்டாடை பொன் சரடுகள், கூந்தலில் கொலுவீற்றிருக்கும் மல்லி நலுங்க அவள் எடுத்து வைத்துக் கொண்ட அழகை யசோதை ரசித்தாள்.


## சகல தவேதா ஸ்ரீ காயத்ரி மந்திரங்கள்
## ஸ்ரீ காயத்ரி கஷ்டங்கள் விலக

ஓம்
பூர்ப் புவஸ்ஸுவ
தத்ச விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீம ஹி
தியோ யோந ப்ரசோதயாத்

# புனித ஆத்மாவின் வடிவங்கள் முடிவற்றது!

ஒரு புத்தர், நல்லொழுக்க விதிகளை கருத்தூன்றிக் கவனிப்பதில்லை. அவர் பாவத்தையோ, புண்ணியத்தையோ செய்வதில்லை. புத்தர் என்பவர் செய்கைகளை விட்டவர் எதையும் செய்யாதிருப்பவர். தம்முடைய மனத்தை இன் னொரு புத்தர்பால் ஒருமுகப்படுத்தவும் அவரால் முடிவதில்லை. புத்தர்களைப் பற்றிய யோசனை வேண்டாம். நான் எதைப் பற்றி சொல்கிறேன் என்பது உங்களுக்குப் புரியாவிட்டால் உங்களுடைய மனத்தை நீங்கள் தெரிந்து கொள்ளப் போவதில்லை.

தங்களுடைய சொந்த இயல்பைப் புரிந்து கொள்ளாமல், தங்களால் சிந்தனையற்று இருக்க முடியும் என்று கற்பனை செய்து கொள்பவர்கள் முட்டாள்கள். பொய்யர்களும் கூட, அவர்களால் பாவத்தில் இருந்து புண்ணியத்தை வேறுபடுத்தி அறிய முடியாது. உங்கள் இயல்பைப் புரிந்து கொள்ளாமல் ஞானம் பெறுவது சாத்தியமல்ல.



கர்மா என்பது இல்லையென்று உறுதியாகக் கூறிக் கொண்டு அத்தனை வகை பாவங்களையும் செய்பவர்கள் உண்டு. எல்லாமே சூன்யம் என்கிறபோது பாவத்தைச் செய்வது தவறாகாது என்று அவர்கள் நியாயம் கற்பித்துக் கொள்வார்கள். அவர்கள் மீட்சிக்கான நம்பிக்கைக்கே இடமில்லாமல், முடிவற்ற கலகத்திலும் அறியாமையிலும் விழுந்து கிடப்பார்கள். விவேகம் உள்ளவர்கள். அத்தகைய கருத்தை உருவாக்கிக் கொள்வதில்லை.

மனம் என்பது எப்போதும் இருக்கிறது. அதை நீங்கள் கண்டுகொள்ளாவிட்டாலும் கூட மனமே உங்களுடைய உண்மையான சீரம் இந்த மனம் தொடக்கமற்றது. அது உயிரோடியிருப்பதுமில்லை. மரிப்பதுமில்லை. அது புலனாவதுமில்லை. மறைவது மில்லை. குறைவதுமில்லை. அது புனிதமாவதோ, புனித மற்றமாவதோ கிடையாது. அது ஒரு வெற்றிடம் போன்றது.

அதை நீங்கள் வைத்துக் கொள்வதோ, இழப் பதோ முடியாது. அதன் இயக்கத்தைத் தடை செய்வது என்பது மலைகளுக்கோ, நதிகளுக்கோ அல்லது கற்சுவர்களுக்கோ முடியாத காரியம். அதனுடைய தடையற்ற சக்திகளால் அது மலையின் ஐந்து "ஸ்கந்தங்களையும், ஊடுருவி, சம்சாரக் கடலைக் கடக்கும். இந்த உண்மையான சரீரத்தை கர்மாக்களால் தடை செய்ய முடியாது. ஆனால், இந்த மனம் இருக்கிறதே, அது நுட்பமானது, காண்பதற்குக் கடினமானது, சிற்றின்பத்தை நாடுகிற மனமல்ல இது.

இந்த மனத்தைப் புரிந்து கொள்கிற விருப்பம் எல்லோருக்கும் உண்டு. மனத்தின் ஒளியில் இயங்குகிறவர்கள். கங்கைக் கரை மணல் போல் கணக்கற்றவர்கள். ஆனால், அவர்களால் அதை விளக்க முடியாது.அவர்கள் ஏன் அதை அறிந்து கொள்ளவில்லை?

மக்கள் ஏமாறுகிறார்கள். தவறான வழியில் இழுத்துச் செல்லப்படுகிறார்கள் என்று கூறுகிறார் புத்தர். அவர்கள் முடிவின்றி மீண்டும் மீண்டும் பிறவிக்கடலில் விழ இதுவே காரணம். அவர்கள் வெளியேற முயலும் போதெல்லாம் மேலும் ஆழத்துக்குப் போய் விடுகிறார்கள்.

இவர்கள் ஏமாற்றப்படவில்லையென்றால் பிறகு எதற்கு தங்கள் முன்பாக இருக்கிற ஒன்றையே திரும்பத்திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்? இவர்களில் ஒருவர் கூட தமது கை கால்களின் அசைவை அறிந்திருக்கவில்லை. ஏமாறுகிறவர்கள் தாங்கள் யார் என்பதை அறியாதவர்களாக இருக்கிறார்கள். புரிந்து கொள்ளக் கடினமானதை ஒரு புத்தரைத் தவிர வேறு யாரும் புரிந்து கொள்வதில்லை.

அறிவுக் கூர்மையுள்ளவரே (விவேகி) இந்த மனத்தைப் புரிந்து கொள்கிறார். இதுவே அறச்சிந்தை, இதுவே விமோசனம். பிறப்போ இறப்போ

இந்த மனத்தைக் கட்டுப்படுத்த முடியாது. இதுவே "ததாகதா (Tathagata) இது புரிந்து கொள்ள முடியாதது. புனித ஆன்மா என்பதும் இதுவே. இது அழிவற்றது. இதன் பெயர்கள் வேறுபடலாம். ஆனால், இதனுடைய உண்மைத் தன்மை மாறாது. புத்தர்கள் வேறுபடுகி றார்கள். ஆனால், தன்னுடைய மனத்தை யாரும் விட வில்லை.

மனத்தின் திறன் அளவற்றது. அதன் வெளிப்பாடு கள் எப்போதும் இருப்பவை, எடுக்க எடுக்கக் குறை யாது.

உங்கள் கண்களால் வடிவங்களைக் காண்பதும், உங்கள் காதுகளால் ஒலிகளைக் கேட்பதும், உங்கள் நாசியைக் கொண்டு வாசனைகளை நுகர்வதும், உங்கள் நாவினால் சுவைகளை உணர்வதும் உங்களு டைய மனம் தான்.

ஒரு தாதகதாரின் வடிவங்கள் முடிவற்றவை. அவ் வாறே அவருடைய விழிப்புணர்வும் என்று சூத்திரம் சொல்கிறது.

கணக்கற்ற வடிவங்களுக்குக் காரணம் மனமல் லவா. மனத்தின் விழிப்புணர்வே பொருள்களைப் பிரித்தறிகிறது. ஆனால் மனத்துக்கு வடிவமில்லை. அதன் விழிப்புணர்வுக்கு அளவேயில்லை. அதனால் தான் அதைப் பற்றி, "ததாகதாவின் வடிவங்கள் முடி வற்றவை. அவ்வாறே விழிப்புணர்வும் என்கிறது.

ஸ்தூல சரீரம் நான்கு அடிப்படைப் பொருள்களைக் கொண்டது. ஸ்தூல சரீரம் பிறப்பு, இறப்புக்குட்பட்டது. ஆனால், உண்மையான சரீரமோ இல்லாமல் இருப்பது. காரணம் ஒரு ததாகதாரின் சரீரம் ஒரு போதும் மாறு வதில்லை.

"புத்த இயல்பைத் தாங்கள் எப்போதுமே பெற்றி ருக்கிறோம்" என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்." காசியப்பர் தம்முடைய சொந்த இயல்பை மட்டுமே புரிந்து கொண்டவர்.

மனம் தம்முடைய இயல்பு, நமது இயல்பே நம் முடைய மனம், இந்த மனமே கடந்த கால புத்தர்க ளாலும், இனிவரும் புத்தர்களாலும் எடுத்துச் செல்லப் படுகிறது. இந்த மனதுக்கப்பால் புத்தர் என்று எவரும் இல்லை. தவறாக வழிநடத்தப்படுபவர்கள் தங்களு டைய மனமே புத்தர் என்பதை அறிந்திருக்கவில்லை. அவர்கள் வெளியே தேடிக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் புத்தரை வழிபட்டு வேண்டுகோள் வைப்ப தையும் அவர்கள் நிறுத்த வில்லை. அத்தகைய மாயை களில் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கருதுவது நீங்கள் அகப்பட்டுக் கொண்டி ருக்கிறீர்கள்.

உங்கள் எண்ணத்தை, நினைவாற்றலை, சிந்தையை நீங்கள் அறிந்திருந்தாலே போதும்.

"உருவெடுத்து வருவதெல்லாம் மாயை" என்று சூத்திரம் சொல்கிறது.

ஒரு புத்தர் எப்படி இன்னொரு புத்தரை வணங்கு வது?

ஒரு புத்தர் அல்லது போதி சமத்துவரே உங்கள் முன்பாக வந்து நின்றாலும் பயபக்தியுடன் நடந்து கொள்ளத் தேவையில்லை. நம்முடைய இந்த மனம் வெறுமையானது. எந்தவொரு வடிவையும் அது உட் கொண்டிருக்கவில்லை.

மனம் தோற்றுவித்த மாயைகளை ஏன் வணங்க வேண்டும்?

அறிந்தவர்கள் வணங்குவதில்லை, வணங்குகிறவர் கள் அறிந்திருக்கவில்லை.

வழிபடுவதன் மூலம் பேய்களின் கவர்ச்சியில் நீங்கள் சிக்கிக் கொள்கிறீர்கள். நீங்கள் அதை அறிந்தி ருக்கவில்லைஎன்கிறபயத்தில்தான்நான்இதனைச்சுட்டிக் காட்டுகிறேன்.

அழகர் நம்பி

**ஆரோக்கியம், ஆயுள், செல்வம்**
**பெருக சொல்ல வேண்டிய மந்திரம்**
**(ஹாலாஸ்ய மஹாத்மியத்தில் உள்ளது)**

ஸுவர்ணபத்மினீ தடாந்ததிவ்யஹர்ம்யவாஸினே
ஸுபர்ணவாஹனப்ரியாய ஸுர்யகோடி தேஜஸே!
அபர்ணயா விஹாரிணே பதரேந்த்ரதாரிணே
ஸதா நமஸ்ஸிவாய தே ஸதாஸிவாய ஸம்பவே!!



# தந்தையை மகன் காப்பாற்றுவனா?

ஓர் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். அவருக்கு நான்கு மகன்கள் இருந்தனர்.

நான்கு மகன்களுக்கும் திருமணம் செய்து வைத்த அவர் தன் சொத்தில் ஒரு பகுதியை அவர்களுக்குப் பிரித்துத் தந்தார். பெரும்பகுதியை அவரே வைத்துக் கொண்டார்.

சில ஆண்டுகள் சென்றன. அவர் மனைவியும் இறந்து விட்டார். தனியாகவே வாழ்க்கை நடத்தி வந்தார் அவர்.

தந்தை துன்பப்படுவதை அவர் மகன்களால் தாங்க முடியவில்லை. நால்வரும் ஒன்றாக அவரிடம் வந்தார்கள்.

"தந்தையே! நீங்கள் ஏன் தனியே துன்பப்பட வேண்டும். உங்கள் சொத்தை எங்களுக்குப் பிரித்துத் தந்து விடுங்கள். யார் வீட்டில் வேண்டுமானாலும் உங்கள் விருப்பம் போலத் தங்கி இருங்கள். உங்களுக்கு எந்தக் குறையும் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறோம்" என்று பாசத்துடன் அழைத்தார்கள்.

மகன்களுடன் தங்குவதே நல்லது என்று அவருக்குப் பட்டது. இருந்தாலும் சிந்தித்து முடிவு செய்வோம்" என்று நினைத்தார்.

"மகன்களே! இரண்டு மாதம் கழித்து வாருங்கள். என் எண்ணத்தைச் சொல்கிறேன்" என்று அவர்களை அனுப்பி வைத்தார்.

"மகனைத் தந்தை காப்பாற்றுவது போலத் தந்தையை மகன் காப்பாற்றுவானா? எப்படி இதை அறிவது?" என்று சிந்தித்தார் அவர்.

தன் வேலையாளை அழைத்த அவர் "நம் வீட்டுத் தோட்டத்தில் குருவி ஒன்று கூடு கட்டி உள்ளது. அதில் குருவிக் குஞ்சுகள் உள்ளன. குருவியை ஒன்றும் செய்ய வேண்டாம். அதன் குஞ்சுகளை மட்டும் எடுத்து வா" என்றார்.

அவனும் அவர் சொன்னது போலவே செய்தான். மூன்று குருவிக் குஞ்சுகளை எடுத்து வந்தான்.

அந்தக் குருவிக் குஞ்சுகளை ஒரு கூண்டில் அடைத்தார் அவர். அந்தக் கூண்டைச் ஜன்னல் அருகே தொங்க விட்டார்.

தாய்க் குருவி அந்தக் கூண்டின் அருகே வந்தது. கூவியபடியே அதைச் சுற்றிச் சுற்றிப் பறந்தது.

தன் குஞ்சுகள் அங்கிருந்து வெளியே வர முடியாது என்பதை அறிந்தது.

வெளியே பறந்து சென்ற அது வேளை தவறாமல் தன் குஞ்சுகளுக்கு உணவைக் கொண்டு வந்து ஊட்டியது.

குஞ்சுகளுக்கு இறக்கை முளைத்தது. கூண்டிற்கு உள்ளேயே பறக்கத் தொடங்கின.

இதை அறிந்த செல்வர் அந்தக் கூண்டிற்கு வெளியே பசையை அப்பி வைத்தார்.

குஞ்சுகளுக்கு உணவு ஊட்ட வந்த தாய்க் குருவி அந்தப் பசையில் ஒட்டிக் கொண்டது. அதனால் விடுபட முடியவில்லை.

இதைப் பார்த்த அவர் கூண்டைத் திறந்தார். அதிலிருந்த குஞ்சுகள் வெளியே பறந்து சென்றன.

தாய்க் குருவியை அந்தக் கூண்டில் அடைத்து வைத்தார்.

"அதன் குஞ்சுகள் அங்கு வரும். தாய்க் குருவி படும் துன்பத்தைப் பார்க்கும். அதற்கு உணவு கொண்டு வரும் என்று எதிர்பார்த்தார் அவர்.

ஆனால் அதன் குஞ்சுகள் எதுவும் அந்தக் கூண்டின் பக்கமே வரவில்லை.

பசியால் வாடிய அந்தக் குருவியை விடுதலை செய்தார் அவர்.

சொன்னது போலவே இரண்டு மாதங்கள் கழித்து மகன்கள் வந்தார்கள். "தந்தையே! என்ன முடிவு செய்தீர்கள்?" என்று கேட்டார்கள்.

"மகன்களே! என்னை இப்படியே இருக்க விடுங்கள். இதுவே எனக்குப் பழக்கமாகி விட்டது" என்றார் அவர்.

**எ.சோதி**




மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

விரும்பிய வாழ்க்கையை ஏற்று வாழ்வை வளமாக்கும் விருச்சிக ராசி வாசகர்களே! இம் மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வையும் சனி பலமும் உங்களின் நற்காரியங்களை கைகூட வைக்கும். திறமைசாலிகளை உருவாக்கி நல்ல பலன்களை பெறுவீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் கூட்டு நடவடிக்கைகளால் நன்மை அடைவீர்கள். சாதாரணமான விடயங்களை கூட ஆராய்வு செய்து செயல்படுவீர்கள். தொழிற்சங்க ஒற்றுமைக்கு உறுதுணையாக செயல்படுவீர்கள். பலரின் நன்மைக்கு காரணமாக இருப்பீர்கள். பொருளாதாரத்தில் நன்மை உண்டாகும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனில் செயல்படும் நீங்கள் சில பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட எண்ணி தீவிரமாக செயல்படுவீர்கள். இதில் ஒரு சில நன்மை தீமைகளும் விளையும். அரசாங்க காரியங்களில் அனுகூலம் கிடைக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் முன்னேற்றம் பெறுவீர்கள். உங்களின் தொழில் ஸ்தானாதிபதி உச்சம் பெற்று கடன் பெறுதல், கடன் அடைதல் போன்ற விடயங்களுக்கு நல்ல பலனை தருவார். எலக்டிரிக்கல் பொருட்களுக்கு கூடுதல் ஆதாயம் கிட்டும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினரின் செயல்பாடுகளில் வளர்ச்சி பெறுவீர்கள். சிலருக்கு புதிய வாய்ப்புகளும் இரவு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டி வரும்.

### பெண்களுக்கு

பெண்களின் வாழ்க்கையில் சில சோதனைகளை சந்தித்து வந்தாலும் படிப்படியாக முன்னேற்றம் கொண்டு செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

மருத்துவம், கணினி, கட்டிட பொறியியல் கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் ஒத்துழைப்பு நல்ல பலனை தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

23.04.2015 புதன் இரவு 02.48 முதல் 25.04.2015 சனி காலை 10.54 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### விசாகம் 4 ஆம் பாதம்

கடன் வாங்கியவர்கள் புதிய கடன் பெற்று பழைய கடனை அடைப்பீர்கள். வங்கி கடன், முயற்சியினாலேயே கிடைக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

#### அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

பிரச்சினைகளுக்கு எந்த வழியில் சென்றால் தீர்வு கிடைக்கும் என்பதை அறிந்து செயல்படுவீர்கள். வருமானத்தில் உயர்வு உண்டாகும்.

#### கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கலைத்துறையினர் வசனகர்த்தாவாகவும் நல்ல வாய்ப்புகளையும், வருவாயையும் பெறுவீர்கள். திருமண வாய்ப்புகள் வந்து சேரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, மஞ்சள், சிவப்பு

**அதிர்ஷ்ட திசைகள்:** வடக்கு, வடமேற்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** செவ்வாய். வியாழன், வெள்ளி

## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

சனிக்கிழமை ராகுகாலத்தில் விநாயகரையும் ஆஞ்சனேயரையும் வணங்கி நல்லெண்ணெய் தீபம் போட்டு வணங்கி வர நன்மை உண்டாகும்.







# மருவூரில் பக்தர் பெற்ற அனுபவம்

கடையவனுக்கும் கடைத்தேற்றம் அருள் வேண்டும் என்று எல்லையில்லாக் கருணையோடு இங்கே அவதாரமாகி வந்த அன்னை, ஆன்மிகத் துறையில் அனாதை போலக் கிடக்கிற மக்களுக்கும், தன் கருணையை வழங்க வேண்டி எளிய வழிபாட்டு முறைகளை அருளினாள். அவன் அருளால் வெளிப்பட்டவையே 108 மந்திரங்கள்! 1008 மந்திரங்கள்! வேண்டுதற்கூறு பாடல்கள்! நம் சித்தர் பீடத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு உயிர்ப்பான நிகழ்ச்சியும் இரவு 12.00 மணிக்கு மேல் விடியற்காலை 3.00 மணி வரை நடக்கும். அப்போது நூற்றுக்கணக்கில்தான் செவ்வாடைத் தொண்டர்கள் இருந்தார்கள். அவர்களைக் கருவறையின் எதிரே அமர வைத்து 1008 மந்திரங்கள் படிக்கும்படி அம்மா உத்தரவிடுவாள். குறைந்தது 2 மணி வரை மந்திரம் படிக்கிற வரை அம்மா தொடர்களைச் சுற்றிச் சுற்றி வருவாள். கூடவே இரு தொண்டர்கள் வர வேண்டும். சித்தர்பீடத்தைச் சுற்றி வருவாள் சைகை மூலம் இரண்டு விரல், மூன்று விரல் காட்டுவாள். அதன் நோக்கத்தைப் புரிந்து கொண்டு உரிய எண்ணிக்கைப்படி எலுமிச்சம் பழமோ பூசணிக்காயோ திருஷ்டி கழிக்க வேண்டும். மந்திரம் படிக்கிற தொண்டர்களிடையே புகுந்து புகுந்து வருவாள். அந்த விடியற் காலை நேரம் ரம்யமான நேரம்! தூக்கமோ கண்களைச் சொக்கும். அம்மாவோ வேப்பிலை ஏந்தியபடி காவல் புரிந்து கண்காணிக்கிறாள். பாழும் தூக்கம் படிக்க முடியாதபடி தொண்டர்கள் சிலரை ஆட்கொள்ளும். அந்த நிலையில் அம்மா அங்கே வந்து வேப்பிலையால் தூங்கும் தொண்டனின் தலையில் அடிப்பாள். மீண்டும் உடலில் தெம்பு வரும். புத்துணர்ச்சி வரும். இப்படியெல்லாம் தொண்டர்களை அமர வைத்து, 1008 மந்திரம் படிக்க துணைவேந்தராக இருந்தவர். வேதாந்த சித்தாந்த சாத்திரங்களையெல்லாம் கரைத்துக் குடித்தவர். பன்மொழிப் புலவர் நவாவரணப் பூசையைச் சிரத்தையோடு செய்யும் அளவு பக்குவம் பெற்றவர். அவருக்கு ஒரு சந்தேகம்.



**அவர் சந்தேகம்:** ஒரு நாள் அருள்வாக்கில் இது பற்றிக் கேட்டார். "வேண்டுதற்கூறு பாடல்களில் இத்தனை பிழை இருக்கிறதே தாயே! இதனை எப்படி ஏற்றுக் கொண்டாய்?" என்றாராம்.

"உனக்கு இத்தனை பிழைதான் தெரிந்தது. அதற்கு மேலும் பிழைகள் உண்டு தெரியுமா மகனே?" என்றாளாம் அன்னை.

"அப்படியிருக்கும் போது பிழையுள்ள பாட்டை ஏன் ஏற்றுக் கொண்டாய்?" என்றாளாம் அன்னை.

"அப்படியிருக்கும் போது பிழையுள்ள பாட்டை ஏன் ஏற்றுக் கொண்டாய்?" என்றார் தாடிக்காரர்.

"உலகைத் திருத்தி அருள்பாலிக்க இங்கு நான் எழுந்தருளியுள்ளேன். என் காரியம் விரைவில் நடக்க வேண்டும். என்னிடம் முதலில் வந்து சேர்ந்தவன் அந்தப் பாலகன்தான். எனவே அவனைக் கொண்டே அந்தப் பாடல்களை எழுத வைத்து ஏற்றுக் கொண்டேன். எப்போது நானே ஏற்றுக் கொண்டேனோ அப்போதே அதற்கு மந்திரத்தகுதி உண்டாயிற்று மகனே! அந்தப் பாடல்களின் சொற்களுக்கும், ஒலிகளுக்கும் என் சக்தியை வழங்கிவிட்டேன். மந்திரங்களில் பொருளை விட சப்தங்களுக்குத்தானடா முக்கியத்துவம்? பீஜஹரீ மந்திரங்களுக்கு என்ன பொருள் என்பது தெரியுமா மகனே உனக்கு? பீஜ மந்திரங்களின் சப்தங்களுக்கு எப்படி முக்கியத்துவம் உண்டோ அவ்வாறே இந்தப் பாடல்களில் உள்ள சொற்களுக்கும் ஒலிகளுக்கும் என் மந்திர சக்தியை வழங்கி விட்டேன்" என்றாளாம் அன்னை.

இந்த வேண்டுதற்கூறு பாடல்களில் எவ்வளவு மந்திர சக்தியைத் தேக்கி வைத்து அன்னை நமக்கு வழங்கியிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்கிற சந்தர்ப்பம் ஒன்று அவனுக்குக் கிடைத்தது. இங்கே அன்பர் ஒருவர் வந்தார். அவருடைய வீட்டில் ஐந்தாயிரம் ரூபாய் களவு போய்விட்டது. அவருடைய நிலைமைக்கு அது ஒரு பெரிய தொகை!

அம்மாவிடம் அருள்வாக்கில் அழுது முறையிட்டார். "பத்தாயிரம் களவு போயிருந்தால் என்ன செய்வாய்?" என்று கேட்ட அன்னை, அவர் மனத் திருப்திக்காக" போ! சில நாளில் மீட்டுத் தருகிறேன்"

என்றாள். "ஒவ்வொரு முறையும் மீட்டுத் தருகிறேன் பொறு" என்றே அன்னை அருள்வாக்கில் சொல்லி அனுப்பினாள்.

ஒரு சிறிய பொருள் நஷ்டத்தை உண்டாக்கிப் பெரிய துன்பம் ஒன்றிலிருந்து காப்பாற்ற வேண்டியே அன்னை அவர்க்கு அப்படிச் செய்தாள். அதைப் புரிந்து கொள்ளும் அறிவோ, பக்குவமோ, மனநிலையோ அவருக்கு இல்லை. "களவு போன பணத்தை மீட்டுத் தருகிறேன் என்று சொன்னதையே திருப்பித் திருப்பி இந்த அம்மா சொல்கிறாளே தவிர மீட்டுத் தரும் வழியைக் காணோம்!" என்று சலிப்படைந்தார் அன்பர்.

திருடியது யார் என்ற விவரத்தையாவது இவள் சொன்னால் போதுமே! அதையும் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்கிறாளே என்று அலுத்துக் கொண்டார். யாரோ ஒருவர். இராஜராஜேஸ்வரி உபாசகர். அவரவர் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கிறாராம் என்று கேள்விப்பட்டு அந்த உபாசகரிடம் சென்றார் இந்த அன்பர். இராஜராஜேஸ்வரி உபாசகர் அவரைத் தம் பூஜை அறைக்குள் அழைத்துச் சென்றார். ஒரு இடத்தை காட்டி அந்த இடத்தில் அமரும்படி செய்தார். ஏதேதோ கிரியைகளைச் செய்தாராம்.

அந்த பூஜை அறை சூழ்நிலையும், அந்த உபாசகரின் மந்திர உச்சாடனமும் இவருக்கு ஏதோ கிலியை உண்டாக்கிவிட்டன. உடனே இவருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இவருக்கு தெரிந்தது வேண்டுதற்கூறு பாடல்கள் தான்! உபாசகரோ உச்ச ஸ்தாயில் ஏற்றி இறக்கி மந்திர உச்சாடனம் செய்கிறார். இந்நிலையில் அன்னையை மானசீகமாக வேண்டிக் கொண்டு. வேண்டுதற்கூறு பாடல்களை மனதுக்குள் சொல்லிக் கொண்டு இவர் அமர்ந்திருக்கிறார். கால் மணி அரை மணி நேரம் நீடித்துக் கொண்டே சென்றது. இறுதியாக அந்த உபாசகர், உதட்டைப் பிதுக்கிய படி, "என்னையா இது? என் இஷ்ட தெய்வம் விவரம் சொல்ல முடியாதபடி அதைவிட ஒரு மகாசக்தி தடுக்கிறதே! என்னால் உன் பிரச்சினைக்கு வழி சொல்ல முடியாமல் இருக்கிறதே.:?" என்றார்.

"புரியவில்லையே... சற்று விபரமாகச் சொல்லுங்கள்." என்றார் அந்த அன்பர். நான் இராஜராஜேஸ்வரி உபாசகன். என் இஷ்ட தெய்வமும் அவள்தான். அவள்தான் மகாசக்தி! இது வரை வருகிறவர்கள் பிரச்சனைகளையெல்லாம் அவளை உபாசித்துத்தான் சொல்லி வந்தேன் வருகிறேன். இதுவரை என் தாய் என்னை ஏமாற்றிய தில்லை. இன்றும் அவளை அழைத்து விபரம் கேட் டேன். நான் வணங்கும் சக்தி, உன் பிரச்சினைக்கு வழி கூற முடியாதபடி ஏதோ ஒரு பெரிய சக்தி வந்து தடுக்கிறது. என் சக்தியைச் சுற்றி ஒரு நெருப்பு வளையம் போடப்பட்டு விட்டது தெரிகிறது."

"ஆமாம், நீ யார்? எந்தக் கோவிலுக்குப் போகிறாய்? உனக்குச் சாமியார்கள், குருமார்கள் தொடர்பு ஏதேனும் உண்டா?", என்று அந்த உபாசகர் கேட்டாராம். "நான் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலுக்கு அடிக்கடி போய்வருவேன். எனக்கு எந்தச் சாமியாரும் தெரியாது. குருமாரும் தெரியாது" என்றாராம் இவர்.

"உன் பிரச்சினைக்கு வழி சொல்ல என்னால் முடியவில்லை. நீ வணங்குகின்ற அந்த சக்தியே தயவு காட்டினால்தான் உண்டு" என்று சொல்லி அனுப்பி விட்டாராம் அந்த உபாசகர்.

அந்தக் கதையை அவன் கேட்ட போது, "அட! ஒரு குடிசையில் இருந்துக் கொண்டு. சுயம்புக்கு அருகில்



அமர்ந்து கொண்டு அருள்வாக்கு சொல்கிற நம் அம்மா இராஜராஜேஸ்வரியை விட பெரியவளாமே! மகா சக்தியாமே!" என்று பரவசப்பட்டு. அவன் குதூகலம் அடைந்தது உண்டு. நான் வந்து சேர்ந்த இடம் நல்ல இடமே! என்று எக்காளமிட்டு மனம் களித்ததுண்டு. அடுத்த சில நாட்களில் அம்மா அவனைக் குழப்பி கீழே தள்ளி விடுவாள். மறுபடியும் அவளை ஆராய்ச்சி பண்ணுகிற புத்தி அவனுக்கு வந்து விடும்.

கரூர் அன்பர் ஒருவர், அவரும் ஏதோ ஒரு காரணத் திற்காக வேறு ஒரு உபாசகரிடம் சென்றார். அவரும் இராஜராஜேஸ்வரி உபாசகர். அவர் இந்த அன்பரை ஏதோ ஒரு சக்கரத்தில் அமர வைத்து மந்திர உச்சாடனம் செய்திருக்கிறார். அன்பரோ வேண்டுதற்கூறு பாடல்களை முணுமுணுத்தபடி அந்தச் சக்கரத்தில் அமர்ந்திருந்தார்.

வேண்டுதற்கூறு பாடல்களை ஜெபித்த ஆதி பராசக்தி பக்தனுக்கு இராஜராஜேஸ்வரி உபாசகரால் குறி சொல்ல முடியவில்லை.

இதையும் அந்த அன்பர் வாயிலாகக் கேள்விப் பட்டான் அவன். காலம் காலமாக ஸ்ரீ வித்யை உபாசகனையும், ஸ்ரீ சக்கர உபாசனையும், இராஜராஜேஸ்வரி உபாசனையும் மகாசக்தி கொண்டவை என்பது வழிவழியாக வந்த நம்பிக்கை இவற்றையும் கடந்த சக்தி தத்துவம் உண்டு. அந்தத் தத்துவப் பொருள்தான் நம்மிடையே வந்து விளையாடுகிறது. அந்தப் பரம்பொருள்தான் வேண்டுதற்கூறு பாடல்களை ஒரு சாதாரணப் புலவனை எழுத வைத்து மந்திர சக்தியைக் கூட்டி வைத்து அருள்பாலிக்கிறது என்ற உண்மையை இந்த அனுபவங்களை புரிய வைத்தன.



# தனுசு

**மன்மத ஆண்டு சித்திரை மாதம்**
**14.04.2015 முதல் 14.05.2015 வரை**

**தன்னைவிட பிறரின் நலன் மிக முக்கிய மென கருதும் தனுசு ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு கிரகநிலைகள் சரியில்லாமல் போனாலும் உங்களுக்கு எந்த பாதிப்பையும் தராது. மேலும் செய்யும் தொழிலில் கூடுதல் வருமானம் கிட்டும்.**

### பணியாளர்களுக்கு

தொழிலாளர்களின் நன்மைக்காக சில போராட்டத்தில் கலந்து கொள்வீர்கள். பிறருக்கு உதவி செய்வதை கடமையாக கொண்டு செயல்படுவீர்கள். உறுதியான மனவலிமையுடன் செயல்படுவீர்கள். பொருளாதாரம் சுமாராக இருக்கும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது காரியங்களில் உரிமையுடன் ஈடுபாடு கொள்ளும் நீங்கள் அனைவரின் அன்பை பெறுவீர்கள். சமமான வலிமையை பெற்று யாரையும் எதிர் கொள்வீர்கள். சோதனைகளை தாங்கி திறமையை வளர்த்துக் கொள்வீர்கள்.

### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் தனக்கு தெரிந்த வரை தூரம் சென்று தொழில் செய்ய முன் வருவீர்கள். எதிலும் சில நேரம் பல சோதனைகள் வந்தாலும் தொடர்ந்து செயல்பட்டு வளர்ச்சியை எட்ட முயற்சிகளை செய்து வருவீர்கள். பொருளாதாரம் தேவையை நிறைவு செய்யும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு அடிக்கடி அலைச்சலும் தூக்கமின்மையும் உண்டாகும். கோவில் திருவிழாக்களிலும் சுபகாரியங்களிலும் உங்களின் நிகழ்ச்சியை நடத்தி அனைவரிடமும் பாராட்டு பெறுவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களில் சிலருக்கு கணவருடன் கருத்து வேறுபாடுகள் வந்து சோதனைகளை தரும். இருந்தாலும் ஒற்றுமையுடன் வாழ்வீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியில் ஓரளவு முன்னேற்றம் தரும். கடல் சார்ந்த கல்வி ஆகாய விமானம் போன்ற துறையில் முன்னேற்றம் உண்டாகும்.

இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

25.04.2015 சனி காலை 10.55 முதல் 27.04.2015 திங்கள் இரவு 09.16 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

தனக்கு தெரிந்த விடயங்களை மறைக்காமல் அனைவரிடமும் சொல்லும் நீங்கள் சில நேரம் சிலரின் பகையை ஏற்க வேண்டி வரும். பொருளாதாரம் சுமார் தான்.

**பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

முதலில் அவசரப்படும் நீங்கள் பின்பு காரியத்தை சரியாக செய்து நன்மை அடைவீர்கள். வாகனம் வாங்கும் யோகம் உங்களுக்கு அமையும்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்**

பொது விடயங்களில் நீங்கள் அதிக ஆர்வம் கொள்ளுவீர்கள். மக்களின் பொது பிரச்சினைகளுக்கு உறுதுணையாக இருப்பீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** இளம் மஞ்சள், சிவப்பு, நீலம்.


**அதிர்ஷ்ட திசைகள்:** கிழக்கு, தென்கிழக்கு, வடகிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** வியாழன், சனி, புதன்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வியாழக்கிழமை காலை 06.00 மணி முதல் 07.00 மணிக்குள் தட்சிணா மூர்த்தியை வணங்கி மஞ்சள் நிற வஸ்திரம் சாத்தி வணங்கி வர நன்மையை அடைவீர்கள்.





# மூளை பலம் பெற.. மூளை காய்ச்சல் மூளை கோளாறு சரியா...



ஹிஸ்டிரியா நோய்க்கு முருங்கை கீரையை இடித்து பொடியாக்கி காலை, மாலை பசும் பாலில் சாப்பிட்டு வர குணமாகும்.

பைத்தியம் தீர கறிவேப்பிலை, சீரகம், மஞ்சள் சேர்த்து அரைத்து 1 கிராம் அளவு வெறும் வயிற்றில் 48 நாட்கள் சாப்பிட குணமாகும்.

பித்தத்தினால் ஏற்படும் பைத்தியம் குணமாக கருவேப்பிலை துவையல் அல்லது கருவேப்பிலை பொடி தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வரலாம். பித்தம் தணியும்.

மனக்கோளாறுகள் வராமல் தடுக்க குறைந்தது ஆண்டுக்கு 2 தடவை கைகளில் மருதாணி இட வேண்டும். கைகால்களில் மருதாணி இடுவதினால் மனக்கோளாறு வராமல் தடுக்கலாம்.

பித்து பிடித்து அலைபவர்களுக்கு மனநோய் உள்ளவர்களுக்கு தாமரை பூவை நீர்விட்டு காய்ச்சி தினசரி 3 வேளை என தொடர்ந்து 41 நாட்கள் குடித்து வர குணமாகும்.

மூளை பலம் பெற வல்லாரை இலைபொடி காலை, மாலை நெய்யில் சாப்பிடலாம்.

சித்தபிரமை தீர பிரமிய வழுக்கை இலை சாறு நெய் கலந்து காய்ச்சி காலை, மாலை 1 கரண்டி சாப்பிடலாம்.

மூளை பலவீனக் குறைவு சரியாக கல்தாமரை இலை சூரணம் சாப்பிட்டு வரலாம்.

மூளை பலம் பெற பீர்க்கங்காய் வேர் கஷாயம் சாப்பிட்டு வரலாம்.


மூளையில் புண் இருந்தால் குணமாக தினசரி 2 சில் தேங்காய் தொடர்ந்து தின்பதால் புண் ஆறிவிடும்.

மூளை சுறுசுறுப்பாக வல்லாரை சாறில் ஊற வைத்து உலர்த்திய திப்பிலியை சாப்பிடலாம்.

தலைபுண் ஆற வேப்பம்பூ இலை சேர்த்து அரைத்து தலையில் தேய்த்து 30 நிமிஷம் கழித்து குளிக்க குணமாகும்.

மூளை நரம்பு சம்பந்தமான நோய் குணமாக நாயுருவி வேர், கரிசலாங்கண்ணி வேர் ஆகியவை சாப்பிட்டால் நரம்பு சம்பந்தமான நோய் நீங்கும்.

தலையில் அடிபட்ட காயம் குணமாக காஞ்சர மஞ்சள், நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைக்கு தடவிவர உள் காயம் குணமாகும். மூளை சிறப்பாக செயல்பட இலந்தைபழத்தை மிக்ஸியில் அரைத்து கருப்பட்டி சேர்த்து பருகி வர மூளை பதட்டத்தை நீக்கும். இயற்கை தூக்கம் கிட்டும். பைத்தியம் சரியாக தூதுவளை காயைத் தயிரில் உப்பு போட்டு ஊறவைத்து பின் காயவைத்து வறுத்து சாப்பிட பைத்தியம் சரியாகும்.





தலவிருட்சங்களில் வாழ்க்கை இரகசியம்



# விசாக நட்சத்திரத்திற்கான தலவிருட்சம் விளா

மரங்களில் சிறந்த மரமாக கருதப்படும் விளா மரம் மிகவும் வளமை கொண்டது. சித்த மருத்துவ பாடலில் விளாமரத்தை பற்றியும் அதன் மருத்துவ குணத்தை பற்றியும் விளக்கி கூறப்பட்டுள்ளது.

விளாமரத்தின் பழம் குளிர்ச்சியை ஏற்படுத்தக்கூடியது. இலையை சாப்பிட்டால் பசியை உண்டாக்கும். வாயு தொல்லை நீங்கும். மரப்பட்டை இருமல், இரைப்பு சுவையின்மை யைப் போக்கும். நீர் வேட்கையை குறைக்கும், பிதற்றல் நோயை குணப்படுத்தும்.

விளாமரம் உடல் வலிமையும், உடல் வனப்பையும் தரக்கூடியது. விளாமரத்தின், இலை, பட்டை, விளாம்பழத்தை சாப்பிடுபவர்கள் நீண்ட ஆயுள் வரை வாழலாம். விளாங்காயை சாப்பிட்டால் கழிச்சல் நோய் குணமாகும். மரத்தின் பிசினை தூளாக்கி சாப்பிட்டால் பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் நோய் குணமாகும். நீரிழிவு நோயை கட்டுப்படுத்தி விடும். விளா மரத்தின் கொழுந்து இலையை அரைத்து பாலுடன் கலந்து குடித்தால் கழல் நோய் குணமாகி விடும். கொப்பளங்களில் தடவினால் வாய்ப்புண் ஆறும். காமாலை நோய், சோகை உள்ளவர்களுக்கும் கொடுத்து வந்தால் நோய்களுக்கு உடனடி தீர்வு கிடைக்கும்.

மரத்தின் பிசினை எடுத்து வாயில் போட்டுக் கொண்டால், அதில் ஊறும், உமிழ் நீரை தொண்டைக்குள் விழுங்கினால் வறட்டு இருமல் போய் விடும். பிசினை நன்கு பொடியாக்கி தேனில் குழைத்து சாப்பிட்டால் கழிச்சல் நோய் குணமாகும். உள்காய்ச்சல் குணமாகி விடும்.

விளாமரத்தையும் தலவிருட்சமாக கொண்டிருக்கும் கைலாயநாதரின் சிறப்பைப் பற்றி தேவாரத்தில் திருஞானசம்பந்தர் பாடி யிருப்பதாவது;

கலையானே கலை மலி செம்பெற் கியலாய
மலையானே மலைபவர் மும்மதில் மாய்வித்த
சிலையானே சீர்திக முந்திருக் காறாயில்
நிலையானே யென்பவர் மேல்வீவனை நில்லாவே

என்று பாடியிருக்கிறார்.

"விளா மரத்துக்கும், விளாம்பழத்துக்கும் எப்போதுமே ஒரு தனிச்சிறப்பு உண்டு. சிவன் கோவில்களில் சிவனையும், விளாமரத்தையும் சேர்த்தே இந்துக்கள் வணங்குவார்கள். விளாம் பழத்தை சாப்பிட்டால் புற்று நோய் வராது. மார்பக புற்று நோய் வராது. குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பேறு கிடைக்கும் என்பது இந்து மக்களின் நம்பிக்கை.



விளா மரத்தின் இலை, காய் துவர்ப்பாக இருக்கும். விளாம்பழம் இனிப்பு சுவையுடன் இருக்கும். விளாமரத்தின் இலை, காய், பழம் பழத்தின் ஓடு, பட்டை, பிசின் ஆகிய அனைத்துமே சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

விளாம்பழத்தை சாப்பிட்டால் அலர்ஜி நோய் குணமாகும். இதயத்திற்கு இன்பத்தையும் சக்தியையும் தரும். வயிற்றுக்கும், குடலுக்கும் வலிமையை தரக்கூடியது. வலி நிவாரணியாக இருப்பதும் இதன் முக்கிய மருத்துவ குணம்.

## தலவிருட்சம்

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பரிகார விருட்சமாக விளாமரம் போற்றப்படுகிறது. நாகை மாவட்டம் திருக்காறாயில் என்ற ஊரில் உள்ள கண்ணையர் நாதர் திருக்கோவிலில் விளாமரம் தலவிருட்சமாக வணங்கப்படுகிறது.

தஞ்சை மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள கபிஸ்தலம் கிராமம் விளாமரங்கள் நிறைந்த வனப்பகுதியாக ஒரு காலத்தில் இருந்தது. வைணவ திருத்தலமாக இந்த கிராமத்தில் கஜேந்திரப் பெருமாள் வேலவராக காட்சி தருகிறார். இங்கே பெருமாள் பாம்பணையில் பள்ளி கொண்டுள்ளார். நெல்லை மாவட்டம் வீரவநல்லூருக்கு வடக்கே அத்தானநல்லூரில் யானைக்கு அருள்பாலித்த புகழோடு கஜேந்திர வரதப் பெருமாள் காட்சி தருகிறார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவிலுக்கு அருகே தீயத்தூரில் அக்னியும், பிரம்மாவும் வழிபட்ட திருத்தலமாக சகஸ்ர லட்சுமீஸ்வரர் திருக்கோவிலில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். மயிலாடுதுறைக்கு அருகே திரு நின்றயூர் திருத்தலத்தில் காவிரி ஆற்றுக்கு வடகரையில் லட்சுமிபுரீஸ்வரர் ஆக காட்சி தருகிறார். இந்த திருத்தலம் திருமகள் வழிபட்டு நிலைபேறு பெற்றத் திருத்தலமாக புகழ் பெற்று விளங்குகிறது.

திருச்சி மாவட்டம் லால்குடியில் நத்தம் என்ற கஜாரண்யத் திருத்தலம் உள்ளது. முன்பு நத்தையூர் என்ற இத்திருத்தலம் தற்போது நத்தம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இங்கே, ஆதிமூலப்பெருமான் என்ற திருப்பெயருடன் கஜேந்திர வரதப் பெருமாள் பக்தர்களுக்கு காட்சி தருகிறார். கஜேந்திரன் மீது கைவைத்தபடி பள்ளி கொண்ட திருக்கோலத்தில் பெருமாள் காட்சி தருகின்றார்.

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்று பக்தர்கள் அழைக்கும் முருகனை வழிபட்டு வரலாம்.

தமிழ்க் கடவுள் முருகனின் நட்சத்திரமும் விசாகம். விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பரிகார விருட்சமான விளாமரத்தையும் வழிபட்டு வரலாம். விளாமரத்திற்கு தண்ணீர் ஊற்றி வளர்த்து வந்தால் நல்லது.

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பக்தி உள்ளம் கொண்டவர்களாக இருப்பார்கள். சிக்கனமாக இருப்பார்கள். பேசும்போதும் மிகவும் எச்சரிக்கையாகவும் பேசுவார்கள், சிந்தித்து செயல்படுவார்கள். ஆனால் உடல் நலத்தில் நாட்டம் இல்லாதவர்களாக இருப்பார்கள்.

**தி.பெருமாள் மலர்மதி**




# அன்னை நிகழ்த்திய அற்புதங்கள்

## மருத்துவராக்கிய அன்னை!

என் தாயார் அம்மாவின் தீவிர பக்தை அடிக்கடி குடும்பத்துடன் மேல்மருவத்தூர் வந்து அம்மாவை வணங்கிவிட்டுச் செல்வோம். மருத்துவராக வேண்டும் என்பது என் விருப்பம். அம்மாவிடம் வேண்டிக் கொண்டேன். அம்மா வின் அருளால் 2006 ஆம் ஆண்டு எனக்கு எம்.பி.பி.எஸ். சீட் கிடைத்தது. அதற்குப் பிறகுதான் அம்மாவை முழுமையாக நம்பினேன். அடிக்கடி அருள் திரு அம்மா அவர்களுக்குப் பாதபூசை செய்வோம். பல சந்தர்ப்பங்களில் அம்மாதான் என்னை வழி நடத்திச் சென்றார்கள். 2012 செப்டம்பரில் எனக்குப் படிப்பு முடிந்து உடனடி யாக வேலை கிடைத்தது. தற்போது நான் பாண்டிச்சேரியில் உள்ள ஒரு மருத்துவனையில் மருத்துவ அதிகாரியாகப் பணி புரிகிறேன். சக்தி ஒளிக்கு எழுதுவதாக வேண்டிக் கொண்டேன். சக்தி ஒளிக்கு எழுதிவிட்டேன். அம்மாவைச் சரணாகதி அடைந்தால் உயர்வான நிலையை நிச்சயம் அடைய முடியும்!

**சக்தி. பொன் பார்த்திபன்**

## எல்லா உயிர்க்கும் அன்னை அம்மா

என் மகனுக்குப் பிராணிகள் என்றால் பிரியம். அவன் வற்புறுத்தலின் பேரில் Love Birds வீட்டில் வளர்க்கிறோம். ஒரு பெண் பறவைக்கு முட்டையிடுவதில் சிரமம் ஏற்பட்டு 3 நாட்களாகக் கஷ்டப்பட்டது. வலி பொறுக்க முடியாமலும், சாப்பிடாமலும் சோர்ந்து காணப்பட்டது. எனக்கு அப்பறவையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. என்ன செய்வது என்றே தெரியவில்லை. நவராத்திரி அர்ச்சனை குங்குமத்தை எடுத்து பறவையின் வயிற்றுப் பகுதியில் தடவிக்கொண்டே மூலமந்திரத்தை 3 முறை சொல்லி அம்மா இனிமேல் நீ பார்த்துக் கொள்! காலைக்குள் முட்டை போட வைத்து சுகம் ஆக்கிக் கொடுத்தால் சக்தி ஒளிக்கு எழுதுகிறேன் என்று வேண்டிக் கொண்டு கூண்டுக்குள் விட்டு விட்டேன். என்ன ஆச்சரியம்! அந்தச் சிறு பறவைக்குக் கூட அம்மாவின் அருள் கிடைத்து முட்டை போட்டிருந்தது. எனக்குக் கண்களில் நீர்தான் வந்தது.

**சக்தி.V.கலைமதி**

## கண்ணொளி தந்த தாய்!

என் இரண்டாவது மகனுக்குப் பிறக்கும் போதே இரு கண்களின் விழித்திரையிலும் கோளாறு ஏற்பட்டது. ஆறு மாதக் குழந்தையாக அவன் இருந்தபோதே ஆபரேஷன் மூலம் சரி செய்தார்கள். அதனால் 50% பார்வை கிடைத்தது. அதன் பின் அவன் எங்கோ இடித்துக் கொண்டதால் ஒரு கண் பார்வையைச் சரி செய்ய முடியவில்லை. மூன்றாம் வகுப்பு வரை ஒரு கண் பார்வையிலேயே பள்ளியில் படித்து வந்தான். இரண்டு வருடத்திற்க முன் அந்த ஒரு கண்பார்வையும் மங்கி விட்டது. பல சிகிச்சைகள் செய்தும் பலனில்லை. இதற்கிடையே எங்கள் வீட்டின் அருகில் மருவத்தூர் பக்தை ஒருவர் சொன்னார். "நீங்கள் சக்திமாலை அணிந்துஇருமுடி ஏந்தி மகன் பார்வை பெற வேண்டும் என்று கோரிக்கை வைத்து விரதம் இருந்து இருமுடி செலுத்துங்கள். உங்கள் மகனுக்குக் கண்பார்வை கிடைக்கும் என்று கூறி அவரே அழைத்துச் சென்றார். கண் பார்வை அறவே தெரியாத நிலையில் தான் என் மகன் சக்திமாலை அணிந்து வந்தான். அம்மா அருளால் மாற்றுக் கண் அறுவை சிகிச்சை நல்லபடி நடந்து, கண் பார்வை பெற்று இப்போது வருடா வருடம் சக்திமாலை அணிந்து வருகிறான். எல்லாம் அந்தத் தாயின் அருள், வேண்டியபடி சக்திஒளிக்கு எழுதிவிட்டேன்.

**சக்தி மாலா ஆனந்த்**




மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

**மனதில் திடமும், செயலில் வலிமையும் கொண்டு விளங்கும் மகரராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குருபார்வையும் ராசிநாதன் சனி பார்வையும் பெறுவதால் உங்களின் தொழில் முதல் சகலகாரியமும் அனுகூலமாக அமைவதுடன் பொருளாதாரத்தில் நன்மையும் பெறுவீர்கள்.**

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் ஒற்றுமை உணர்வு நன்மையை தரும். திறமையான ஆட்களின் உதவி கிடைக்கும். தொழிற்சங்கத்தில் மதிப்பை பெறுவீர்கள். உறுதியான முடிவுகளுக்கு நல்ல பலன் கிட்டும். பொருளாதாரத்தில் சிரமம் குறையும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

அரசு காரியங்களில் நன்மையும் அரசியல் வாதிகளுக்கு வளர்ச்சியும் கிடைக்கும். எதிர்பார்த்த பதவி கிடைக்கும். நண்பர்களின் ஆலோசனைகள் உங்களுக்கு நல்ல பலனை தரும்.

### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் கவனம் செலுத்தி சிறப்பான வாய்ப்புகளையும், பொருளாதாரத்தில் வளர்ச்சியையும் பெறுவீர்கள். ஆடம்பர பொருட்களின் விற்பனை மூலம் நல்ல வருமானம் கிடைக்கும். வங்கி கடன் வசதிகள் பெறுவீர்கள்.

### கலைஞர்களுக்கு

நடனம், வாத்தியம், கதை, வசனம் போன்ற திறமைகளை வளர்த்து கொள்வீர்கள். தனக்கு மீறிய செயல்களை செய்து பாராட்டும் பெறுவீர்கள். தொலை தூர பயணம் செல்ல வேண்டி வரும்.

### பெண்களுக்கு

கணவன் மனைவி உறவு பலப்படும். சிறந்த திருமண வாய்ப்புகள் கைகூடும். சாதாரண விடயத்தில் கவனம் செலுத்தி நன்மையை பெறுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

நிலம், விவசாயம், இரசாயன பொருட்கள் பற்றிய கல்வியில் சிறந்து விளங்குவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

27.04.2015 திங்கள் இரவு 09.17 முதல் 30.04.2015 வியாழன் காலை 08.55 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்

அரசாங்க பதவிகள் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன. நல்லவர்களுக்கு உதவி செய்யும் நீங்கள் பிறரின் பிரச்சினைகளுக்கு நல்ல வழியை கையாளுவீர்கள்.

#### திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

திருமண வாய்ப்புகள் வந்து சேரும். குழந்தைகள் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். மருத்துவ சிகிச்சை நல்ல பலனை தரும்.

#### அவிட்டம் 1, 2, ஆம் பாதங்கள்

சுமை தாங்கியாய் இருந்து வந்த நீங்கள் நல்ல விடயங்களுக்கு துணை போய் சில பிரச்சினைகளில் சிக்கினாலும் இந்த காலத்தில் தீர்வு கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம், இளம் மஞ்சள், வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்:** தெற்கு. தென்கிழக்கு, மேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** சனி. வியாழன், வெள்ளி

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்



**வெள்ளிக் கிழமைகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் துர்க்கை அம்மனை வழிபாடு செய்து விட்டு சிவன் கோவிலை மூன்று முறை சுற்றி வர சகல காரியமும் அனுக்கிரகமும் உண்டாகும்.**

# பச்சை வண்ணம் அணிந்து
# பசுமையான வாழ்வு

மாதவன் என்பவர் ஒரு கம்பனியில் வேலை செய்து வந்தார். இவருக்கு வெளியூரில் ஒரு வேலை கிடைத்தது. அங்கு போவதா? வேண்டாமா? என்ற குழப்பத்தில் இருந்தார். மனைவியும் இரு குழந்தைகளும் இருக்கிறார்கள். எப்படி திடீரென வேலையை விட்டு விட்டு குடும்பத்தையும் பிரிந்து போவது என்கிற குழப்பத்தில் இருந்தார்.

அவருக்கு உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆரஞ்சு வண்ணத்தை தினசரி இரவு பத்து நிமிடம் பார்த்து விட்டுப் படுக்கச் சொன்னது. அதன்படி அவர் தினசரி இரவு ஆரஞ்சு வண்ணத்தை படுக்குமுன் ஆர்வத் துடன் பார்த்து வந்தார்.



ஆரஞ்சு வண்ணம் விருப்பம், ஆசைகளை பூர்த்தி செய்யும் தன்மை உள்ளது. ஆகவே உங்களுக்கு உள்ளூர் வெளியூர் போகும் ஆசை இருந்தால் அது நிறை வேறும். ஆகவே ஆரஞ்சு வண்ண சின்னத்தைப் பார்த்து வரும் போது மனதின் குரலையும் கவனிக்கச் சொன்னது. இப்படி ஒரு வாரம் ஆரஞ்சு வண்ணச் சின்னத்தை இரவு வலது பக்க மூலையில் பார்த்து வரும் போது அவருக்கு ஒரு வாரம் கழித்து ஒரு குரல் "போகலாம்" என்று கேட்டதாகச் சொன்னார். வெளியூருக்கு வேலையை ஏற்றுக் கொள்ள மறைமனம் சொல்லி விட்டதால் வேலை மாற்றத்தால் உங்களுக்குப் பல நன்மைகள் காத்தி ருக்கிறது என்பது தான் உள் மனதின் குரலில் தெரிகிறது. ஆகவே புது வேலையை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் சொன்னது.

அதன்படி அவர் மதுரைக்குச் சென்று புது வேலையில் சேர்ந்து விட்டார். ஒரு மாதம் கழித்து அவரிடம் இருந்து போன் வந்தது. ஐயா நான் மதுரையில் சேர்ந்த கம்பனி நல்ல இடம். கம்பனி உரிமையாளர் எனக்கு 8000 ரூபாய் சம்பளம் சொன்னவர் என்னைப் பார்த்து பேசியதும் உனக்கு நான் 15000 சம்பளம் தருகிறேன். நீ தான் என் வேலைக்குத் தகுந்த ஆள் என்று சொல்ல குடும்பத்தையும் மதுரைக்கே அழைத்துவரச் செய்து விட்டார். இந்த ஆரஞ்சு வண்ண சின்னத்தைப் பார்த்து வந்ததில் என் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்புமுனை ஏற்பட்டது என்றார்.

வண்ணங்கள் எல்லாமே இயற்கையானது. சூரிய ஒளியை முப்பட்டைக் கண்ணாடியில் செலுத்தினால் 7 வண்ணங்கள் தனித் தனியே தெரியும். ஆகவே வண்ணங்களில் பிரபஞ்ச சக்திகள் இருக்கின்றன. ஒவ்வொரு வண்ணத்துக்கும் ஒவ்வொரு சக்தி உள்ளது.

### பச்சை வண்ணம்

தாம்சன் என்பவர் வாழ்க்கையில் பல பிரச்சினைகள், தொழிலில் நஷ்டம். குடும்பத்திலும் பிரச்சினையுடன் இருப்பதாகவும் இவைகளில் இருந்து விடுதலை பெற்று நிம்மதியாக வாழ ஒரு வழி சொல்லுங்கள் என்று தாந்திரீகரிடம் கேட்டார். தாம்சன் எப்போதும் கிரே கலர் டிரவுசர் அதே கலர் சேர்ட் அணிபவர். இதைக் கவனித்த தாந்திரீகர் நீங்கள் கிரே வண்ண உடைகளைத் தான் எப்போதும் அணிகிறீர்களா என்று கேட்டார். அதற்கு இந்த உடைதான் எனக்குப் பிடித்தது. அதனால் எப்போதும் கிரே சூட் தான் அணிந்து வருகிறேன் என்றார்.

கிரே சூட் அணிவதால் பல வேலை வாய்ப்புகள் உங்களுக்கு கிடைக்காமல் போயிருக்கும். பல பிரச்சினைகள் உருவாகி இருக்குமே என்றார். உங்கள் கிரே கலர் உடைதான் உங்கள் எதிரி, ஆதலால் வேறு உடையை மாற்றவும்.

ஆகவே நீங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் பச்சை வண்ண உடைக்கு மாறினால் உங்களது பிரச்சினைகள் தீரும். உங்களுக்கு வசதிகள் வந்து சேரும். ஆகவே பச்சை வண்ண உடைகளை இனிமேல் அணிந்து கொண்டு

உங்கள் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள் என்று சொல்லப்பட்டது. கிரே வண்ணம் சாம்பல் நிறம் அது தான் உங்கள் தோல்விக்குக் காரணம் என்றும் சொல்லியனுப்பினார்.

இரண்டு மாதம் கழித்து தாம்சன் தாந்திரீகரைப் பார்க்க வந்தபோது பச்சை நிற உடை அணிந்து வந்திருந்தார். ஐயா நான் பச்சை வண்ண உடைக்கு மாறியதுமே எனக்கு ஒரு புத்துணர்வு ஏற்பட்டது போல தோன்றியது. பச்சை, இளம் பச்சை கிளிப் பச்சை என பலவிதமான பச்சை உடைகளை உபயோகித்து வந்ததில் எனக்கு ஒரு கம்பனியில் நல்ல வேலை கிடைத்தது. அதனால் உங்களுக்கும் நன்றி சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்து சொல்லிவிட்டுப் போனார். தாம்சன் 2 மாதத்துக்கு முன் வந்து போன பிறகு அவர் பலவிதமான பச்சை நிற அட்டை கட்டிங்குளை நிறைய சேகரித்தார்.

தினசரி இரவு படுப்பதற்கு முன்பாக வலது மூலையில் பச்சை வண்ண அட்டை சின்னத்தைப் பார்த்து வந்தார். அத்துடன் தனது படுக்கை அறையில் பார்க்கும் இடங்களில் எல்லாம் பலவிதமான பச்சை வண்ண தாள்களை ஒட்டி வைத்து விட்டதாகவும் தினசரி இரவு பச்சை வண்ண சின்னத்தை பார்த்தும் பச்சை வண்ண சூழ்நிலையில் பச்சை வண்ண இரவு விளக்கின் ஒளியையும் சின்னமாகப் பயன்படுத்தி வலது பக்க மூளையில் தாந்திரீகர் சொன்னபடி பார்த்து அதை மறைமனதில் பரப்பி வந்ததில் என் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படத் துவங்கியது.

எனக்கு நல்ல வேலை கிடைத்தது. என் மனைவிக்கு பாடசாலை ஆசிரியர் வேலை கிடைத்தது. இப்போது எனது வீட்டிற்கு கிரீன் ஹவுஸ் என்றே பெயர் வைத்து விட்டேன்.

வீட்டில் தரை விரிப்பு, சுவர் பெயிண்டிங் எல்லாம் இளம் பச்சையில் இருந்து பலவித பச்சை நிறத்திற்கு மாற்றி விட்டேன். இப்போது வசதியாக வாழ்ந்து வருகிறேன். பச்சை வண்ணச் சின்னம் தான் எனக்கு வாழ்வளித்து உதவியது என்கிறார்.

**என்.தமண்ணச் செட்டியார்**

## சிவாலய தரிசன விதிமுறை

1. ஆலய தரிசன செய்வோர் நீராடி, தூய உடை அணிந்து திருநீறு, உருத்திராட்சம் போன்றவை அணிந்து கொண்டு செல்ல வேண்டும்.

2. வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், மலர்கள் முதலிய வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு போகலாம்.



3. முதலில் ஆலய கோபுரத்தை வணங்க வேண் டும்.

4. உள்ளே சென்று, கொடி மரத்தின் முன்னே, ஆண்கள் தலை, மோவாய், இரு கைகள், இரு புயங்கள், முழந்தாளிரண்டு ஆகிய எட்டும் நிலத்தில் படுமாறு (அஷ்டாங்க நமஸ்காரம்) வணங்க வேண்டும். பெண்கள் தலை, இரு கைகள், இரு முழங்கால்கள் ஆகிய ஐந்தும் நிலத்தில் படுமாறு (பஞ்சாங்க நமஸ்காரம்) வணங்க வேண்டும்.

5. கொடிமரத்தின் எதிரில் வணங்கிய பின் நந்தி தேவரிடம் விடை பெற வேண்டும். (மானசீகமாக விடை பெறுதல் மிக அவசியம்)

6. நந்தி தேவரிடம் விடை பெற்றுக் கொண்ட பிறகு விநாயகரை ஒரு முறையும், சிவபெருமானை ஐந்து முறையும் வலம் வந்து வணங்க வேண்டும்

7. சமயாச்சாரியர்கள், அம்பாள், நடராசப் பெருமான், பிற தெய்வங்கள் யாவற்றையும் வணங்கி விட்டு, இறுதியாக சண்டேசுவர நாயனாரை அடைந்து, மும்முறை கைகளால் தாளமிட்டு, சிவதரிசனப் பலனைத் தந்தருளும்படி வேண்டுதல் அவசியமாகும்.

8. சண்டேசுவர நாயனாரிடம் சிவதரிசனப் பலனைப் பெற்ற பிறகு, கொடி மரத்தின் அருகில் வடக்கு முகமாக அமர்ந்து திருஐந்தெழுத்தை (ஓம்சிவாய நம) 108 முறை தியானித்தல் வேண்டும்.

9. இறுதியாக, பைரவரை வணங்கி சிவச் சொத்து எதையும் எடுத்துச் செல்லவில்லை என்று உறுதி கூறி கோயிலை விட்டு வெளியே வருதல் வேண்டும்.

# கும்பம்

மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

**குடும்ப பாரத்தை கூட சுகமாக எண்ணும் கும்பராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சாதகமான கிரக நிலை இல்லை என்றாலும் பாதிப்புகள் குறையும் கடன் கட்டுக்குள் இருக்கும். செய்யும் தொழிலில் நஷ்டம் வராமல், வளர்ச்சியை பெறும். வங்கி கடன் முயற்சி செய்தால் கிடைக்கும்.**

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் தொழிற்சாலை வசதிகளை குறைத்து கொள்ள வேண்டி வரும். இரவு நேரத்தில் பணி புரியும்படி சூழ்நிலை உருவாகும். தொழிற்சங்க பதவிகளை ஏற்று நடத்தும் போது சில சங்கடங்கள் வந்து சேரும். முயற்சிகளுக்கு சில இடையூறுகள் வந்து மறையும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

அரசாங்க காரியங்களில் சிலருக்கு அலைச்சல்கள் உண்டாகும். பொது விடயத்தில் அதிக ஈடுபாடுகளை குறைத்து கொள்வீர்கள். பண விடயத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது.

### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் உங்களின் கவனம் முழுமையாக இருந்தாலும் மந்தமான நிலை நீடிக்கும். சொந்த விடயத்தை கூட பார்க்க முடியாமல் போய் விடும். பொருளாதாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் கஷ்டப்பட்டு முன்னுக்கு வருவீர்கள். நடிப்பு, ஒளி அமைப்பு கலைஞர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும்.

### பெண்களுக்கு

பிற பெண்களிடம் எச்சரிக்கையாகப் பழக வேண்டும். சிறு பிரச்சினைக்கு கூட மனக்கசப்பை தரும்.

### மாணவர்களுக்கு

உடலியல், கருவியியல் கட்டிடக்கலை மாணவர்களுக்கு முன்னேற்றம் தரும் வாய்ப்புகள் அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

30.04.2015 வியாழன் காலை 08.56 முதல் 02.05.2015 சனி இரவு 08.10 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்

ஒன்லைன் வர்த்தகம் பாதிப்பை தரும். தொழிலில் சில சங்கடங்கள் வந்து சேரும். பணப் பிரச்சினைகள் மன அமைதியின்மையை தரும்.

#### சதயம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலில் எதிர்பார்த்த பலன் கிடைக்க தாமதம் ஆகும். உயர் அதிகாரிகளின் தயவுகள் இருந்தும் சிலருக்கு அரசாங்கத்தால் பாதிப்பு தரும்.

#### பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்

புத்திரர்களால் சிலருக்கு பண விரையம் உண்டாகும். எதிர்பாராத மருத்துவ செலவுகள் வந்து அவதியை தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம், பச்சை, வெண்மை


**அதிர்ஷ்ட திசைகள்:** மேற்கு. வடகிழக்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** சனி, வெள்ளி, ஞாயிறு



### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

நவக்கிரகங்களை சனிக்கிழமையும், ஞாயிற்று கிழமையும் ராகு காலத்தில் ஒன்பது முறை வலம் வந்து வாழைப் பழம் நைவேத்தியம் செய்து வர சகல காரியமும் அனுகூலமாக அமையும்.



# யுதிஷ்டிரரின் பெருந்தன்மை

துவைத வனத்தை அடைந்த கௌரவர்கள் மாட்டுக் கொட்டகைகள் அமைந்திருந்த எல்லைப் பகுதிகளிலேயே தங்கினர். துரியோதனன் மாடுகளைச் சோதித்து, கன்றுகளை எண்ணி, கண்காணிப்பு வேலைகளை முடித்தான். அதன் பின்னர் அங்கே உல்லாச மாளிகைகள் பல கட்டுமாறு பணித்தான். ஆனால் கௌரவப் படையால் காட்டின் உள்ளே புக முடியவில்லை. ஏனெனில் அந்தக் காட்டை கந்தர்வர்கள் காத்து நின்றனர்.

இந்த விசயத்தை வீரர்கள் துரியோதனனிடம் தெரிவித்ததும் அவர்களைத் தாக்குமாறு ஆணையிட்டான் அவன். கந்தர்வர்களும் தங்கள் அரசனான சித்ரசேனனின் ஆணைப்படி, சக்தி வாய்ந்த கந்தர்வர்களுக்கும் கௌரவர்களுக்கும் கடும் சண்டை நிகழ்ந்தது. கௌரவப் படை வீரர்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர். கர்ணன் மட்டும் உறுதியுடன் தேரில் நின்று, அவர்களது தாக்குதலை ஓரளவு சமாளித்தான். ஆனால் அவர்கள் சிறிது நேரத்தில் கர்ணனது தேரைச் சுக்கல் சுக்கலாக உடைத்து விட்டனர். உயிர் பிழைப்பதற்காக அந்த இடத்தை விட்டே ஓடிவிட்டான் கர்ணன். இறுதியாக துரியோதனனின் தேரும் உடைக் கப்பட்டது. நிலத்தில் நின்று அவன் போரிடத் தொடங்கினான். இது தான் தருணமென்று சித்ரசேனன் அவன் மீது பாய்ந்து, அவனைப் பிடித்து விட்டான். அவனது பரிவாரமும் கைது செய்யப்பட்டது.

சில வீரர்கள் ஓடிச் சென்று இந்த விவரங்களை யுதிஷ்டிரரிடம் கூறி, "எப்படியும் அவர்களை நீங்கள் தான் விடுவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். இவ்வார்த்தைகளைக் கேட்ட பீமன் கூறினான். ஆகா, நல்லது. இந்தச் செய்தி எத்தனை மகிழ்ச்சியைத் தருகிறது. நம்மை அழிக்க நினைத்த துரியோதனனின் துர்புத்திக்கு ஏற்ற முடிவு இதுதான். நமக்கு உதவ ஒரு மனிதராவது இருக்கிறாரே."

யுதிஷ்டிரர் பீமனை இடைமறித்து, "பீமா, நம் மனக் கசப்பை வெளிப்படுத்த இது தருணமல்ல. அவர்கள் நம் உதவியை நாடி வந்திருக்கிறார்கள். நமக்குள் நாம் பகைவராய் இருக்கலாம். ஆனால் மூன்றாம் மனிதன் முன் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நாம் இங்கு தங்கியிருப்பதை அறிந்தும் இந்தச் செயலின் மூலம் கந்தர்வ மன்னன் நம்மை அவமதித்து விட்டான். காலம் தாழ்த்தாமல் துரியோதனனைக் காத்து நம் குல கௌரவத்தை உடனே காப்பாற்ற வேண்டும்" என்று கூறினார். அர்ஜுனன் உடனே அதற்கு ஒப்புக் கொண்டு பீமன் மற்றும் பலருடன் புறப்பட்டான். நேராக அவன் போர்க்களம் சென்று, உரத்த குரலில், "உடனே துரியோதனனை விடுதலை செய்யுங்கள்" என்று கூறினான். அர்ஜுனனின் குரலைக் கேட்டு நகைத்த கந்தர்வர்கள், "எங்கள் மன்னரின் ஆணைப்படி நடக்கவே நாங்கள் இங்கு இருக்கிறோம். பிறர் கூறுவதைக் கேட்பதற்காக அல்ல" என்று கூறினர். இதனைத் தொடர்ந்து பாண்டவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் உக்கிரமான போர் தொடங்கியது. கந்தர்வர்களால் அர்ஜுனனை எதிர்க்க முடிய வில்லை. இறுதியாக சித்ரசேனன் வந்து தன்னை அர்ஜுனனின் நண்பன் என்று அறிவித்த பின்னர் போர் நிறுத்தப்பட்டது.

சித்ரசேனனும் அர்ஜுனனும் பிறரும் தத்தமது தேரில் அமர்ந்து நலம் விசாரித்துக் கொண்டனர். அர்ஜுனன், "சித்ரசேனா, நீ என் கரு வம்சத்தைத் தண்டிக்க எண்ணுகிறாய்? துரியோதனனை ஏன் சிறைப்பிடித்தாய்?" என்று கேட்டான். அதற்கு சித்ரசேனன், அர்ஜுனா, தீயவனான துரியோதனனுடையவும் கேவல புத்தியுடைய கர்ண னுடையவும் கெட்ட எண்ணத்தை நான் அறிவேன். அவர்கள் இங்கே உங்களை அவமதிக்கவே வந்துள்ளனர். உங்களுக்கு உதவும்படி இந்திரன் எனக்கு ஆணையிட்டுள்ளார். அதனால் தான் நானிங்கு இருக்கிறேன். இவனைச் சங்கலியால் பிணைத்து இந்திர சபைக்கு இழுத்துச் செல்வேன்" என்று கூறினான். அர்ஜுனன், "எங்களுக்கு நீ உண்மையிலேயே உதவி செய்ய விரும்பினால் தயவு செய்து துரியோதனனை விடுதலை செய்துவிடு" ஏனெனில் இது என் சகோதரரின் கட்டளை" என்று கூறினான். இதனைக் கேட்ட சித்ரசேனனும் பிறரும் நேராக யுதிஷ்டிரரிடம் சென்றனர். யுதிஷ்டிரரும் கந்தர்வ அரசனிடம் அதையே கேட்டுக் கொண்டார். துரியோதனன் விடுதலை செய்யப்பட்டான். யுதிஷ்டிரர் துரியோதனனிடம், "மீண்டும் இம்மாதிரியான குறுகிய வழிகளில் செல்லாதே. போ, தலைநகர் போய்ச் சேர்" என்றார்.

அவமானத்தால் குன்றிய துரியோதனன் வாழ்க்கையே வெறுத்து விட்டவனாக தன் நகர் நோக்கிப் புறப்பட்டான். யுதிஷ்டிரரின் பெருந்தன்மையை ஆன்றோர் அனைவரும் புகழ்ந்து வாழ்த்தினர். அவரும் பிறரும் சந்தோஷமாக துவைத வனத்தில் வாழ்ந்து வரலாயினர்.

(தொடரும்)



# பூர்வ ஜென்ம பாவம் போக்கும் "நவபாஷாண" திருத்தலம்



சீதாதேவி இராவணனால் கடத்திச் செல்லப்பட்டு, இலங்கையில் சிறை வைக்கப்பட்டாள். அவரை மீட்க, இராமபிரான் தென் திசை வருகிறார். சாஸ்திரங்களில் எந்த ஒரு காரியம் செய்வதற்கு முன்பும் விநாயகர் பூஜை, நவக்கிரக பூஜை செய்வது வழக்கம். அதன்படி, இராமபிரான் உப்பூரில் உள்ள விநாயகரைப் பூஜித்தார். பிறகு, தேவிப்பட்டினம் கடற்கரையில் அமர்ந்து, மணலை ஒன்பது பிடி எடுத்துப் பிரதிஷ்டை செய்தார். அந்தச் சமயத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. உடனே இராமபிரான் தன் திருக்கரத்தை உயர்த்த கடல் அமைதியானது. அந்த ஒன்பது கற்களாக "நவபாஷாணம்" என்ற பெயரில் நவக்கிரகங்களாக வழிபடப்படுகிறது. பிற ஸ்தலங்களில் நவக்கிரகங்கள் காட்சி தருகிறார்கள். பாஷாணம் என்றால் கல் என்று பொருள்படும். இந்த ஒன்பது கிரகங்களும் கடலுக்குள் இருப் பது குறிப்பிடத்தக்கது. நவக்கிரகங்கள் உள்ள இத்தலத்தில் நீராடினால், மிகவும் புண்ணியம் சேரும்.

நமது பூர்வ ஜென்ம பாவங்கள் விலகி, முன்னோர்களின் ஆசியைப் பெற இது மிகவும் ஏற்ற ஸ்தலம். இந்த ஒன்பது கிரகங்களையும் நவதானியங்கள் வைத்து வழிபட்டால், சகல நற் பலன்களும் கிடைக்கும். இராமபிரானே பிரதிஷ்டை செய்த நவக்கிரகங் களாக இருப்பதால், மிகவும் சிறப்பான ஸ்தலம். இங்கு தான் இராமபிரானுக்குச் சனி தோசம் நீங்கியது. பக்தர்களே நேரடியாக நவக்கிரகங்களுக்கு அபிசேகம் செய்யலாம்.

இந்த ஸ்தலத்தைத் தரிசித்தாலே பூர்வ ஜென்ம வினை, பாவங்கள் நீங்கும் நவக்கிரகங்களில் எந்தக் கிரகங்களால் தோசம் இருந்தாலும், அவை நீங்கி விடும். நவக்கிரகங்களை வழிபடுபவர்கள். அருகிலுள்ள கடலடைந்த பெருமாள் ஆலயம் சென்று வழிபட்டால்தான் முழுப் பலன் கிடைக்கும்.

வழித்தடம்: இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.


K.துரைராஜ்



# உள்ளத்தூய்மையே அறமாகும்!

தர்மம், ஞானம், சீலம், புண்ணியம், நல்வழி, நியாயம், அறச்சாலை, சான்றோர் போற்றும் தூய நெறி, நடுநிலைமை, தர்மதேவதை, ஒழுக்கம், சமயம், நேர்மை, பிறருக்கு உதவுவது போன்ற பல பொருள்களில் "அறம்" என்ற சொல் வழங்குகிறது. எனினும் சுருக்கமாகச் சொல்வதானால் உள்ளத்தூய்மையே அறமாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களையும் மனிதன் வாழ்க்கையில் பெற வேண்டிய பெரும் பேறுகளாக ஆன்றோர் வகுத்துள்ளனர். இவற்றுள் முதலிடம் அறத்திற்கே உரியது.



நம் உயிருக்கு ஆக்கம் தருவது அறம். அறம் உள்ள இதயத்தில்தான் ஆண்டவன் எழுந்தருளுவான். அறம் உள்ள இதயத்தில் ஆணவமும் தீமையும் இருக்காது. மாறாக அங்கே அன்பும் அருளும் பூத்துக் குலுங்கும்.

தர்மத்தை யார் ஒருவன் காப்பாற்றுகிறானோ, அவனை தர்மம் நிச்சயமாகக் காப்பாற்றும், தர்மத்தை யார் ஒருவன் கைவிடுகிறானோ அவனைத் தர்மமும் கைவிட்டு விடும்.

எனவே நாம் அறத்தை விடாமல் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அப்போது தான் அறமும் நம்மை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும். அவ்விதம் இந்த உலகில் நாம் வாழ்ந்தால்தான் அறம் சார்ந்த வாழ்க்கையில் வெற்றி பெறுவதோடு வீடுபேற்றையும் அடைய முடியும்.

"ஒருவன் தன் உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதுதான் அறமாகும். பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களையும் தவிர்த்து வாழ்வதுதான் அறமாகும்" என்று, திருவள்ளுவர் (குறள் 35) குறிப்பிட்டிருக்கிறார்.

"அமைதியும் மகிழ்ச்சியும் ஆக்கமும் தந்து, மறுமையில் முக்தியாகிய வீடு பேற்றைத் தருவதே அறம்" என்று, வைசேஷிக சித்தாந்தம் கூறுகிறது.


"தீவினைகளால் அழிந்து மடிந்து, துன்பத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் உயிருக்கு நல்வழி காட்டி அதை உய்யச் செய்யும் நன்னெறிகளே அறமாகும்" என்று, சமண சமயத்தைச் சேர்ந்த ஆச்சாரிய அபேதேவ சூரியர் குறிப்பிட்டுள்ளார்.

"அறமின் அறநெறி, அஞ்சுமின் கூற்றம், பொறுமின் பிறர் கடுஞ்சொல், போற்றுமின் வஞ்சம், வெறுமின் வினைதீயார் கேண்மை, எஞ்ஞான்றும் பெறுமின் பெரியார் வாய்ச் சொல்" என்று, நாலடியார் (பாடல் எண் 172) குறிப்பிடுகிறது.

பொருள்: "அறநெறிகளை அறிந்து பின்பற்றுங்கள், யமன் வருவதற்கு அஞ்சி அருள்வழி நடந்து கொள்ளுங்கள், பிறர் கூறும் கடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள், வஞ்சித்து நடப்பதிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், தீயசெயல் செய்பவர்களின் நட்பை வெறுத்து நீக்குங்கள், பெரியோர்களின் வாய்மொழிகளை எப்போதும் கேட்டு நடந்துகொள்ளுங்கள்."

# இராமநாம மகிமையை அனுமனுக்கு உணர்த்திய

# சம்பாதி!



சூரியனின் தேரோட்டியான அருணனின் புதல்வர் சம்பாதி. இராவணனிடமிருந்து சீதையை மீட்கப் போராடி உயிர்நீத்து நீங்காப் புகழ் பெற்ற சடாயுவின் மூத்த சகோதரர். சம்பாதி என்றால் நன்றாகப் பறப்பவன் என்பது பொருள். எருவை வேந்தன் என்று கம்பரால் சிறப்பிக்கப்படும் இக்கழுகரசர். இராம நாம மகிமையை அனுமனுக்கு உணர்த்திய உத்தம கதாபாத்திரம். அதனால் தான் சம்பாதிப் படலம் என்றே ஒரு தனிப்படலம் தந்து இவரைச் சிறப்பிக்கிறார் கம்பர்.

இராம காதையிலே சம்பாதிக்கு முக்கியப் பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. பல இடங்களிலும் தேடிச் சீதை இருக்கும் இடம் அறியப்படாததால், அங்கதன் அனுமன் உள்ளிட்ட வானரர்கள் அனைவரும் சோர்வடைகின்றனர். சுக்ரீவன் தந்திருந்த ஒரு மாதக் காலக்கெடுவும் முடிவுற்றதால் வானரர்கள் வருத்தமுற, அங்கதன் தன் உயிரையே மாய்த்துக் கொள்வதாகக் கூறுகிறான்.

அது கேட்ட சாம்பவான் அவனைத் தடுத்து, "நீ ஆளப்பிறந்தவன். ஆகவே நீ சென்று நாங்கள் அனைவரும் இறந்த சேதியை ஸ்ரீ இராமனிடம் கூறுவாயாக!" என்று உள்ளம் நெகிழச் சொல்கிறான். அப்போது அனுமன், பின்னும் முயன்று எல்லா இடங்களிலும் சீதையைத் தேடுமாறும் அதனால் உண்டாகும் காலதாமதத்திற்காக சுக்ரீவன் கடிந்து கொள்ள மாட்டான் என்றும், அந்த முயற்சியில் உயிர் துறந்தால் அது இராவணனுடன் போரிட்டு மடிந்த சடாயுவின் புகழ் போன்று பெருமை வாய்ந்தது என்றும் கூறுகிறான். இந்த உரையாடலை அங்கிருந்த சம்பாதி செவிமடுத்தார். தம் தம்பி இறந்த சேதி கேட்ட இக்கழுகரசர் சிறகுகளின்றிக் குன்று போல நடந்து வானரர் முன் செல்கிறார்.

"என்றலும் கேட்டனன், எருவை
வேந்தன் தன்
பின் துணை ஆகிய
பிழைப்பு இல் வாய்மையான்
பொன்றினன் என்ற சொல்
புலம்பும் நெஞ்சினன்
குன்று என நடந்து
அவர்க்குறுகள் மேயினான்."

வானரர் அருகில் சென்று "நீதிமுயைத் தனக்கு உரிமையாகக் கொண்ட என் தம்பி எப்படி இறந்தான்?" என்று நெஞ்சம் பதை பதைக்கக் கேட்கிறார். கடல்நீர் போல் கண்கள் நீர்சொரியக் கொடிகளும், மரங்களும், மண் உற நடந்த சம்பாதி புழுங்கினார்; அழுங்கினார். இது கண்ட வானர வீரர்கள் அஞ்சி ஓடினர். சம்பாதியை அரக்கன் என்று எண்ணிய அனுமன் அவன் முன்னே வந்து நின்று, கண்களில் கனல் பறக்க அவன் யாரெனக் கேட்கிறான். ஆனால் சம்பாதியோ அனுமனை நோக்கி, "தாக்க அரும் சடாயுவைத் தருக்கினால் உயிர் நீக்கினர் யார்? அது நிரப்புவீர்!" என்று கேட்கிறார். உண்மையில் தாம் யாரென்பதை உரைத்தால் அவரது வினாவிற்கு விடையைத் தருவதாகச் சம்பாதியிடம் அனுமன் கூற, சம்பாதி.

"மின் பிறந்தால் என விளங்கு எயிற்றினாய்!
என் பிறந்தார்க்கு இடை எய்தலாத? என்
பின் பிறந்தான் துணை பிரிந்த பேதையென
முன் பிறந்தேன்"

என்று பதிலளிக்கிறார். சம்பாதி சடாயுவின் சகோதரர் என்று அறிந்து கொண்ட பின் அனுமன் சடாயுவின் வீரமரணத்தைப் பற்றி அவனிடம் கூறுகிறான். அது கேட்ட சம்பாதி, "கோணாத செங்கோலன் தயரதனின் வலிமைக்குச் சற்றும் குறையாத ஆற்றலுடைய சடாயுவே! இது என்ன மாயம்? இரு முட்டைகளிலிருந்து ஒன்றாக, ஒரே நாளில் தோன்றினோம். ஆனால் இன்று நான் தனித்திருக்க நீ மட்டும் உயிர் நீத்தாயே! மண் உலகம், விண்ணுலகம், அறம், கற்பக மரம் எல்லாம் அழியாதிருக்க நீ மட்டும் உயிர் இழந்தாய்.

இது முறையோ? மூன்று உலகங்களையும் வென்ற அரக்கனான இராவணன் உன்னைக் கொன்றது என்ன கொள்கையோ," என்று பலவாறு கூறி, மனம் வருந்தினார். துன்பத்தால் துவண்டு இறக்கும் நிலையெய்திய சம்பாதியை அனுமன் தேற்றுகிறான். தேறிய சம்பாதி அனுமனை நோக்கி, "இராவணனோடு சடாயு போர் செய்ய என்ன காரணம்?" என்று வினவுகிறார். காற்றின் மைந்தனான அனுமன் அவ்வரலாற்றைக் கூறத் தொடங்கினான். "எம் தலைவனான இராமனின் மனைவி சீதையைக் கொடிய இராவணன் கவர்ந்து சென்ற போது, அறநெறியினின்று

தவறாத உன் தம்பி சடாயு, இராவணனுடன் சீறிப் பாய்ந்து போர் செய்தான். இராவணனின் தேரை அழித்து, அவனுடைய தோள்களைக் கிழித்து வீர முடன் போரிட்ட சடாயுவை இராவணன் தனக்குச் சிவன் வழங்கிய வாளைக் கொண்டு தாக்கிக் கொன்றான்." அச்சொல்லைக் கேட்ட சம்பாதி, இரா மனுக்கு உதவும் பொருட்டுத் தன் தம்பி உயிர்த்தி யாகம் செய்ததை எண்ணி ஆக மகிழ்ந்தார். இராம காரியத்திற்காக உயிர் நீத்த சடாயு பெரும் புகழுடன் பிழைத்திருப்பானே அல்லாது மரணம் அவனுக்கு இந்த இழப்பையும் தராது என்று பலவாறு புலம்பி சடாயுவிற்கு நீர்க்கடன் செய்தார். தம் தம்பியைப் பற் றிய செய்தியை அறிந்து கொள்ள உதவிய வானரர் களைப் பார்த்து மேலும் கூறுவார்.

**"வாழ்வித்தீர் எனை மைந்தர் வந்து நீர்**
**ஆழ்வித் தீர் அலிர் துன்ப ஆழிவாய்**
**கேள்வித் தீவினை கீறினீர் இருள்**
**போழ்வித்தீர் உரை பொய்யின் நீங்கினீர்."**
**"எல்லாரும் அவ் இராம நாமமே**
**சொல்லார் சொல்ல எனக்கோர் சோர்விலா**
**நல்லரப் பயன் நண்ணும் நல்ல சொல்**
**வல்லர் வாய்மை வளர்க்கும் மாண பினீர்."**

"நல்ல சொற்களைப் பேசும் ஆற்றல் உள்ளவர் களே! சத்தியத்தை வளர்த்து வரும் ஆற்றலுடை யோரே! நீங்கள் அனைவரும் அந்த இராமன் என்னும் திருப்பெயரை வாயினால் உச்சரியுங்கள். அவ்வாறு நீங்கள் சொல்லச் சொல்ல எனது சிறகுகள் வளரும். தளர்ச்சியில்லாத நல்லருள் கிட்டும்." என்று சம்பாதி கேட்டுக் கொள்ள வானரர்கள் அனைவரும் அதை ஆராய்ந்து பார்க்க எண்ணி, நின்றவர் நின்ற படியே நீலநிற இராமனின் நன்மை தரும் நாமத்தைச் சொல்லச் சொல்லச் சம்பாதியின் சிறகுகள் முளைத்து வானளாவி நின்றன. என்னே விந்தை! திருமாலின் தோற்றமான இராமனின் அருளைப் பெற்றதால், கரிந்து போன சிறகுகள் பழைய நிலை அடைந்து.

புகையோடு கூடிய தீயைக் கக்குகின்ற வாள் உறையைப் பெற்றது போன்ற உடலைப் பெற்றார் சம்பாதி. உருண்டு வந்த சம்பாதி இராம நாமத்தால் பெற்ற நன்மையைக் கண்கூடாகக் கண்ட வானர வீரர்கள் அச்சத்தோடு கூடிய திகைப்புக் கொண்டனர். சம்பாதியை வணங்கி, அவரது சிறகுகள் தீய்ந்து போகக் காரணம் யாது, அவ்வரலாற்றைத் தங்க ளுக்குக் கூற வேண்டும் என்ற கோரிக்கையை வானர வீரர்கள் முன் வைக்கச் சம்பாதி பேசத் தொடங்கினார்.

"அன்பால் தாய் போன்றோர்களே! அலைக டலால் சூழப்பெற்ற நிலவுலகின் இருள் நீக்கும் தன் மையுடைய கதிரவனின் தேரைச் செலுத்தும் சாரதி அருணன், சடாயு, சம்பாதி ஆகிய நாங்கள் இருவரும் அவருடைய மக்கள். நாங்கள் இருவரும் அழகிய நிறத்தையுடைய சிறகுகளைக் கொண்டு வேகமாகப் பறக்கின்ற கழுகுகளுக்கு அரசர் ஆவோம்."

"நாங்கள் இருவரும் வனத்திலுள்ள தேவர் உலகைக் காண விழைந்து, மேலே வானிலே பறந்து



சென்றோம். சூரியனின் தேரைக் கண்டும் காணா ததும் போல் நாங்கள் செல்ல, அது கண்ட பகலவன் சினந்து நோக்க, என்னை விட உயரத்தில் பறந்த சடாயுவின் உடலைக் கதிரவனின் வெப்பம் தாக் கியது. தன்னைக் காக்க வேண்டிக் குரல் கொடுத்த சடாயுவைக் காப்பாற்றுவதற்காக நான் அவனுக்கும் மேலே சென்று எனது பெரிய சிறகுகளால் அவனை மூடி மறைத்து வெப்பம் தாக்காது காத்தேன். ஆனால் அப்போதே சாகாமல் இறகுகள் கருகி, உடல் வெந்து தரையில் வீழ்ந்தேன்."

தரையில் விழுந்த என்னைக் கருணையோடு நோக்கிய கதிரவன், "இராமனை விட்டுப் பிரிந்த சீதையைத் தேடும் பொருட்டு வானர வீரர்கள் வரும் வேளை அவர்கள் உச்சரிக்கும் இராமநா மத்தால் மீண்டும் சிறகுகள் வளரப் பெற்றுப் பறந்து செல்வாய்" என்று கூறி அருளினான். "எனக்கு உண் டான துன்பத்தைக் கண்டு கலங்கி நின்ற தம்பி சடாயு என் கட்டளைக்குப் பணிந்து வானில் உலவும் கழு குகளுக்கு அரசனானான். இப்போது நீங்கள் இங்கு வந்த வரலாறு என்னவென்று எனக்குச் சொல் லுங்கள்." தாங்கள் சீதையைத் தேடி வந்துள்ளதை வானர வீரர்கள் உரைக்க, சம்பாதி அவர்களை நோக்கி, "வருந்த வேண்டாம்" என்று கூறித் தாம் அது பற்றி அவர்களுக்குச் சொல்லுற்றார். பாகு போன்ற இனிய சொற்களைப் பேசும் சீதையைப் பாவியாகிய இராவணன் எடுத்துச் சென்ற போது தாம் பார்த்த தாகச் சொல்கிறார். சீதையை இராவணன் கொடிய சிறைக்காவலில் வைத்திருப்பதையும் வானர வீரர் களுக்குக் கூறுகிறார். ஆனால், அந்த இலங்கையில் நுழைவது அத்தனை எளிதன்று என்பதையும், மும் மூர்த்திகளோடு நமனும் உள்ளே செல்ல இயலாத வண்ணம் காவல் பலமானது என்பதையும் அறிவுறுத் துகிறார். பழைமை வாய்ந்த அந்த இலங்கை மாநக ருக்கு வானர வீரர்கள் அனைவரும் சேர்ந்து செல்வது எளிதன்று என்று கூறுவதோடு, திறமையான ஒருவர் மட்டும் தனியாகச் சென்று மறைந்திருந்து சீதையைத் தேடி இராமன் கூறியவற்றை அவளுக்குச் சொல்லி அவளது துயர் போக்கி மீண்டு வரும்படியும், அது முடியாத பட்சத்தில் தாம் கூறிய சொல்லில் நம்பிக்கை வைத்துச் சீதை இருப்பிடத்தைப் பற்றி இராமனிடம் தெரிவிக்கும்படியும் அறிவுரை கூறி, நிலைகெட்டுத் தடுமாறித் துன்பத்தில் உழலும் நம் கழுகு இனத்தைக் காக்க வேண்டித் தமது இறகுகளால் வானத்தைப் போர்ப்பது போலச் சம்பாதி பறந்து சென்றார்.

**மீனாட்சி பட்டாபிராமன்**


# சாதனைக்கு ஒரு சாயாகிரகம்!

நாம் பெற்ற ஜாதகங்களில் திட்டவட்டமாக கூற இயலாத வகையில் சாயாகிரகங்கள் என்கிற ராகு கேதுக்கள் இயங்கி, அப்படியும் இப்படியுமாக விளைவுகளை ஏற்படுத்துகின்ற நிலையைப் பற்றி எமது அனுபவ ஆய்வுகள் தந்து விடும் உண்மைகளைத் தான் இங்கு காண்கிறோம் மற்றைய கிரகங்கள் போன்று கன பரிமாணம், சயனம், ஈர்ப்பு நிலை, சீதோஷ்ண நிலை இப்படியெல்லாம் திட்டவட்டமாக கூற இயலாத சக்திகள் வடதுருவத்திலும் தென்துருவத்திலும் ஏற்படுகின்ற பொழுது அவைகளை முறையே ராகு என்றும், கேது என்றும் அறிந்து, உணர்ந்து, கண்காணித்துக் கொண்டே வருகிறோம். ராசி மண்டலங்களில் மற்றைய கிரகங்களுக் கெல்லாம் மகத்தான அவரவர் வீடு என்று உண்டு. ஆனால், தமக்கென வீடுகள் என்று இல்லாத இந்த இருவரும் நிகழ்த்திவிடும் சம்பவங்கள் இருக்கிறதே... அவை அலாதிதான் போங்கள். அப்படியானால் இவர்கள் சாமான்யமானவர்களா?

சாயாகிரகங்கள் என்ற ராகு=கேதுக்கள் எளிதில் அடிபணியமாட்டார்கள். சாயலில் கிரகத்தைப் போன்று இல்லாமல் இருந்தும் கூட கிரகங்களைவிட அதிவேகமான நிலையில் நமது வாழ்வில் நமது ஜாதகத்தின்படி அமர்க்களத்தையோ, அட்ட காசத்தையோ, செய்து விடுகிறார்களே! கோச்சார பலன்கள் கூறும் பொழுது நாம் கவனித்து இருக்கிறோம். பிரகஸ்பதி என்ற குரு சந்திர ராசிக்கு 2, 5, 7, 9 இல் வரும் பொழுது அற்புதமான யோகங்களை உடன் செய்து விடுவார் என்று. இதே போன்று கோச்சார சனியைப் பற்றி கருதும் பொழுது, சந்திர ராசிக்கு 3, 6, 11இல் வருகிற பொழுது கணீர் என யோகங்களை தந்து விடுவார் என்று இவைகளும் பொது விதிகளே. ஆனால் இந்த ராகு கேதுக்களுக்கு மாத்திரம் கோச்சார பலன் கூறும் பொழுது நல்ல வேளையாக இப்படி திட்டவட்டமாக சொல்லப்படவில்லை. ஆகவே ஜோதிட பலன் கூறும் நமக்கெல்லாம், இந்த ராகு கேதுக்கள் மீது விசேஷ கண் வேண்டும். இது அவசியம் தேவை என்று தான் மீண்டும் வலியுறுத்துகிறோம். ஜாதகர் ஜோதிடரிடம் தமது குறையை சொல்லி ஆறுதல் பெற வருகிறார் என்ற நிலையில் அவர் கேட்பதெல்லாம் குறிப்பாக ஒரே கேள்விதான். அது என்ன? ஜாதகம் எப்படியும் இருக்கட்டுமே என் ஆசை நிறைவேறுமா, என் திட்டம் பலிக்குமா? நான் முடிசூடா மன்னன் ஆவேனா? இம்மாதிரி ஒரு கேள்வியாய் இருந் தும் கூட ஒரே கல்லில் ஐந்து மாங்காய்களுக்கு குறி வைத்தது போல நம்மையே தலை சுற்ற வைக்கிறது. இங்குதான் சிந்திக்க வேண்டும். வந்தவர் ஜாதகர், உடைந்த உள்ளம் கொண்டவர், கேட்பது யாரிடத்தில்? "உயர்ந்த உள்ளம்" கொண்ட நம்மிடத்தில், கேட்பது என்ன? ஆறுதல் என்ற அமுதத்தை, ஆனால் சில வினாடிகளுக்குள் ஆறுதல் தர வேண்டிய நாமே. அமைதியை இழந்த நிலையில் வந்தவரிடம் ஆறுதல் கேட்கும் நிலையில் ஆகிவிடுகிறதே. அந்தோ பரிதாபம்! இப்படி கேட்கிறானே, என்ற சுறுசுறுப்பான சிந்னைக்கு நாமும் சென்று விட்டால், அவன் ஜாதகத்தில் ராகு கேதுவை எங்கே என்று கண்டு கொள்வோம். என்ன ஆனார்கள்? எப்படி இருந்தார்கள்? யாருடைய பாதச் சாரத்தில் இயங்கினார்கள்? ஜாதகரை எப்படி முடுக்கிவிடுவார்கள் என்ற அத்தனை சமாச்சாரங்களையும் அடுக்கடுக்காய் அறிந்து கொண்டு ஜாதகர் எதிர்பார்த்த ஆறுதலையும் தந்து விடலாம். அறிவுரையும் தந்து விடலாம். எல்லா பிரச்சினைகளுக்கும் ஆதிகாரணம். அடித்தள காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்? அவரவர் மனோபாவம் தானே? நான், எனது, நானே தான்" என்று இந்த சாயா கிரகங்கள் ஜாதகரை முறுக்கேற்றி விடுகின்றன. இது அகங்காரத்திற்கும், ஆணவத்திற்கும் அடங்காபிடாரித்தனத்திற்கும், சுயநலத்திற்கும், சுருக்கமாக செல்லும் குறுக்கு வழிக்கும், சுரீர் என்று பாயும் கோபத்திற்கும், இப்படியெல்லாம் ஜாதகரை நடத்திச் செல்கிறது. அப்படியானால் இந்த ராகு கேதுக்கள் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை என்று அர்த்தமா? அதுவும் இல்லை. ஜாதகத்தில் மற்றைய கிரகங்களின் பாதகச் செயல்களை கூட இந்த ராகு கேதுக்கள் அடக்கி, ஒடுக்கி அவர்களை தலை தூக்காத அளவிற்குக் கூட தாங்களே பல இலாகாக்களின் பொறுப்பை ஏற்றுக் கொண்டது போல ஜாதகருக்கு சுறுசுறுப்பு, பரந்த மனப்பான்மை, பக்குவமான மனநிலை சிறந்த சாதுர்யம், சாகித்தியங்கள், ஆக மொத்தத்தில் அற்புதமான போஷாக்கு டானிக்கை அவ்வப்பொழுது தந்து கொண்டே ஜாதகருக்கு ரட்சண்யம் தந்து விடுகிறார்கள். எப்படி என்று பார்ப்போம். இந்த ராகு கேது முறையே 9 இல் ராகு 3 இல் கேது என்றிருந்து விட்டால், மேலே சொல்லப்பட்ட துன்பங்கள், குறைபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பது தான் அனுபவப்பூர்வமான உண்மை. ஆக மொத்தத்தில் சாயாகிரகங்களான ராகு கேதுவை எடை போட்டு பார்த்தால் இந்த ராகுவை நம்பலாம் போல் இருக்கிறது.


ஆனால் கேது இருக்கிறாரே அவர் கேதுவே தான். எதை எடுத்த போதிலும், எதை கேட்ட போதிலும் எதை பேசுகின்ற போதிலும் இந்த கேதுவை லக்ன கேந்திரத்தில் பெற்றவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. யாரோடு தொடர்பு கொள்கிறார்களோ அவர்களையும் அலட்சியப்படுத்தி அவமரியாதையாக நடத்தி "அவ்வளவு தான் நீ" என்ற நிலைக்கு உதறித் தள்ளுவது போல நடித்தாவது காட்டி அந்த ஒரு நிமிடம் அவர்கள் பண்ணும் அட்டகாசம் இருக்கிறதே, பாவம், சிக்கிக் கொண்டவர்கள் பாடு அதோகதிதான். இதே போன்று இந்த கேது 7 இல் அமைந்தவர்களுக்கு அத்தனை தொல்லைகளையும் வேறு யாரோ பண்ணுகிறார்கள் என்று கூற வேண்டும். வேறு யார் தான் என்றால் தான் கைப்பிடித்த ஸ்ரீமதி களே இவரை வாட்டி வதைத்து எடுத்து விடு வார்கள். இது போன்ற "நித்திய கண்டம்

பூரண ஆயுசை" நித்தம் நித்தம் காணலாம். சில ஜாத கங்களில் 5ஆம் இடத்தில் பஞ்சமத்தில் கேது, 11இல் ராகு இருந்து விட்டால், ஒரு கன்னிகா லக்ன பெண்ணுக்கு லக்ன கேந்திரத்தில் சூரியன் புதன், சனி, 2ஆம் குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் 7இல் மீனத்தில் சந்திரன் 12இல் குரு, 11இல் ராகு, சுக்கிரன் பஞ்சமத்தில் கேது, செவ்வாய் தோஷம் பெற்ற ஜாதகம் தான். பஞ்சமாதிபதி லக்னா திபதியோடு சேர்ந்து கேந்திரத்தின் இருந்த போதிலும் சாதனையை காணோமே. இங்கு பாருங்கள், யோக ராகு யோக சுக்கிரன் இணைந்து 11இல் லாபத்தில் இருந்தும் கூட சாதனையை காணோமே. காரணம் என்ன, பஞ்சமத்தில் அமர்ந்த கேது, அவிட்டம், சாரத்தில் நின்று செவ்வாயால் பார்க்கப்பட்டு ஜாதகர் தனக்குள் அதிர்ச்சிகளை வரவழைத்து சதா பதற்ற நிலையில் பரிதாபமாக காட்சி தந்து சாதனையைற்றவராக இருப்பர். பொதுவாக 5இல் கேது இருந்தவுடனேயே பெரும்பாலும் ஜோதிடர்கள் புத்திரச் சந்தானத்தில் தடை சந்தான தோஷம் என்பதை மட்டும் கூறி மற்றவைகளை மறந்து போகிறார்கள். இன்றைய கலியுகத்தில் புத்திரர்கள் அதிகம் வேண்டும் என்று கேட்பவர்கள் அனேகம் இல்லையே. மாறாக, "நான் சாதிப்பேனா, நான் சமத்தா அல்லது எனது குழந்தை சமத்தா" என்று தான் கேட்கிறார்கள். அவர்களுக்கு தான் இந்த விளக்கம். இப்படி 5இல் கேது இருந்தவர்களுக்கு தோன்றும் குழந்தைகள் பாதிப்பை ஓரளவு பெற்றுக் கொண்டவர்கள் என்று தான் அர்த்தம். அதாவதுஇவர்களின் குழந்தைகள், "படித்துக் கொண்டே இருப்பேன் என்றைக்கும் நான் மாணவன் நான் அல்லது மாணவிதான். உத்தியோகத்திற்கு மட்டும் என்னை அனுப்பி விடாதீங்கோ அந்த பொறுப்பை என் தலையில் கட்டி விடாதீங்கோ" என்று தான் பொறுப்பற்ற முறையில் நடந்து பெற்றோர்களின் வயோதிகத்திலும் கூட நிம்மதி தர மறுப்பார்கள்.



இந்த கேது பகவான் 4ஆம் இடத்தில் சுகஸ்தானத்தில் இருந்து விட்டால் ஜாதகரை அளவுக்கு மீறிய முயற்சியில் இறக்கிவிட்டு அவரே தன் உடம்பை சக்கையாய் பிழிந்து அதன் விளைவால் உடம்புக்கும் நோயை தந்து எத்தனை சிரமங்கள் பாருங்கள். இத்தனையும் அகோர ஆசையினால் தானே வந்தது. அடுத்து பாருங்கள், 10ஆம் பாவத்தில் கேது. இது மிக மிக முக்கியமான சமாச்சாரமாகும். இப்படி பெற்ற ஜாதகர்கள் தம்மை, "யார் எப்படி பட்டவர்" என்றெல்லாம் சத்திய சோதனை அடிக்கடி செய்து கொள்ள வேண்டும். ஒரு தடவை செய்த தவற்றை உடலுக்குடன் மீண்டும் மீண்டும் செய்வதில் வல்லவர்கள். குறிப்பாக ஜீவன விஷயத்தில். அடிக்கடி ஜீவனம் மாற்றுவார்கள். தானே மாற்றுவார்கள். "ஏன் மாற்றுகிறாய் என்று கேட்டால் எனக்கு தோன்றியது. மாற்றினேன்" என்ன தோன்றியது என்று கேட்டால், "இடத்தை மாற்றிக் கொள் என்று தான் தோன்றியது. ஆகவே மாற்றிவிட்டேன்". சரி மாற்றி சென்ற மறு ஜீவனம் மனதிற்குப் பிடித்ததா? என்றால் அங்கும் கசப்புதான். இந்த கசப்பு, வாழ்க்கையில் பெரும்பகுதி கால கட்டங்களில் இவரை சின்னாபின்னப்படுத்தி விடுகிறது. இவர்களும் உஷாராக இருக்க வேண்டும். இப்படி கேது பகவானோடு சந்திரன் இணைந்து விட்டார் என்ற ஜாதகத்தை உடையவர்கள் டபிள் மடங்கு உஷார் தேவை. ஏற்கனவே கேது இவர் மனதை அலைக்கழித்துக் கொண்டிருக்கையில், துள்ளித் துடிக்கும் சந்திரன், சுறுசுறுப்பு ஓட்டக்காரனான சந்திரன், இந்த ஜாதகரை சீரான நிலையில் சிந்திக்கவே விட மாட்டார். இதே போன்று ராகு கேது இவர்களைப் பற்றி பேசும் பொழுது ராகுவைப் பற்றி அதிகமாக குறை கூறுவதற்கு வாய்ப்பபே இல்லை. கேதுவை ஞானகாரகன் என்று கண்டார்கள். கடைப்பிடித்தும் வருகிறோம். ஒரு ஞான காரகன் ஜாதகர்களுக்கு இந்த துன்பத்தையெல்லாம் தருகிறான். ஆக மொத்தத்தில் எல்லோரின் ஜாதகத்திலும் இந்த கேது 3ஆம் இடத்திலும் 11ஆம் இடத்திலும் அமைந்துவிடுமா? எல்லோரையும் பல்லக்கு பவனியில் செல்ல வைக்குமா? அது எப்படி சாத்தியப்படும்? ஆகவே சாயா கிரகமான கேது சோதனையும் ஏற்படுத்தும். இந்த கேது பகவான் குருவோடு சேர்ந்திருந்தால், குருவால் பார்க்கப்பட்டால், ஞான மார்க்கம் கூடு தலாகி சாதனையை கோட்டை விடுகிறார். இந்த கேது செவ்வாயோடு இணைந்து இருந்தாலோ, பார்த்துக் கொண்டாலோ, பதற்றம், நடுக்கம், சந்தேகம், பயம், அதிர்ச்சி, ஆத்திரம், கோபம், கொந்தளிப்பு, உணர்ச்சி வசப்பட்ட நிலை இப்படி மனோநிலையை தகர்த்தெறிகின்ற கட்டத்திற்கே செல்கிறார். கேது சனியால் பார்க்கப்பட்டாலோ, இணைந்திருந்தாலோ, அருமையான கட்டத்தில் "அய்யோ இது தான் உலகமா காயமே இது பொய்யடா உலகமே ஒரு மாயை" என்றெல்லாம் வறட்டு வேதாந்தச் சிந்தனைக்குத் தன்னை ஈடுபடுத்தி சம்சாரத்தில் இருந்து கொண்டு சன்னியாசம் பேசி மனம் உடைந்து இல்லறப் பொறுப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும், எண்ணி ஏகாந்தமே மேல் என்று வேதாந்தி போல் பேசிக் கொண்டு தன் குடும்பத்தார்க்கும் பயன்தராத வகையில் அருமையான வாய்ப்புகளை இழந்து பொன்னான காலத்தை வீணடிப்பவர்கள் எத்தனை பேர் இப்படியாக சாயாகிரகங்களில் சக்திகள் ஜாதகத்தில் அமைகின்ற நிலையை பொறுத்து ஜாதகரை வாட்டியும் வதைத்திட முடியும். ஊட்டியும் உற்சாகப்படுத்த முடியும் என்பதை ஒவ்வொரு ஜாதகத்திலும் இனியாவது உன்னிப்பாக நோட்டம் செலுத்தி ஜாதகர்களுக்கு இந்த ராகு கேதுவின் விளைவால் ஏற்படுகின்ற மனோ பாவத்தின் தாக்குதல்கள் அல்லது மனோ பாவத்தின் அகோர நிலைகள், இவைகளை தக்க முறையில் சீர் செய்து கொள்ள தமது அறிவுரைகள் பயன்தரும்படி அமைந்து விட வேண்டும்.

மிராண்டா



# ஸ்ரீ சக்கரத் தோற்றமும் அமைப்பு முறையும்

ஸ்ரீ சக்கரம் தேவியின் சூட்சும ரூபம். இது ஒன்பது ஆவரணங்களை உடையது. ஆவரணம் என்றால் "மறைப்பு" என்று பொருள். மறைப்பு மாயையினால் ஏற்படுகிறது. அந்த மறைப்பு நீங்கும் வரை ஸ்ரீ லலிதா பரமேஸ்வரி தன் இதயத்தில் இருந்து பராம் பாளையும், புத்தியல் இருந்து சியாமளா தேவி யையும் அஹஸ்காரத்தில் இருந்து மஹா வாராஹீ தேவியையும், புன்சிரிப்பில் இருந்து விநாயகரையும் தோற்றுவித்தாள். பின் அவளது மூலாதாராதி ஆறு சக்கரங்களே ஷடாம்தாய தேவதைகளாக விளங்கி னார்கள்.

அம்பாளின் அங்குசத்தில் இருந்த ஸம்பத்க ரியும். பாசத்தில் இருந்து அசுவாரூடையும், நாவிலி ருந்து நகுலியம், குண்டலினீ சக்தியும், அச்சக்தியின் கிரணங்களில் இருந்து காயத்ரீ முத லான ரச்மாலா தேவதைகளும் தோன் றினர். தேவியின் ரத்தம் முதலான ஏழு தாதுக்களில் இருந்து ஏனைய தேவதைகளும் தேவர்களும், திரியக் கரணங்களும், பிராண சக்தியும் வலிமை, ஐஸ்வர் யம், கீர்த்தி முதலி யனவும் தோன்றின.

அந்தத் தேவி யின் பாதம் முதல் உச்சி வரை (தலை வரை) உள்ள பதினான்கு இடங்களில் இருந் தும், ஈரேழு பதினான்கு உலகங் களும் தோன்றின. இதன் பிறகு ஸ்ரீசக் கரத்தில் விளங்கும் திரைலோக்ய மோஹனம் முதல் ஒன்பது சக்கரங்க ளிலுள்ள ஆவரண தேவதைகளும் சக் ரேசு வரிகளும் தோன்றினர்.

## அமைப்பு


ஸ்ரீ சக்கரத்தின் அமைப்பு குறித்து வலிவஸ்யாச ஹஸயம்" என்ற நூல் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

பிந்து, முக்கோணம், எட்டு கோணம், இரண்டு பத்து கோணங்கள், பதினாறு கோணம், எட்டு தளம், பதினாறு தளம், மூன்று வட்டம், மூன்று கோட்டு பூபரம் என்ற அமைப்பில் உருவானது இச்சக்கரத்தில் சிவசக்கரங்கள் நான்கு சக்தி சக்கரங்கள் ஐந்து ஆக ஒன்பது சக்கரங்கள் உள்ளன. இது சிவசக்தியாகிய ஒன்பது வடிவத்தைக் குறிக்கும் இவற்றுள் முக் கோணம், எட்டு கோணம் இரண்டு பத்து கோணங்கள், பதினான்கு கோணங்கள் என்ற இவை ஐந்தும் சக்தி சக்கரங்கள் ஆகும். பத்து, எட்டிதழ் கமலம், பதினா றிதழ் கமலம், நான்கு கோட்டம் இவை நான்கும் சிவ கோணங்கள் எனப்படும். சக்தி கோணங்கள் ஐந்தும் கீழ்நோக்கியும் சிவசக்கரங்கள் நான்கும் மேல் நோக் கியும் உள்ளன.

## தேவி புஜங்கம்

இந்த நூலில் ஸ்ரீசக்கரம் குறித்துக் கீழ்க்கண்ட வாறு கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ சக்கரம் அம்பாளின் சொரூபம் சக்க ரத்தில் தன் ஆவரண தேவதைகளுடன் பரதே வதை பிரகாசிக்கிறாள். ஸ்ரீ வித்யா மந்திரத்திலும் அம்பாளின் ஸாந்நித்யம் இருக்கிறது. ஸ்ரீ வித்யா




மந்திரத்தினால் ஸ்ரீ சக்கரத்தில் அம்பாளை உபா ஸிப்பவனது சரீரத்திலும் தன் ஆவரண தேவதை யுடன் அம்பாளின் ஸாந்நிதயம் ஏற்படுகிறது பக்தன் நியாசம் செய்யும் பொழுது தனது சரீரத்தில் அந் தந்த அவயவங்களில் அந்தந்த தேவதைகள் இருப் பதாகத் தியானம் செய்கிறான். ஸ்ரீ சக்கரத்தில் பிர தானமாய் விளங்குகிற நவசக்ரேச்வரிகளும் தனது சரீரத்தில் இருப்பதால் முறைப்படி அநுஸந்தானம் செய்யும் பொழுது பரதேவதையின் அருளால் அஷ் ஐஸ்வர்ய ஸித்திகளை அடைகிறான்.

ஸ்ரீ சக்கரத்தில் 64 கோடி தேவதைகளும் வசிக்கிறார்கள். 9 சக்கரங்கள் உள்ளதால் இதற்கு "நவசக்கரம்" என்ற பெயர் உண்டு. மேலும் ஐம்பத்தொரு கணேசர்கள், நுரியன் முதலான ஒன்பது கிரகங்கள் அசுவினி முதலான இருபத்தேழு நட்சத்திரங்கள், ஏழு யோகினிகள், பன்னிரண்டு ராசிகள். ஐம்பத்தொரு பீடதேவதைகள் என 157 தேவதைகள் ரூபமாக அம்பாள் ஸ்ரீ சக்கரத்தில் பூஜிக்கப்படுகிறாள். (சரீரத்தின் பாகங்களாகிய கை, கால் முதலிய அவயவங்கள் சேர்ந்து ஒரு தேகம் என்பது போல் அம்பாள் பரிவார(அங்க) தேவதைகளுடன் சேர்ந்து ஒருத்தியாகப் பிரகாசிக்கிறாள்.

## பவானி புஜங்கம்

இந்த நூலில் ஒன்பதாவது பாடலில் ஸ்ரீ சக்கரம் சார்பான வழிபாடு விவரிக்கப்படுகிறது. "கணேசர்கள் அணிமாதிகள் முதலான சக்திகளுடைய சமூகங்களினால் சூழப்பெற்று ஒளி பொருந்திய ஸ்ரீ சக்கரத்தில் பொலிவுடன் திகழ்பவளும், பரா என்ற வடிவத்துடனும், "திரிபுரா" என்ற சிறப்புப் பெயருடன் விளங்குபவளும், சிவபெருமானின் இடப் பாகத்தில் இருப்பவளும், மங்கள வடிவாய்த் திகழ்பவளும், "ராஜராஜேஸ்வரி" என்ற திரு நாமத்தைக் கொண்டவளும் ஆகிய அன்னை விளங்குகிறாள்" என்று கூறுகிறார் ஆதிசங்கரர்.

## ஸ்ரீசக்கர அமைப்பு

ஸ்ரீ சக்கரத்தில் பிரதானமாக ஒன்பது முக்கோணங்கள் உள்ளன. மேலே பார்த்தபடி நான்கு கோணங்கள் (சிவகோணங்கள்) கீழே பார்த்தபடி ஐந்து கோணங்கள் (சக்தி கோணங்கள்) இந்த முக்கோணங்கள் யோனிகள் என்று அழைக்கப்படும். பிந்துஸ்தானம் என்ற மத்திய இடம் பத்தாவது யோனியாகும். இந்த முக்கோணங்கள் அந்தர்கதமாக இருப்பது 43 முக்கோணங்கள் ஆகும்.

பிந்துஸ்தானம் தேனி ராஜராஜேஸ்வரியின் பிரதம ஸ்தானம் அவள் ஒன்பது சக்தியாக ஆனாள். இந்த ஒன்பதுடன் 10 இந்திரியங்கள், ஐந்து பிராணன்கள், பஞ்சபூதங்கள், ஸப்த ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்த, வசனம், கமனம், தானம், விசரகம், ஆனந்தம் ஆக 10 விஷயங்கள் மற்றும் கரணம் 4 ஆக 43 ஆனாள்.

ஸ்ரீ சக்கரத்தில் 9 ஆவரணங்கள் உள்ளன. அவை ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்துள்ளன. அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:

த்ரைலோக்ய மோஹனம் (சதுர வடிவு மூன்று வரிசை)

2. ஸர்வாசாபரிபூரகம் (பதினாறு தனக் கமலம்)
3. ஸர்வ ஸம் கேஷாபணம் (எட்டு தளக் கமலம்)
4. ஸர்வஸௌபாக்கியதாயகம் (பதினாறுகோணம்)
5. ஸர்வார்த்த ஸாதகம் (வெளிப்பத்துக் கோணம்)
6. ஸர்வ ரக்ஷாகரம் (உள்பத்துக் கோணம்)
7. ஸர்வ ரோஹ ஹரம் (எட்டு திக்கு கோணம்)
8. ஸர்வ ஸித்தி பிரம் (முக்கோணம்)
9. ஸர்வாநந்த மயம் (பிந்து)

– வேங்கடவன்



## விவாகம் ஆக வேண்டிய கன்னிகைகள் ஜபிக்க வேண்டிய மந்திரம்

கத்யாயனி! மஹாமாயே!
மஹாயோகின்யதீஸ்வரி!
நந்தகோபஸுதம் தேவி!
பதிம் மே குரு தே நம!

# காய்கள்...

நீங்கள் ஒரே சமயத்தில் பல காய்கறிக் குவியல்களை கனவில் கண்டால் உங்கள் முதலாளிக்கு அல்லது மேல் அதிகாரிகட்கு உங்களிடம் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்க வேண்டுமானால், இனிமேலாவது உங்களுடைய ஒவ்வொரு வேலை யையும் உரிய காலத்தில் செய்து முடிக்க வேண்டும் குவிந்து கிடக்கும் பழைய ஃபைல்களையும் கூடுமான விரைவில் பைசல் செய்து வர வேண்டும். இவ்விரண்டு காரியங் களையும் சிறிது சிரமப்பட்டாவது செய்வீர்களானால் உங்களுக்கு உத்தியோக உயர்வு காத்திருக்கிறது.

காய்கறிகளைச் செடிகளிலிருந்து பறிப்பது போல் கனவு கண்டால் உங்களைச் சேர்ந்தவர்களே உங்களுக்கு தீமை செய்ய முயலுவார்கள். காரணம் அவர்களை நீங்கள் ஒரு பொருட்டாக மதிக்காமல் அகம் பாவத்தோடு நடந்து கொள்வதாக அவர்கள் எண்ணுகிறார்கள். அதற்கு இடங்கொடாதவாறு இனிமேலாவது நீங்கள் எல்லாரிடமும் சிறிது பணிவோடு நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சரியான சமயத்தில் உங்களை அவர்கள் காலை வாரி விட்டு விடுவார்கள்.

காய்கறிகளைச் சமைப்பது போல் கனவு கண்டால் நீங்கள் இப்போது ஈடுபட்டிருக்கும் அலுவல்கள், அவ்வளவு இலாபகரமானவை அல்ல என்றாலும் அவற்றை நீங்கள் அரைகுறையாக விட்டுவிடாதீர்கள். ஏனென்றால் இவற்றின் முடிவில் நீங்கள் சிறிதும் எதிர்பாராத ஒரு பெரிய பயனை அடையப் போகிறீர்கள். ஆகையால் காரியங்களை உற்சாகமாகக் கவனியுங்கள்.

காய்கறிகளை நீங்கள் உண்பது போல் கனவு கண்டால் நீங்கள் எப்போதோ அனுபவித்த சில சுகங்களுக்கு இப்போது விலை கொடுக்குமாறு கேட்கப்படுவார்கள். நீங்கள் அதை ஓசைப்படாமல் கொடுத்துவிடுவதே நல்லது. அது தான் உங்கள் எதிர்கால நிம்மதிக்கு உகந்ததாய் இருக்கும்.

நீங்கள் காய்கறிகளைப் பயிரிடுவது போல் கனவு கண்டால் உங்கள் குடும்பம் செழிப்பாக வளர்ச்சி அடையும். நீங்கள் உங்கள் மனைவி மக்களும் ஆரோக்கியமாக வாழ்வீர்கள். உங்களுடைய செல்வநிலையும் உயர்வு அடையும். ஆனால் இத்தனை நன்மைகளும் நீடித்து நிற்க வேண்டுமானால் நீங்கள் எல்லோருமே உங்களுடைய உழைப்பைக் குறைத்துக் கொள்ளக்கூடாது.



சுரைக்காய், பூசணிக்காய், பறங்கிக்காய் போன்ற பெரிய காய்களைக் கனவில் கண்டால், குடும்பத்தில் உள்ள முதியவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய சங்கதிகள் நிரம்பி இருக்கின்றன. அவர்கள் தங்கள் அனுபவத்தில் கண்ட உண்மைகள். உங்களுடைய வாழ்க்கைக்கு மிகவும் பயன்படக் கூடியவை அவர்களுடைய ஆலோசனைகளை மட்டும் கேட்டு நடப்பீர்களானால் உங்கள் சிக்கல்கள் பல வற்றிலிருந்து நீங்கள் எளிதில் விடுபட இயலும்.

**தமிழ்வாணன்**




மன்மத ஆண்டு சித்திரை மாதம்
14.04.2015 முதல் 14.05.2015 வரை

தன்னை அறிந்து பிறரிடம் செயல்படும் மீன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குருவும், சந்திரனும் நன்மைகளை தரு வார்கள். குரு பார்வை பெற்று கேது பல நன் மைகளை செய்வார். பரிகாரம் மூலம் நீண்ட நாள் பிரச்சினைக்கு முடிவுகளை எட்டுவீர்கள். குரு அருளால் பல பிரச்சினை தீர்வாகும்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் பணி நேரம் குறைந்து பல ருக்கும் இடமாற்றம் வர வாய்ப்புகள் அமையும். உற்பத்தியை பெருக்கி வருவாயை அதிகப்ப டுத்திக் கொள்வீர்கள். முதலில் வேகமாக இருப் பதும் பின்பு சுமாராக இருந்தும் கொள்வீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

பொதுவாழ்வில் அதிகமான ஈடுபாடுகள் கொள்வீர்கள். கோவில் காரியங்களில் முன் நின்று காரியம் செய்வீர்கள். பொது பிரச்சினை களுக்கு முழுமையான ஆதரவுகளை தருவீர்கள். பொருளாதார நிலையில் நன்மையை பெறு வீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் பிறரின் உதவியை கூட எதிர் பார்க்காமல் உடனே எதையும் செயல்படுத்தி பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள். கனவுகளை நனவாக்க மேலும் வளர்ச்சியை பெற முன்னேற்றம் அடைய பல வழிகளை கையாளுவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் நாட்டியம், இசை, பொருள்களை சேகரித்தல் போன்ற கலைஞர் களுக்கு மேன்மையான வாழ்க்கை சூழ்நிலை அமையும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

### பெண்களுக்கு

சுயதொழிலில் முன்னேற்றம் உண்டாகும். சுபகாரியம் கைகூடும். திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி கிட்டும்.

### மாணவர்களுக்கு

கல்வி தரம் உயரும். கப்பல், கடல் சார்ந்த கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். பயிற்சி வகுப்பு பயனுள்ளதாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

20.05.2015 சனி இரவு 08.11 முதல் 05.05.2015 செவ்வாய் அதிகாலை 05.44 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### பூரட்டாதி 4 ஆம் பாதம்

பல நாள் பட்ட கடன் நிவர்த்தியாகும். உற வினர்களின் பகை நீங்கும். புத்திரருக்கு வேலை வாய்ப்பு அமையும்.

#### உத்திரட்டாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலாளர்களின் பிரச்சினை முடிவுக்கு வரும். அமைதியான உங்களின் பேச்சால் சகல காரியமும் வெற்றியை தரும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

#### ரேவதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

வசதிகளை பற்றி கவலைப்படாமல் நீங்கள் செல்லும் பாதையை சரி செய்து போகும் போது எந்த தடையும் உங்களை அண்டாது நன்மை பெறுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** இளம் மஞ்சள், சிவப்பு, பச்சை

**அதிர்ஷ்ட திசைகள்:** வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** வியாழன், சனி. ஞாயிறு

### இம்மாதம் நீங்கள் வழிபாட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் துர்க்கை யையும் ஞாயிற்றுக்கிழமை விநாயகரையும் வழிபாடு செய்து சர்க்கரை வைத்து வணங்கி வர சகல காரியமும் நன்மையாக அமையும்.

இம்மாத ராசிபலனை உங்களுக்குத் தருபவர்:
சோதிடர் வாடிப்பட்டி,
R.ஆனந்தன்
M.A., D.A., D.V.,
0091 97893 41554



# சுய சம்பாத்தியம் பெருகிட பரிகாரம்

தந்தை சொத்து, மூதாதையர் சொத்து இவற்றில் வாழ்வதைவிட நாமாக, சுயமாக சம்பாத்தியம் செய்து வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் அதிகம் சுய சம்பாத்தியம் ஒருவருக்கு ஏற்பட வேண்டும் என்றால் அவரது ஜாதகம் நல்ல முறையில் அமைந்திருக்க வேண்டும். ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் இடம் ஜீவன ஸ்தானமாகும். ஜீவன ஸ்தானம் எந்த கிரகமாக வந்தாலும் அந்த கிரகம் பலம் பெற்று குருவின் பார்வையை பெற வேண்டும். அல்லது உத்தியோககாரரான செவ்வாய்க் கிரகம் ஆட்சி உச்சம் பெற்றோ அல்லது குரு பார்வை பெற்றோ இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஜாதகம் அமைந்தவர்கள் தான் சுய சம்பாத்தியத்தை இயற்கையாகவே பெற முடியும். சுய சம்பாத்தியம் பெருகிட சில பரிகாரங்களை வாழ் நாளில் நாமே செய்து வருவோமேயானால் தடையின்றி செல்வத்தைப் பெறலாம். ஜாதகத்தில் கிரகங்கள் பாதகமாக அமைந்தாலும் லாபம் பெருகும். எதையும் சாதிக்க கடவுள் துணையும், அவர் அனுக்கிரகமும் இருந்தால் போதும்.

### பரிகாரம் 1

சுய சம்பாத்தியத்திற்காக பெரிய தொகை செலவு செய்து பரிகாரம் தேடி வேண்டியதில்லை. பரமாத்மா எப்போதும் நம்மை விட்டுவிடுவதில்லை. புதிதாக எந்த தொழிலில் ஈடுபட்டாலும் முதலில் உங்கள் வீட்டிலிருக்கும் பூஜையறையில் ஐந்து வெற்றிலையும், நான்கு பாக்கும் வைத்து ஆண்டவனை வேண்டிச் செல்லுங்கள். வியாபாரம் பெருகும். (எந்த வியாபாரமாக இருந்தாலும் பெருகும்.)

### பரிகாரம் 2

உங்கள் வீட்டில் பூஜையறையில் குருவடி சரணம், திருவடி சரணம் என்று ஒன்பது முறை சொல்லிவிட்டு தொழிலுக்கு செல்லுங்கள் எந்தத் தொழிலாக இருந்தாலும் லாபம் பெருகும். (அனுபவத்தில் கண்ட உண்மை)





ZUZI
The Way of Life
@ Kotahena
ZUZI
உங்கள் முழு குடும்பத்திற்கும்
ஏற்ற ஏராளமான
ஆடைத்தெரிவுகளை தரமான
விதத்தில் சரியான விலையில்
புரட்சிகரமாக அறிமுகம்
செய்ததில் ZUZI
பெருமிதம் அடைகிறது.
217, George R De Silva Mawatha, Kotahena, Colombo - 13.
Tel : +94 112 335276 | Fax : +94 112 335277
E-mail : zuzikotahena@sltnet.lk
Mega Clothing Store @ Kotahena

ஸ்ரீ ராம ஜெயம்


# நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீக சக்தி





மலையாள மாந்திரீக
சித்தர் பேராசிரியர்.
தேசபந்து.
திரு.P.K.சாமி
(J.D.G.A.N) J.P ஐயா







சாஸ்திரம்: சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீக அரசன் தத்துவ திலகம் டாக்டர் P.K.சாமி ஐயா அவர்கள் நடந்தது நடக்கப்போவது நடக்க விருப்பது திட்ட வட்டமாக காண்ட அடிப்படையில் திகதி நேரம் தெரிந்துக்கொள்ள என்னை சந்திக்கவும். அவர் அவர் ஜாதகத்தை ஆணிவேர் அக்குவேராக கணிப்பு செய்து அதற்கு தக்கவாறு துல்லியமாக மாந்திரீகம் உச்சாட்டம் கொடுப்பதால் கடந்த 48 வருடமாக அருள் சித்த சோதியாய் என் நிறுவனம் திகழ்கின்றது.
எனது சேவை நிமித்தம் வந்து குவியும் கடிதங்கள் :-

### கெட்டு படிப்பதைவிட, கேட்டு படிப்பது நன்மையே....

ஜோதிடதிலகமே!
தாங்கள் எனது ஜாதக குறிப்பில் சொன்ன விடயங்கள் அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மையே. தெய்வமே! என்னை பரிகாரம் செய்ய சொன்னீர்கள். நான் ஏனோ தானோ என்று இருந்துவிட்டேன்.. அதனால் எனக்கு ஏற்பட்ட இடையூர்கள் துன்பங்கள் சொல்ல முடியாதவை. அதன் பிறகு தாங்களிடம் வந்து தாங்கள் கொடுத்த அச்சரத்தை அணிந்த பின்பு எல்லா காரியங்களும் சரிவந்து கொண்டிருக்கின்றன. தாங்கள் நீண்ட ஆயள் பெற்று சுகபோக வாழ இறைவனை பிராத்திக்கின்றேன்.

(சுப்பிரமணியம் - வவுனியா)

### பெரு வாழ்வு கிட்டியது...

துர்க்கைதாசன் ஐயா!
கடந்த 4 வருடங்களுக்கு முன் என் தம்பி புத்தக வியாபாரம் செய்து கொண்டு வரும் போது தாங்கள் கோயிலுக்கு வந்த போது நீங்கள் அவனை பார்த்து நீங்கள் நீ வெளிநாடு செல் நன்றாக இருப்பாய் என்று கூற அதை அவன் வேத வாக்காக எடுத்து வெளிநாடு சென்று பல பதவியுயர்வு பெற்று இன்று முகாமையாளராக இருக்கின்றார். இந்த வருடம் இலங்கை வரும்போது உங்கள் கோயிலுக்கு அழைத்து வருவோம். எங்கள் குடும்பம் நல்ல நிலைமையில் இருக்கின்றது என்றால் அது உங்கள் சிலம்பு செல்வன் ஐயாவின் கருணையே. நீங்கள் நீடுழி வாழ இறைவனை பிராத்திப்பதோடு உங்கள் சேவை பல்லாண்டு காலம் தொடர பிராத்திக்கின்றோம்.

(விஜயகுமாரி – தெகிவளை)

### குடியை நிறுத்திவிட்டார்...

ஜோதிட தத்துவ ஞானி ஐயாவுக்கு!
மித்திரன் பத்திரிகை வாயிலாக கண்டு உங்களிடம் எங்களது குறையை கூற அதற்கு பரிகாரம் செய்து கொடுத்தீர்கள். உண்மையில் எனது மைத்துனர் குடியை நிறுத்தியுள்ளார். குடும்பத்துடன் சந்தோஷமாக உள்ளார். உழைப்பிலே அதிகம் ஆர்வம் காட்டுகின்றார். எனது அப்பா நடக்க முடியாமல் கஸ்டப்பட்டுத் தான் நடப்பார். ஆனால் உங்கள் ஆசிர்வாதத்தால் தற்போது நன்றாக நடக்கின்றார். இவையனைத்தும் உங்கள் கருணையால் நடைபெற்றது. எங்களது குடும்பத்தார்கள் அனைவரும் எங்கள் உயிர் உள்ளவரை மறக்கமாட்டோம். நீங்கள் நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றோம். வாழ்க உங்கள் தெய்வீக பணி.

### என் கோயிலின் சக்தி...

பேராசிரியர் ஐயாவுக்கு!
நான் பல இடையூர்கள் சந்தித்தவன். வாழ்கையில் நொந்து போனவன். வரும் வழியில் உங்கள் ஆலயத்தை கண்டேன். ஒரு கனம் சிந்தித்து உங்கள் கோயிலில் காலடி எடுத்து வைத்தேன். எனக்கு அன்று தெளிவு பிறந்தது. எனது விடயம் இடையூர்கள் எல்லாம் 3 மணித்தியாலத்துள் பனிப்போல் விலகிவிட்டது. உங்கள் மகிமையே மகிமை. நான் ஒரு சதம் கூட கொடுக்கவில்லை. நான் கண்டிப்பாக உங்கள் துர்க்கையம்மன் ஆலயத்துக்கு உதவி செய்வேன். வாழ்க உங்கள் பணி...

(சிவா – அட்டன்)

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

என்னிடம் மத வேற்றுமை இல்லை. சகலரும் சாந்தி பரிகாரம் செய்து கொள்ளலாம்.

வெளிநாட்டவர்களுக்கு விஷேடமாக 0777-378677 உரையாடலாம்.

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்

## மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
**T.P :** 011 2342463, 011 2342464
**Fax :** 011 2344831.

33, கண்டி ரோட், நுவரெலியா.
**T.P :** 052 2222508, 077 8431761, 052 2223093, 052 2235097

கொழும்பு கொட்டாஞ்சேனை சுப்பர் மார்க்கட்க்கு வந்தால் எமது வாகனம் மூலம் உங்களை அழைத்து வந்து உங்கள் எண்ணங்கள் நிறைவேற்றப்படும்.

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.